


பாலகுமாரன்
மஞ்சக்காணி

டி.வி. Serial 'ஏன்' நிகழ்ச்சி பார்த்தேன் பாலா. அருமையாகக் கூறினீர்கள். பெண்கள் **Matching Blouse** தேடுவதிலேயே அவர்கள் வாழ்க்கை விரயமாகிறது என்பது 100% உண்மை இந்த அளவு ஈடுபாடு வேறெதிலும் இல்லை அவர்களுக்கு.

உங்கள் வீட்டில் அனைவரும் நலமா. குருஜி யோகி ராம்சுரத்குமார் அவர்களின் **Photo** ஒன்றும், உங்களின் முகவரியும் எனக்கு தேவையாயிருக்கிறது. உங்களால் அனுப்ப முடியுமானால் நான் பாக்கியம் செய்தவள் ஆவேன், சிரமத்திற்கு மன்னியுங்கள். உங்களிடமிருந்து பெறவேண்டும் என் எண்ணத்திற்கு காரணம் யோகியின் அருளும், உங்களுடைய வாழ்த்தும் சேர்த்து கிடைக்கு-மல்லவா. அதனால்தான்.

உங்களை மனிதர் என்று **address** பண்ணியது நான் மனிதர்களை தேடிக்கொண்டிருக்கிறேன். அதிர்ஷ்டவசமாய் ஒருவர் கிடைத்திருக்கிறார். அதனால்தான்.

வாழ்க வளமுடன்.

என்றும் உங்கள் எழுத்துக்குத்தலை வணங்கும்.

வாசகி
ஆர். பூமா,
**Capt, Krishnan & co,**
**18D, South Raja St.**
**Tuticorin-628001**
**Chidamparanar DT,**

# மஞ்சக்காணி

## 1

"இனி, அழகிப் போட்டிகள் இந்தியாவில் தேவையில்லை என்று வாதிட, செல்வி மாதவி அவர்களை மேடைக்கு வருமாறு மகிழ்வோடு அழைக்கிறேன்."

எல்லோருக்கும் தட்டப்பட்டதை விட, கூட்டம் வேகமாய் கைத்தட்டியது. பெண்கள் பக்கமிருந்து யாரோ விசில்கூட அடித்தார்கள்.

அழகிப் போட்டியை நடத்தலாம் என்ற அணியின் சார்பாய் பேசிய பெண்கள் கொஞ்சம் வெளிறினார்கள்.

"இவளை ஏண்டி இந்தப் பட்டிமன்றத்துக்கு கூப்பிட்டீங்க. தேவையில்லாம பேய் மாதிரி கத்துவாளே. அதுவும் இந்த டாப்பிக் வெல்லமாச்சே. இந்த பட்டிமன்றத் தலைப்பு கொடுக்கறபோதே சொன்னேன். வேணாம்...மாதவியை கூப்புடாதீங்கன்னு. அந்தம்மாவ கூப்பிடலைன்னுட்டு, இப்ப கூப்பிட்டிருக்காங்க."

"யூ ஆர் கரெக்ட். பட்டிமன்றத்தை ஸ்போர்ட்டிவ்வா எடுத்துக்க மாட்டா. எதிர் கட்சியை மரியாதையாவே பேச மாட்டா. சேலம் மாரியம்மன் கோயில்ல ஒரு பட்டிமன்றம் நடந்துச்சு. 'கற்பில் சிறந்தவள் கண்ணகியா

மாதவியா'ன்னு. புடவையை வரிஞ்சு கட்டிகினு கத்தறா. 'எனக்கு மாதவி என்ற பெயர் இருந்தாலும் நான் கண்ணகி. நீ கண்ணகி என்ற அணியில் பேசினாலும், நீ மாதவி.' கூட்டம் ஒண்ணும் புரியாம 'ஓ'ன்னு கத்துச்சு. அப்போ, தீர்மானம் பண்ணினேன். இவ இருக்கிற மேடையில நாம இனி பேசக்கூடாதுன்னு.''

''ரொம்ப பர்ஸனலா தாக்கிப் பேசறாடி.''

''நீ சொன்னா மழை பெய்யுமா. அப்படி பெய்யாட்டி நான் வேற ஏதாவது உன்னைச் சொல்லட்டுமான்னு ஒரு தடவை கேட்டா.

நல்லவேளை. நடுவர் காப்பாத்துனாரு. அவங்க சொல்லி, மழை பெய்யாட்டி விட்டுற மாட்டோம் உன்னை கேப்போம்னாரு.''

''இந்த தடவை அவ ஏதாவது பேசட்டும். அவளை நான் வேற விதமா கவனிச்சுக்கிறேன்.''

எதிரணிப் பெண்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே, நடுவரின் குரல் மறுபடி எழுந்தது.

''செல்வி மாதவி அவர்களே...உங்கள் கூர்மையான அறிவும், சூடான விவாதமும் ஊரறிந்த விஷயம். ஆயினும், சொந்த முறையில் தாக்கிப் பேசி, சலசலப்பை ஏற்படுத்தாது, அவையில் பண்பாடு காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.''

அவள் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை. அடித்து நொறுக்க கங்கணம் கட்டிக் கொண்டு மைக்கிற்கு அருகே வந்தாள். அவள் கண்கள் கூட்டத்தில் அவனைத் தேடின.

''என்னைப் பாத்தா கொஞ்சம் மென்மையாயிடற... அதனால, கண்ணுக்குத் தெரியாம, ஒரு இடத்துல



உக்காந்திருப்பேன். ஆனா, நிச்சயமா நீ பேசறதை கேட்டுகிட்டு இருப்பேன்.''

அவள் தேடலை நிறுத்திக் கொண்டாள். பேசத் துவங்கினாள்.

''அவையோருக்கும், நடுவருக்கும், அவை அமைத்தோருக்கும் என் அன்பான வணக்கம்.''

''எந்தப் பேச்சாளருக்கும் இல்லாதபடி, நான் மேடையேறும்போதே, எச்சரிக்கப் படுகிறேன். மற்றவருக்கு இல்லாதபடி என்னை மட்டும் ஏன் எச்சரிக்கிறீர்கள் என்று நடுவரை நான் கேட்க விரும்பினாலும், அவர் நடுவர் என்ற காரணத்தினால் கேட்காது, இந்த எச்சரிக்கையை, எனக்கு அளிக்கப்பட்ட பாராட்டாய் எடுத்துக் கொண்டு களம் இறங்குகின்றேன்.''

''கௌரவர்களுக்கும், பாண்டவர்களுக்கும் விளையாட்டுப் போட்டிகள் நடப்பது வழக்கம். எல்லோரைக் காட்டிலும் பீமன் பலசாலி என்பதால், துரோணாச்சாரியார், அவன் கழுத்திலே ஒரு மலர் மாலையைப் போட்டு, 'இந்த மலர் மாலை கசங்காமல் நீ சண்டையிட வேண்டும். ஒரு வேளை நீ சண்டையில் ஜெயித்து, இந்த மலர் மாலை கசங்கியிருந்தால் அல்லது அறுந்து தொங்கியிருந்தால் நீ தோற்றவனாகவே கருதப்படுவாய்' என்று சொன்னாராம்.''

''பீமன் கவலைப்படவில்லை. அரங்கத்திற்கு நடுவே ஒரு பாறையைப் போட்டு உட்கார்ந்தான். கையிலே ஒரு நீண்ட மரக்கிளையை வைத்துக் கொண்டான். அவனைத் தாக்க கௌரவர்கள் வந்தபோதெல்லாம், ஒரே ஒரு அடியில் தாக்க வந்தவரை தரையோடு படுக்க வைத்து விட்டான். பத்து நிமிஷத்தில் நூறு பேரும் அடி வாங்கி படுத்து விட்டார்கள்.''

''யுத்த விளையாட்டு சப்பென்று ஆகிவிட்டது துரோணருக்கு. 'உன் வலிவை குறைத்தால் யுத்த விளையாட்டு சுவாரஸ்யமாய் இருக்குமென்று, உன்னை மலர் மாலை நிபந்தனையோடு அனுப்பி வைத்தேன். நீயென்ன இப்படி செய்து விட்டாய்' என்று கேட்டாராம்.''

''அதற்கு பீமன் என்ன பதில் சொன்னான் தெரியுமா? 'எங்களுக்கு நடுவராய் இருக்கும் ஆச்சார்யரே...எனக்கு இப்படியொரு மலர் மாலை விதி நீங்கள் ஏற்படுத்தாமலிருந்தால், இந்த துரியோதனனை, துச்சாதனனை நான் கொஞ்சம் விளையாட அனுமதித்திருப்பேன். கொஞ்சம் தாக்க அனுமதித்திருப்பேன். அவர்களை வெறியேற்ற சற்று பின்வாங்கியிருப்பேன். நீங்கள் ஜாக்கிரதை என்று எச்சரித்தீர்கள் அல்லவா அதனால், ஒரே போடாய் ஒழித்து விட்டேன் என்று சொன்னானாம்.''

''எனவே, நடுவர் அவர்களே...அமைதியாகப் பேசு என்ற உங்கள் எச்சரிக்கை எதிர் அணிக்கு உதவப் போவதில்லை. இரண்டொரு வார்த்தைகளிலேயே அவர்களின் கதையை முடித்து விடுவதாக, நான் திட்டமிட்டிருக்கிறேன்.''

''இவ திமிரைப் பாத்தியா, கதைய முடிக்கிறாளாம். இவ கதைய முடிக்கிறதுக்கு எனக்குத் தெரியாதா. எங்கே பட்டிமன்றம் நடந்தாலும் எவனையோ கூட்டிகினு அலையறா. அவன்கூட அலையறதுக்கே பட்டிமன்றம் வர்றா.''

''சரி...அதை இந்த மேடையில எப்படி சொல்ல முடியும்.''

''மேடையில சொல்லாட்டி என்ன. பத்திரிகையில சொல்ல வைக்கிறேன்.''

''இந்த பட்டிமன்றங்களில் நான் பேச முற்பட்டதற்கு காரணம் இங்கே கிடைக்கும் பாராட்டுக்களுக்கும்,



பதக்கங்களுக்கும் அல்ல. இங்கே இவர்கள் தரும் பேச்சுக் கூலிக்கும், பயணப்படிக்குமல்ல. பொது மக்களின் ஆரவாரமான கைதட்டல்களையும் எதிர்பார்த்து அல்ல.''

''இந்த தமிழ் சமுதாயம் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும். எங்கள் தமிழ் குலப் பெண்கள் மானத்தோடு வாழ வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக இந்த மாதவி மேடையிலிருக்கிறாள். பட்டிமன்ற களம் இறங்கியிருக்கிறாள்.''

புரிந்தும் புரியாமலும் கூட்டம் கைதட்டிற்று.

''இந்த அலட்டலைப் பாரேன். விட்டா நான்தான் தமிழன்னைன்னு, தலைய விரிச்சுகிட்டு நிப்பா போலிருக்கு.''

''இந்த பட்டிமன்றத்தின் பொருள் 'அழகிப் போட்டி இந்தியாவுக்கு வேண்டுமா வேண்டாமா' என்பது. இது குறித்து பட்டிமன்றம் நடத்துவதையே நான் ஆட்சேபிக்கிறேன். இந்தியாவில் உள்ள அத்தனைப் பெண்களும், அவர்கள் ஏழைகளானாலும், பணக்காரர்களானாலும், படித்தவர்களாயிருந்தாலும், பாமரர்களாய் வாழ்ந்தாலும், எந்த ஜாதியாக இருந்தாலும், எந்த மதமாக இருந்தாலும் எல்லோரும் ஒரு குடையின் கீழ் நின்று, 'எங்கள் மண்ணுக்குள் அழகிப்போட்டி நடத்தவிட மாட்டோம்' என்று சொன்னால் அது நமக்கு ஒரு மரியாதை. நம் கலாச்சாரத்திற்கு ஒரு மதிப்பு. அதை விட்டுவிட்டு, நடத்தலாமா வேண்டாமா என்று ஒரு பட்டிமன்றம் நடத்துவதும், நடத்தலாம் என்று மூன்று பெண்கள் பேச வருவதும், கூடாது என்று வேறு சிலர் எதிர்ப்பதும் மிகப் பெரிய அட்டூழியமாய் எனக்குத் தோன்றுகிறது.''

''பெண்களுக்கு கற்பு அவசியமா என்று எவரேனும் பட்டிமன்றம் வைத்தால்கூட அவசியமில்லை என்று பேசுவதற்கு பெண்கள் வந்து விடுவார்களோ என்று பயம் வந்து விடுகிறது.''

''எங்களுக்கு சொந்த அபிப்ராயம் வேறு. ஆனால் பட்டிமன்ற சுவைக்காக எதிரணியிலே உட்கார்ந்து கொண்டிருக்கிறோம் என்று என் ஸ்நேகிதிகள் சொல்ல லாம்.''

''ஆனால், எதற்காக எதிரணியில் உட்கார்வது என்ற விவஸ்தையில்லையா...''

''நீங்கள் ஆணா பெண்ணா என்று கேட்டா, இங்குள்ள எதிர்கட்சி பெண்மணிகள், பட்டிமன்ற நடுவர் சொல்லட்டும் என்றா காத்திருப்பார்கள்.''

கூட்டம் பேயாய் சிரித்தது. எதிரணிப் பெண்கள் பல் கடித்தார்கள்.

''மாதவி. நீ அளவு தாண்டற. உன்னை சும்மா விட மாட்டேன். உன்னை சந்தி சிரிக்க விடாம போக மாட்டேன்.''

''பெண் போகப் பொருளல்ல. அழகிப்போட்டி என்கிற பெயரிலே, அரைகுறை ஆடையில் பெண்களை மேடையெற்றும் ஆபாசம் உலகில் எங்கும் நடக்கலாம். ஆனால் இங்கு நடக்காது.''

''ஐரோப்பிய தேசத்து ஆபாசப் பெண்களுக்கு அழகிப்போட்டி முக்கியமாக இருக்கலாம். எங்களுக் கில்லை.''

''என்னா...நீங்கள்லாம் அழகி இல்ல...'' அந்த நடுவர் குறுக்கிட்டு பேசினார். குலுங்க குலுங்க சிரித்தார். ஆண்கள் கூட்டம் கைதட்டிச் சிவந்தது.



மாதவி உஷ்ணமானாள்.

''உண்மை நடுவர் அவர்களே...நாங்கள் உடம்பால் அழகியில்லை. உள்ளத்தால் அழகிகள். எங்கள் அழகு உடலளவிலே இல்லை. உள்ளத்திலே இருக்கிறது.''

''நடுவர் அவர்களே. உங்க தாயை அழகிப் போட் டிக்கு தகுதியில்லாதவர் என்பதால் புறக்கணித்து விடுவீர் களா. உங்கள் தாரம் கட்டுடலாக இல்லையென்பதால் கேவலப்படுத்துவீர்களா.''

''நடுவர் அவர்களே. உங்கள் தாய் மீது கொண்ட பாசம் எனக்குத் தெரியும். உங்கள் தாரத்தின் மீது நீங்கள் கொண்டிருக்கும் மரியாதை எனக்குத் தெரியும். அவர்கள் அழகு அவர்கள் உடம்பிலே இல்லை. அவர்கள் மனதிலே இருக்கிறது. அவர்கள் உங்கள் மீது பொழியும் அன்பிலே இருக்கிறது. காட்டும் பாசத்திலே இருக்கிறது.

''பெண்ணிடம் போற்றத்தக்கது எது என்று ஒரு பட்டிமன்றம் நடந்தது. அதிலும் நீங்கள்தான் நடுவராக இருந்தீர்கள். அப்போது அந்த பட்டிமன்றத்திலே தீர்ப்பா யிற்று. 'பெண்ணிடம் போற்றத்தக்கது அவள் அழகல்ல அறிவல்ல. அவள் காட்டும் பொறுமையான குணமும் அல்ல. அவளிடம் இருக்கும் தாய்மை'' என்று சபை முடிவு சொல்லிற்று. ஆனால் நடுவர் அவர்களே...இந்த அழகிப் போட்டியில் அந்த தாய்மையைத்தான் வெட்ட வெளிச்ச மாக்கப் போகிறார்கள். எது போற்றி பாதுகாக்கப்பட வேண்டிய விஷயமோ, அதை கடை பரப்ப போகிறார்கள் எது மரியாதைக்கும், மாண்புக்கும் உரித்தன விஷயமோ அதை நேரிலும், தொலைக்காட்சியிலும் லட்சோப லட்ச மக்கள் கண்டு அசிங்கப்படப் போகிறார்கள்.''

கூட்டம் கை கொட்டியது.

''அடுத்த தலைமுறை குழந்தைகளிடம் சீருடை அணிந்து பள்ளிக்கூடம் போ என்று சொல்ல, 'முடியாது

ஜட்டி போதும்' என்று சொல்லப் போகிறார்கள். வீட்டிற்கு பட்டிமன்ற நடுவர் வந்திருக்கிறார், வந்து வணங்கி விட்டுப்போ என்றால் உடையை களைந்துவிட்டு பூனை நடை நடந்து உங்களைப் பார்த்து ஒரு வெட்டு வெட்டிவிட்டு போகப் போகிறார்கள்.''

''நீங்கள் முகத்தை மூடிக்கொள்வீர்களா அல்லது முழித்துப் பார்ப்பீர்களா என்று எனக்குத் தெரியாது.''

கூட்டம் வாய்விட்டு சிரித்தது. எகிறி எகிறி குதித்தது. நடுவரும் குலுங்க குலுங்க சிரித்தார்.

''ஆனால். நீங்கள் நிச்சயம் இதை கண்டிப்பீர்கள் என்று தெரியும். இது தவறு இப்படிச் செய்யாதே என்று அந்த குழந்தைக்கு எடுத்துச் சொல்வீர்கள் என்று தெரியும்.''

''அதுபோல, எதிரணியில்உட்கார்ந்திருக்கும்குழந்தை உள்ளம் கொண்ட இந்தப் பெண்களுக்கும் தயவுசெய்து எடுத்துச் சொல்லி, அவர்களை நல்வழிப் படுத்துங்கள். அழகிப்போட்டி ஆபாசம் என்று சொல்லி அறிவுறுத்துங்கள்.''

''ஒட்டுமொத்தமாய் குரல் கொடுக்க வேண்டிய நிலையிலிருந்து நாம் தப்பிவிடாமல், பட்டிமன்றம்நடத்தி பிரிந்து போக வேண்டாம் என்று சொல்லுங்கள்.''

''ஒருவேளை, இந்த மாதிரிப் பெண்கள் ஆதரித்தாலும், இந்தியாவில் அழகிப் போட்டி ஒருநாளும் நடைபெறாது என்று சூளுரைத்துக் கொண்டு உங்களிடமிருந்து விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.''

அரங்கம் கைதட்டலில் அதிர்ந்தது. முன் வரிசை பிரமுகர்கள்கூட எழுந்து நின்று கைதட்டினார்கள்.



அவள் மறுபடியும் அவனை ஆவலாகத் தேடினாள். அவள் நெஞ்சு காதலில் குளுகுளுத்தது. கண் விளிம்பில் மெல்லிய காமம் நிறைந்திருந்தது.

இன்னும் ஒன்று அல்லது ஒன்றரை நிமிடத்தில் அவளுக்கு பிரியமானவன் மடியில் அவள் மல்லாந்து கிடக்கப் போகிறாள் என்கிற நினைப்பில் ஒரு குதூகலம் பரவியது. அவள் மேடையைவிட்டு இறங்கினாள். பல பேர் அவளை சூழ்ந்து கொண்டார்கள்.

''நீங்க ஜென்ம பூமி ரிப்போர்ட்டர்தானே. உங்களுக்கு 'மனைமலர்' ரிப்போர்ட்டரை தெரியுமா. அவரை கூட்டிகிட்டு எங்கஹோட்டலுக்கு வாங்க. ஒரு நல்ல நியூஸ் தர்றோம்.'' எதிரணிப் பெண்கள் மேடையின்பின்புறமாய் இறங்கினார்கள். ஹோட்டலுக்கு விரைந்தார்கள். மாதவி வருவதற்குமுன் ஹோட்டலை அடைந்தார்கள்.

மாதவிக்கு என்று ஒதுக்கப்பட்ட அறையில் டியூப்லைட் எரிந்து கொண்டிருந்தது. மின்விசிறி சுழன்று கொண்டிருந்தது. கதவின் உட்பக்கம் தாழிட்டிருந்தது.

''மாதவி வந்துட்டாங்களா,'' ஹோட்டல் பையனிடம் கேட்டார்கள். அவன் இல்லையென்று சொன்னவுடன், தங்கள் அறைக்குப் போய் உட்.கார்ந்து, மாதவி அறைக் கதவு தெரியுப்படி, கதவை இடைவெளிவிட்டு மூடினார்கள். காத்திருந்தார்கள்.

''அப்ப நான் விடைபெறுகிறேன் ஐயா.'' தொலைவே மாதவியின் குரல் கேட்டது. யாரையோ கத்தரித்துவிட்டுக் கொண்டிருந்தாள்.

''ரூம் வரைக்கும் வந்துட்டுப் போகட்டுங்களா.''

''ரூமுக்கு வேணாங்க. நாம இன்னொரு முறை சந்திப்போம்.'' மாதவி வராண்டாவின் விளிம்பிலேயே எல்லோரையும் கத்தரித்துவிட்டு அறைக்கதவு தட்டினாள்.

இங்குள்ளவர்கள் அனைவரும் எழுந்து பார்த்தார்கள்.

தாழ் விலக்கும் சப்தம் கேட்டது.

சகலரும் சந்தின் வழியே எட்டிப் பார்த்தார்கள். மாதவி கதவு திறந்து உள்ளே போவது தெரிந்தது- கதவு மூடிக் கொண்டது. ஒரு ஆண் குரலும், பெண் குரலும் இணைந்த சிரிப்பொலி கேட்டது.

அவள் பாய்ந்து அவனை பற்றிக் கொண்டாள். உதடு கவ்வினாள். இடுப்பிலும், முதுகிலும் அவன் கைகள் இறுக்கி விளையாட, அவனோடு உரசி நெகிழ்ந்தாள்.

''விடுங்க...புடவை கசங்குது.'' காதோரம் கிசுகிசுத்தாள். அவன் பிடி தளர்த்தி விலகினான். அவள் வேகமாய் புடவையை அவிழ்த்து நாற்காலியில் தூக்கிப் போட்டாள்.

சேஃப்டி பின்களை அவள் தங்கச் சங்கிலியில் கோர்க்கும்வரை, அவன் காத்திருந்தான். பிறகு, அள்ளியெடுத்து படுக்கைக்கு கொண்டு போனான்.

''லைட் லைட்...ப்ளீஸ்...லைட்டை அணைச்சிடுங்க.'' அவன் மறுபடியும் இவளை தளர்த்தி நகர்ந்து மின் குமிழியை அழுத்தினான். இருட்டாக்கினான்.

வெளியே உள்ளவர்கள் லேசாய் அதிர்ந்தார்கள்.

''என்னடி பண்றா அவ...''

''என்ன பண்ணுவா. எல்லாரும் பண்றதுதான்.''

''அநியாயமாயில்ல...''

''என்ன அநியாயம், அவ ஒரு பொம்பள. அவளுக்குப் புடிச்ச ஆம்பளையோட லைட் அணைச்சிட்டு, மைக் இல்லாம பட்டிமன்றம் நடத்திட்டிருக்கா.''

''யார் ஆடியன்ஸ்''



''ரூம்ல இருக்கிற பொருட்கள்தான். நாற்காலி, மின் விசிறி, கணாடி, தண்ணீர் ஃப்ளாஸ்டிக், டம்ளர், சீப்பு சோப்பு எல்லாம்தான்.''

''இதோட, ஆறு பட்டிமன்றத்துக்கு அவன் வந்துட்டான். ஆனா, அவன் யாருன்னு யார்கிட்டயும் சொல்லவே மாட்டேங்கிறாளே...''

''சொன்னா நீ கொத்திட்டுப் போயிடுவியோன்னு பயம்.''

''நானா...இந்த நாப்பது வயசுலியா...''

''நம்ம தேசத்துல, நாப்பது வயசுக்கப்புறமும்தான் பொம்மனாட்டியோட அட்டகாசம் ஆரம்பிக்கிறதாம். போன பட்டிமன்றத்துல நடுவர் சொன்னாரு.''

''இந்த நடுவரை டிரெய்ன்ல போகும்போது வழியில் பொட்டல் காட்டுல தள்ளி விட்டுறணும்.

''உனக்கு எதுக்குடி அவ்ளோ கோபம்''

''இன்னிக்கு இவ்ளோ அட்டாக் பண்ணி பேசுறா. பைத்தியம் மாதிரி சிரிச்சு பேசிண்டிருக்கு...''

''ஒருவேளை மாதவியோட வயசும், இளமையும் காரணமா இருக்கலாம்.''

''அவ வயசுல அவளவிட, அழகா இருந்தேன். அவள விட வாளிப்பா இருந்தேன்.''

''அது நடந்து முடிந்த கதை. மாதவி இப்போது நடக்கின்ற கதை.''

''யாருடி அவன்.'

''தெரியலியே...''

''உள்ள லைட் அணைச்சுட்டு என்ன பண்றான்.''

“நாளைக்கி நிக்க வச்சு கேப்போம், பெரிய புரட்சிக்காரி மாதிரி பேசறா. பத்தினித் தெய்வம் மாதிரி கத்தறா. இதென்ன அசிங்கம்.”

“இதுல என்ன அசிங்கம். அவ ஒரு ஹோட்டலுக்கு ஒரு ஆளுன்னா மாத்தறா. எல்லா ஊருக்கும் இந்த ஒரு ஆள்தான் வர்றான்.”

“அவ பொட்டிய அவ தூக்கறதே இல்லடி. அவன்தான் தூக்கறான்.”

“ஒருவேளை அதுக்காகத்தான் கூட்டிட்டு வராளோ என்னவோ?”

“அவனை யார்கூடவும் பேச விடறதேயில்ல.”

“அடுத்த பட்டிமன்றத்துல விடாம நச்சரிச்சு அவன் யாருன்னு கண்டுபிடிச்சுடலாம்.”

“ஆள் வாட்ட சாட்டமா இருக்காண்டி.”

“நீயும்தான் வாட்டசாட்டமா இருக்கே. உனக்கு ஒரு ஆள் கிடைக்கலயே...”

“ட்ரை பண்ணினா கிடைக்காமயா போவான்.”

“ஐயோ...என் புருஷன் என்னை கொலை பண்ணிடுவான்.”

“அப்போ வேற வழியில்ல. அடுத்த ஜென்மத்திலயும் பொண்ணா பொறந்து, கடைசி வரைக்கும் கல்யாணம் பண்ணிக்காத..., நினைச்ச ஆம்பளையோட, நினைச்ச இடத்துல சந்தோஷமா சல்லாபம் பண்ணிண்டிருக்கணும்.”

“அதுவரைக்கும்...’

“இழுத்துப் போத்திகிட்டு படுங்கடி, எனக்கு தூக்கம் வருது. காலையில டிரெய்ன் பிடிச்சாதான், மத்தியானம் வீட்டுக்குப் போக முடியும்.”



ஒருவள் போர்த்திக் கொண்டு தூங்க, மற்றவர்களும் பின் வாங்கினார்கள். அவர்களுடைய அறைக் கதவை இழுத்து தாழ் போட்டுக் கொண்டார்கள்.

அவன் அவளைப் புரட்டி மேலே போட்டுக் கொண்டான். கழுத்தையும், தோள்களையும், புஜங்களையும் தடவிக் கொடுத்தான். தலைதூக்கி முகத்தை நெஞ்சில் முட்டினான். கன்னத்தை அழுந்த வைத்துக் கொண்டான். மூக்கால் முகர்ந்து, உதடு பட வருடினான்.

அவள் கிறங்கித் தவித்தாள். நிம்மதியான மரணம் போலும், தன் வயமிழந்த ஒரு சுகத்தை அனுபவித்தாள்.

ஊன்றிக் கொண்டிருந்த கைகளில் வலு குறைந்து, தளர்ந்து அவன் மீது விழுந்தாள்.

எங்கோ அடி ஆழத்தில், மனசின் வேர்ப்பகுதியில் உயிர் வாழ்ந்தாள்.

புத்தி எந்த கட்டளையும் போடவில்லை. மனசு எந்தக் கேள்வியும் கேட்கவில்லை, ‘அவன் இயங்குகிறான். நாம் அனுபவிக்கிறோம்’ என்று கிடந்தாள்.

அவன் விரல்களால் முதுகு முழுவதும் வரிவரியாய் தடவிக் கொடுத்தான். தசைகளை மெல்ல பிடித்து விட்டான். சிலசமயம் அழுந்தத் திருகினான். பிறகு, மெல்ல சரித்து, மல்லாக்கப் போட்டு, இறுக்கி அணைத்துக் கொண்டு கொஞ்சத் துவங்கினான்.

எல்லாம் பேதமையான சொற்கள். ஆரோக்கியமில்லாத வார்த்தைகள். சபையேற முடியாத தமிழ். ஆனால், சந்தோஷமாக இருந்தது.

‘சொல்லுடா...சொல்லுடா...இன்னும் சொல்லுடா’ மனசு குதித்தது. வலது கையால் அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு, அவன் உதடு தேடினாள். கௌவ்விக் கொண்டு கிடந்தாள்.

மூச்சோடு மூச்சு கலந்தது. முகத்தோடு முகம் இழைந்தது. அவன் தொடத்தொட உடம்பு தீவிரமாயிற்று.

'எச்சக்கலை நாயே...சாவடிடா என்னை... அவள் கோணலாய் உடம்பு முறுக்கி குமுறினாள். அடிவயிற்றிலிருந்து உணர்வு கிளம்பி, உடம்பு முழுவதும் பரவியது, தமிழ் இலக்கியம் சொல்லும், பசலை படர்ந்தது என்ன என்பது புரிந்தது.

அந்த உணர்வு ஒரு செலவு. ஒரு வகையில் வரவு. அந்த உணர்வு ஒருவகையில் அயர்ச்சி. இன்னொரு விதத்தில் புத்துணர்ச்சி. அந்த உணர்வு ஒரு விதத்தில் பொங்குகின்ற அழுகை. இன்னொரு விதத்தில் குதூகலம். அந்த உணர்வு ஒரு விதத்தில் காமம். வேறொரு பார்வையில் காதல், பிரியம், அன்பு நேசம், அந்த உணர்வு ஒருவிதத்தில் வாழ்க்கை. இன்னொரு விதத்தில் மரணம்.

அவன் அதிகம் துடிப்பது தெரிந்தது.

''செல்லக்குட்டி...போறும்டா...ப்ளீஸ்...'' அவனைக் கொஞ்சினாள். அவன் அசையாது ஒரு நிமிடம் படுத்துக் கிடந்தான். அவிழ்த்துவிட்ட உணர்வுகளை மடக்கி, மறுபடியும் மனக்கூட்டுக்குள் அனுப்பினான். பரிந்தெழுந்தான். லுங்கியை சரியாக கட்டிக் கொண்டான். சட்டையை மாட்டிக் கொண்டான். தலையை படிய வாரினான். தண்ணீர் குடித்தான். ஹோட்டல் டவலால் முகத்தை அழுந்த துடைத்துக்கொண்டான். வாசனையானபாடி ஸ்ப்ரேயை உடம்பு முழுவதும் விசிறிக் கொண்டான்.

கலைந்து கிடந்த அவளுக்கு அருகே சம்மணமிட்டு உட்கார்ந்தான். தலையைத் தடவி நெற்றியில் முத்தமிட்டான்.



''ஐயம் ஸாரி.'' அவன் வலக்கையை எடுத்து, கன்னத்தில் வைத்துக்கொண்டு. அவள் முணுமுணுத்தாள்.

''ச்சே...என்ன இது.''

''நான் ரொம்ப கெட்டவ இல்ல...'

''இல்ல...''

''அப்பப்போ, நான் உன்னை ஊருக்கு கூட்டிகிட்டு வந்து கொல்றேன் இல்ல...?''

''இல்லை.''

''நான் பண்றது உனக்கு வேதனையா இல்ல.''

''இல்ல...''

''பொய் சொல்லாதேடா...உனக்கு இது எவ்ளோ கஷ்டம்னு எனக்குத் தெரியும். ஒரு ஆம்பளைக்கு பின் வாங்கறது எவ்வளவு சிரமம்னு புரிஞ்சுக்க முடியுது, எனக்காக, என் ஜாக்கிரதைக்கா இதை செய்ற...''

''ஆமாம்.''

''ஏன்''

''ஐ லவ் யூ''

''போடா...ஒவ்வொரு தடவையும் நீ அமைதியாற போது எனக்கு ரொம்ப வேதனையா இருக்கு. வெட்கமாயிருக்கு. இது நியாயமேயில்லைன்னு ஒரு கூவல் வருது.''

''காதல் எது வேணுமானாலும் செய்யும்.''

''உனக்கு அவமானமா இல்ல...''

''அன்பு என்பதில் அவமானமே இல்லை. அகந்தையைக் கொண்ட காரியங்களில்தான் வெற்றி, தோல்வி, அவமானம், பஹுமானம் என்பவைகள் உண்டு.''

''எங்கியோ படிச்சிட்டு இங்க வந்து டயலாக் அடிக்கிது பார்.''

''படிப்பது பழகுவதற்கே...படித்தது பழக்கமான பிறகு. அது படித்த விஷயமில்லை. பதிந்த விஷயம்.''

''என்னைப் பிடிச்சிருக்கா.''

''ரொம்ப...''

''என்னை இன்னும் கல்யாணம் பண்ணிக்கணும்னு தோணுதா...''

''வேற எவளையும் என்னால கல்யாணம் பண்ணிக்க முடியாது.''

''அப்படியென்ன உசத்தி. நான் ஒண்ணும் வாட்ட சாட்டமாக்கூட இல்லடா.'' குனிந்து தன்னை பார்த்துக் கொண்டாள்.

''இருக்கிறது போதும்'' அவன் நிதானமாய் பதில் சொன்னான்.

''சொல்லு...என்னை ஏன் புடிச்சிருக்குன்னு சொல்லு.'' அவள் எழுந்து அவன் கழுத்தை கட்டிக் கொண்டு கொஞ்சினாள்.

''பொங்கலோ பொங்கல்'' அவன் நமுட்டுச் சிரிப்புடன் கூவினான்.

''ஆமாம், பொங்கல்தான் வெக்கம்கெட்டு கேக்கிறேன்ல்ல... அள்ளிப் போட்டேன். இதுனால பிடிச்சிருக்கு. இதுனால பிடிச்சிருக்குன்னு ஒரு லிஸ்ட் கொடேன்...ஒவ்வொண்ணா சொல்லேன்...''

''உன் படிப்பு, உன் அறிவு, உன் ஆவேசம், உன் பேச்சுத்திறமை, உன்னுடைய நேர்மை, உன்னுடைய தைரியம், உன் தார்மீகக் கோபம், உன் குடும்பம், அதுக்கு ஊர்ல இருக்கிற கௌரவம், உன் அப்பா, அவர் உன்னை வளர்த்த விதம், உன் வீடு எனக்குக் கொடுக்கிற மரியாதை, உன் முகவாய், கொஞ்சம் கோணலான மூக்கு, கட்டைத் தலைமுடி, உன் குரல், உற்றுப்பார்க்கும் உன் கண்கள். உன் இடுப்பு, ரோமமே இல்லாத உன் முழங்கால், முழங்கைகள், உன் தொப்புள் பிறகு உன்...'' அவள் அவன் வாயைப் பொத்தினாள்.



''உனக்கு பசிக்குதாடா...''

''ஆமாம்''

''எனக்கும் பசிக்குது.''

''உடுத்திகிட்டு வா...வெளியேபோய் சாப்பிடலாம்.'' அவன் அவளை தூக்கி நிறுத்தினான். அவள் அவனை இறுக்கி முத்தமிட்டு விட்டு, இடுப்பு பாவாடையோடு உடைகள் தேடினாள்.

பழைய ரவிக்கையை எடுக்கும்போது, அவன் வேண்டாமென்று தடுத்தான்.

''புதுசு போட்டுக்கோ.''

''ஏன் நைட்டுதானே...''

''வந்து, நைட்டி போட்டுக்கோ. இப்போ பளீர்னு வெளிய போ.''

''நீ...''

''நானும் நல்ல டிரஸ் போட்டுக்கப் போறேன்.'' அவன் பெட்டியிலிருந்து சலவைச் சட்டையை எடுத்து வைத்தான்.

அவர்கள் முகம் கழுவி, வாசனை தடவி, நல்ல உடுப்புகள் உடுத்திக்கொண்டு, திருமண விருந்துக்குப் போகும் பொலிவாய் வெளியே வந்தார்கள்.

எதிர் அறை இருண்டு கிடந்தது,

ஹாலில் உள்ள 'மனைமலர்' ரிப்போர்ட்டர் அவர்களைப் பார்த்ததும் வேறு பக்கம் திரும்பிக் கொண்டான்.

'அடடா...கோயம்புத்தூர்கூட இந்த ஆள் கூடதான், அந்தம்மா வந்தாங்க...அப்ப மேட்டர்தான். அவன் மனசு பரபரத்தது.

அவர்கள் ரெஸ்டாரெண்டிற்குள் நுழைந்தார்கள். அவர்கள் திரும்பி வருவதற்குள் அந்த 'மனைமலர்' ரிப்போர்ட்டர் ஏகப்பட்ட விஷயங்களை சேகரித்து விட்டான்.

அதிகாலை நாலுமணிக்கு எழுந்து, ஆறுமணி மதுரை பஸ்ஸை அவர்கள் பிடித்து, சேலம் தாண்டுகிறபோது, மனைமலரில் அவர்களைப் பற்றிய கிசுகிசு வெளியாகியிருந்தது.

எதுபற்றியும் கவலையில்லாமல் அவன் தோளில் சாய்ந்துகொண்டு, மாதவி பயணப்பட்டாள்.

## 2

**சொ**குசுப் பேருந்தில் நான்கு மணி நேரம் பயணம் வண்டி மதுரை நகருக்குள் நுழையும் போது, அவன் தட்டி எழுப்பினான். முகம் துடைத்துக் கொள்ள கைக்குட்டை கொடுத்தான்.

''ஒரு காப்பி சாப்பிட்டுட்டுப் போவோமா.'' அவள் கேட்டாள்.

''சரி. உன்னை வீடு வரைக்கும் கொண்டு வந்து விடணுமா '' பதிலுக்கு அவன் கேள்வி கேட்டான்.



''வேணாம். எங்கியாவது யாராவது பாத்துட்டு உங்க அம்மாகிட்ட சொல்லுவாங்க. அந்தக் கிழவி வீடு தேடி வந்து எதுனா கத்தும்'' அவள் அலுத்துக் கொண்டாள்

''என்னமோ அந்தக் கிழவிக்கு நீ ரொம்பப் பயப்படறா மாதிரி...'' அவன் லேசாய் குத்திக் காட்டினான்,.

''எனக்கென்ன பயம்... ஏதோ, உங்கம்மானனு ஒரு மரியாதை.''

''எங்கம்மாவுக்கு நம்மைப்பத்தி ஒண்ணும் தெரியாதுன்னு நினைச்சிகிட்டிருக்கியா...நான் பத்து நிமிஷம் காணோம்னா உங்க வீட்லதான் இருக்கேன்னு தெள்வா நம்பறா. வெளியே போயிருந்தேன்னு சொன்னா, 'மாதவி கூடவா' அப்படீன்னு கேள்வி கேக்கறா.

''என்னிக்கோ ஒரு நா எனக்கு வெறி வந்து, தெருவுல நின்னு லோகிளாஸ் மாதிரி, கிழவியை கன்னாபின்னான்னு திட்டப் போறேன்.''

''உதைபடுவே... என்னை ஏதாவது சொல்லு. பொறுத்துக்குவேன். எங்க அம்மாவை ஏதாவது சொன்னா, நானும் லோகிளாஸ் ஆயிடுவேன்.''

''அதென்ன... ஆத்தாள சொன்னா மட்டும் அப்படி பொத்துக்குது.''

''அப்படித்தான்.''

''என்னை எவ்ளோ சொல்லிருக்கா உங்க ஆத்தா.''

''இருக்கலாம். அதை பெருசாக்கக் கூடாது.''

''ஒண்ணு சொல்றேன். கிழவி கல்யாணத்துக்கு ஏதாவது !குறுக்க நின்னுது... நான் தெருவுல நின்னு பேச மாட்டேன். வீட்டுக்குள்ள புகுந்து, பனங்காய் சீவறா மாதிரி சீவிடுவேன். நான் ஜாதி மறத்தி...''

''இப்போ யாரு உன் குலம், கோத்திரம்லாம் கேட்டா. அதுக்கு உன் பேச்சு மேல அவ்ளோ, பிரியம் திடீர் திடீர்னு நீ நல்ல பொம்பளையா, கெட்ட பொம்பளையான்னு ஒரு பயம் வரும். மேடையிலியே இப்படிப் பேசறாளே, நேர்ல உன்கூட எப்படிடா பேசறான்னு கேக்கும். ரொம்ப உரத்த குரல்ல அதட்டுமா. 'போடா போடா'ன்னு கத்துமா அப்படின்னு விசாரிக்கும்.''

''நான், 'ரொம்ப நல்ல பொண்ணும்மா அது. ரொம்ப மரியாதையான பொண்ணு. ஒருநாள், வீட்டுக்கு கூட்டிட்டு வரேன். பேசேன்'னு சொல்லுவேன். 'வேணாம் வேணாம் அது மட்டும் வேணாம்'னு தடுக்கும்.''

''ஏம்மா... இத்தினி ஆவலா கேக்கற... கூட்டிகிட்டு வரட்டுமான்னா, வேணாங்கிற. நம்மூர் மீட்டிங்ல அவ பேசினா முன்னாடி போய் நின்னு 'ஹா'ன்னு கேக்கற, கிட்ட வந்தா, என்ன ஒட்டிக்கும்?' அப்படின்னு கேப்கேன்.''

''உறவுதான். வேணாம்னு சொன்ன உறவு மறுபடியும் ஒட்டிக்கும். அவங்க அப்பன் செய்த காரியத்துக்காக, நான் அடிபட்டேன். நான் அடிபட்டேங்கிறதுக்காகவே. அவங்க அப்பா அருவாளை எடுத்துக்கிட்டு வந்துட்டாரு, 'எப்போ, என் வீட்டு வாசல்ல, என் புருஷனை வெட்டறதுக்கு அருவாளை எடுத்துகிட்டு நின்னியோ, அப்ப நீ எனக்கு அண்ணன் இல்ல போ'ன்னு துரத்தியிருக்கேன்.

''அண்ணனை துரத்திடலாம். அண்ணனைக் கொண்டவளை துரத்திடலாம் அண்ணன் பெத்த பொண்ணை துரத்திட முடியுமா. ஆசைக்கும் ஆஸ்திக்கும் ஒரே பையனை வைச்சுக்கிட்டு,முறையா இருக்கிற பொண்ணை துரத்திட முடியுமா.''

''குமுதத்துல சிலீர்னு ஒரு அட்டைப்படம் போட்டான் பாரு. கண்ணு, மூக்கு, நெத்தி வாய் மோவாகட்டை



எல்லாம் சிரிக்கிறாப் போல ஒரு கலர்ப் படம் போட்டான் பாரு... அன்னிக்கு மனசோட ஒட்டிகிட்டா.''

''பட்டிமன்ற இளம் பேச்சாளர்கள்னு அவ பேர்தான் முதல்ல வருது. இருநூறு தடவை படிச்சிருக்கேன். இன்னும், அந்த புஸ்தகத்தை பெட்டியில ஜாக்கிரதையா வெச்சிருக்கேன்.''

''ஆம்பளை சரியா இல்லேன்னா அறுத்து வீசிறக் கூடாது, வீசிடுவேன் வீசிடுவேன்னு பயமுறுத்திகிட்டு இருக்கணும். அவனை அதட்டி, மிரட்டி, உருட்டி வெச்சு குடித்தனம் பண்ணனும். வயதான காலத்தில பெண் துணை எவ்ளோ அவசியம்னு, பல்வேறு விதமா ஆம்பளைக்கு காட்டணும். அவங்க அப்பா இருமறபோது, உனக்கும் இது வரும்னு சொல்லணும். அவங்க அப்பா தடுமாறுற போது, ரொம்ப சீக்கிரத்துல நீயும் தடுமாறுவேன்னு புரியவைக்கணும். ஆண் கோபப்பட, கோபப்பட நோயுறுகிறான், கிழவனாகிறான்னு பொம்பளை தான் எடுத்துச் சொல்லணும்.''

''குமுதத்துல பேட்டி கொடுத்திருந்தியாம்... புரிஞ்சு பேசறாடா புரிஞ்சு பேசறாடான்னு கொண்டாடுறா. எங்க குடும்பத்துல முதமுதலா தெளிவான பொம்பளை பொறந்துட்டான்னு சந்தோஷப்படறா.''

''எங்க அண்ணன் சின்ன வயசுலியே கம்யூனிஸ்ட். கட்சி மெம்பர்லாம் இல்ல. ஒரு அனுதாபி. லேடீஸ்கிட்ட ரொம்ப மரியாதையா இருப்பாங்க. அவங்க சொல்லிக் கொடுத்துதான், இவ நிமிர்ந்திருக்கணும்' அப்படி இப்படின்னு தானா பேசிகிட்டிருப்பாங்க.''

''இந்த மாதிரி ஒரு தெளிவு எனக்கு சின்ன வயசுல வந்திருந்தா, எனக்கு யாராவது சொல்லிக் கொடுத்திருந்தா, நானும் நல்லா வந்திருப்பேன். உன்னையும் நல்லா வளர்த்திருப்பேன். புருஷன் என்னா பண்ணினா

லும் பொறுத்துகிட்டு போகணும்னு சொன்னாங்களா... அதை ஏன்னு கேக்காத வாழ்ந்துட்டோமா... எல்லாமே தப்பாயிடுச்சு.''

''என் அடிமை புத்திக்கு நல்ல புருஷனா கிடைச்சிருந்தா, என்னைக் கொண்டாடி, தலையில வெச்சுகிட்டிருந்திருப்பான். என் துரதிருஷ்டம்... ஏதோ மாதிரி புருஷனா கிடைச்சிட்டான். நம்ம மாதவிக்காவது நல்ல புருஷனா கிடைக்கணும்.''

அவன் அம்மா பேசுவது போல் பேசிக் கொண்டே. அவளை குனிந்து பார்த்தான், அவள் கண்கள் கலங்கி, கண்ணில் நீர் வடிந்து கொண்டிருந்தது. உதடு இறுகியிருந்தது.

''ஏய்... நீ ஏன் அழறே...'' அவன் வியந்தான்.

''நான் அழுவாத யார் அழுவாங்க. ஊர் முழுக்க பெண் விடுதலையைப் பத்திப் பேசறேன். என் கண்ணெதிர்க்க என் சொந்த அத்தை பட்ட வேதனையை என்னால போக்க முடியலியே... அவ வேதனைப் படுறப்போ நான் பெரிய பொண்ணா இல்லியே...''

''சரி விடு... அம்மாவே மறந்துட்டாங்க.''

''இதெல்லாம் மறக்கிற வேதனை இல்லப்பா. தெருவுல போறவன் துப்புனா துடைச்சுட்டு விட்டுறலாம். கட்டின புருஷன் துப்பினா அது ரொம்ப பெரிய காயம். அவன் அவமானப்படுத்தினா அது ஆறவே ஆறாத ரணம். வேற பொம்பள தேடுறதும் ஆம்பள புத்தி. அவன்கிட்ட இருக்கிறது மிருக புத்தி. அதை அடையறதுக்காக அவன் பண்ற வஞ்சனை இருக்கே...அதை சகிச்சிக்கவே முடியாது ஒண்ணு சொல்லிட்டேன். நான் உசுரோட இருக்கிற போது, வேற எவளையாவது ஏறெடுத்துப் பாத்தே...உன் மூஞ்சியில வெடிகுண்டு ஒட்டி, மரத்துல கட்டி, தூரப்



போய் ரிமோட் அழுத்திருவேன். உன் தலை சிதறிப் போறதைப் பாத்துட்டுதான் அடுத்த வேலை பாப்பேன்.'' அவன் பல் கடித்தான்.

''நல்லாருக்கு கற்பனை இதை எங்கம்மாகிட்ட சொல்றேன்.''

''டேய்...சும்மா இருடா. பாவம் கிழவி. அவளை ஏன் இழுக்கிறே...பதிலுக்கு நீ ஏதாவது சொல்லு.''

''நான் உயிரோட இருந்து, நீ வேற எவனையாவது பார்த்தா, நான் என்ன பண்ணுவேன்னு சொல்லணுமா.''

''ஆமாம்.''

''நான் ஒண்ணும் பண்ண மாட்டேன்.''

''நீயே...போடா பொறாமைப் பிண்டமே...''

''நோ பொறாமை. இந்த செல்வாவின் மனைவி சந்தேகத்திற்கு அப்பாற் பட்டவள்.''

''சீசரின் மனைவி சந்தேகத்திற்குஅப்பாற்பட்டவள்னு டயலாக் சொல்லுவாங்க. அதுக்கு நிஜமான அர்த்தம் தெரியுமா உனக்கு.''

''சீசரின் மனைவி ஒல்லியா குரங்கு மூஞ்சியா இருப்பாளாம். அவளை வேற யாரும் நேசிக்கவும் மாட்டான். சீசருக்கு சந்தேகப்பட வேண்டிய அவசியமும் இல்லைன்னு சொல்லுவாங்க.''

''நான் என்ன குரங்காவா இருக்கேன்.''

''உடம்பு நல்லாருக்கு நாட்டுக் கட்டை. ஆனா, புத்தி குரங்கா இருக்குல்ல. பேச்சுல குதறிடுமோன்னு ஒரு பயமிருக்குல்ல.''

''உன்கூட எப்பவாவது சண்டை போட்டிருப் பேனாடா...எடுத்தெறிஞ்சு பேசியிருக்கேனா.''

''சீச்சீ...அதெல்லாம் இல்ல. அப்பப்போ வாடா போடாங்கிற...''

''இது அன்பு...லவ் மூணாவது ஆளுக்குத் தெரியாம நாம பேசுற பேச்சு. நமக்கு கல்யாணம் ஆகலியே தவிர, நாம ஆம்படையான் பொண்டாட்டிங்கிற உறவுல வர்ற பேச்சு. உங்க அம்மாக் கிழவி மாதிரி, வெட்கப்பட்டு அடங்கி ஒடுங்காத, 'அவங்க என்ன சொல்வாங்களோ, இவங்க என்ன சொல்வாங்களோ'ன்னு அச்சப்படாத, உன்னை புருஷனா மனசுல வரிச்சு, உன்கூட வாழ்க்கையை சந்தோஷமா அனுபவிக்கிறேன். களவு ஒழுக்கம்னு இதுக்குப் பேரு.''

''செய்றது களவு. ஆனா. அதிலேயும் ஒரு ஒழுக்கமா... அவன் கேட்டான்.

''எஸ்...யூ ஆர் கரெக்ட். இது யாருக்கும் தெரியாத ஒரு காதல். ஊருக்கு விளம்பரப்படுத்தாக ஒரு உறவு. ஒளிந்து ஒளிந்து திருட்டுத்தனமாய் கொள்கிற சந்தோஷம் அதேநேரம், இது கூடல் அல்ல. கற்பு முற்றிலும் இழந்து விடும்நிலையல்ல.கன்னித்தன்மைக்குசேதாரம்ஏற்படாது'' அவள் கண்கலங்க பேசினாள். மேலும் தொடர்ந்தாள்.

''ஆம்பளையை தொட்டுத் தழுவி, சுகமடைந்து,சுகம் கொடுத்து, பேசி, கருத்து பரிமாறி, சண்டையிட்டு உணர்வு வெளிப்படுத்தி,ஒருவரையொருவர் நன்கு அறிந்து கொண்டு பிறகுஊருக்கு வெளிப்படுத்தி,அதன் விசாரணை களை எதிர்கொண்டு, பிரிக்க முயன்றால் எதிர்த்து நின்று இங்கே குலம். கோத்திரம் சீர் செனத்தி எனவும் முக்கிய மில்லை, நாங்களே முக்கியம் என்று வலியுறுத்தி, எளிமையாய் திருமணம் நடத்தி, ஒருவரையொருவர் புரிந்து கொண்ட மதர்ப்போடு இல்லறத்தில் புக வேண் டும்.''



''சிறிது சிறிதாய் மது அருந்தி பழக்கப்பட்டவன் வெற்றியைக் கொண்டாடும் விருந்தில், எப்படி முட்ட முட்டக் குடிப்பானோ, எப்படி நாணமின்றி தன் வசமிழந்து உளறுவானோ அதுபோல, காதலித்த போது அனுபவித்த காமத்தை கட்டற்ற நிலையிலே அனுபவிக்க வேண்டும்.''

''உனக்கு இருபத்தி ஆறு வயது. எனக்கு இருபத்தி ரெண்டு வயது. நானும் நீயும் நாணமற்று, இதன் சகல எல்லைகளையும் பார்த்துவிட, வாழ்க்கையின் மிக முக்கிய மான ஈர்ப்பு சக்தியான காமம் வெகுவாகக் குறையும்.''

''இந்தப் பெண்ணிடம் அனுபவித்தது போல, வேறு எந்தப் பெண்ணிடம் அனுபவிக்கப் போவதில்லை என்று ஆண் நிறைவுபெற, இன்னொரு பெண் என்கிற பிரச்னையே வராது. இதற்கு உண்மையான காதலும் வெட்கமற்ற காமமும் அவசியம்.''

''ஆனால், நமது வாழ்க்கையில் பல பெண்களுக்கு ஏன் ஆண்களுக்குக் கூட காமம் வெட்கப்படத்தக்கதாகவும் காதலில் ஏகப்பட்ட பொய்யும் வந்து சேர்ந்து விடுகின்றன.''

''கணவனிடம் நாணமடைதல் நல்லதில்லை என்று ஆணுக்கும், பெண்ணுக்கும் சொல்லித்தரப்பட வேண்டும். காதலில் பொய் இருக்குமானால், அது வாழ்க்கையே யில்லை என்று கற்றுத்தர வேண்டும்.'' அவள் கிட்டத் தட்ட மேடைப் பேச்சாய் முணுமுணுத்தாள். இரண்டு பேரும் கைகோர்த்துமௌனமாய் உட்கார்ந்திருந்தார்கள். அவன் இடது பக்க முழங்கையை எடுத்து, தன் நெஞ்சில் இறுக்கிக் கொண்டாள். பஸ் புழுக்கத்தில் அந்த உரசலை அனுபவித்தாள். அவன் திரும்பி, அவள் தலையை கோதி விட்டாள்.

வண்டி விரைவுப் பேருந்து நிலையத்திற்குள் நுழைந்தது. அவர்கள் கீழே இறங்கினார்கள். உடையை சீர் செய்து கொண்டு, எதிரேயுள்ள ஹோட்டலுக்குப் போனார்கள்.

பசித்தது. மடமடவென்று உத்தரவிட்டார்கள். எதிரும் புதிருமாய் உட்கார்ந்தபடி செருப்பை அவிழ்த்து விட்டு, கால்களை உரசியபடி ஆவலாய் சாப்பிட்டார்கள்.

''இனி அடுத்த பட்டிமன்றம் மீட்டிங் எங்கன்னு தெரியல. இருந்தா சொல்லியனுப்பறேன். வருவியா.' அவள் கெஞ்சலாய் கேட்டாள்.

''இதைவிட வேற வேலை இருக்கா எனக்கு. நீ எப்போ கூப்பிட்டாலும் வரேன். எங்கே கூப்பிட்டாலும் வரேன்.''

''நான் இப்படி அலைக்கழிக்கிறேனே... உனக்கு அவமானமா இல்ல...''

''இல்ல...''

''ஏன்.''

''நீதான்னு முடிவு பண்ணியாச்சு. அப்புறம் கௌரவம் பார்ப்பானேன்.''

''அப்பா... இது பெரிய பாக்கியம். வெளிய ஒவ்வொருத்தியும் என்னைப் பாத்துட்டு வெந்து போறாங்க தெரியுமா.''

''தெரியும். நேத்திக்குக்கூட எதிர் ரூம்ல யார் இருந்ததுன்னு தெரியல. அவங்க நம்மளப் பத்தியேதான் பேசிட்டிருந்தாங்க. நம்ம ரூமையேதான் பாத்துகிட்டிருந்தாங்க. சொன்னா நீ கலவரப்படுவியோன்னுதான் நான் சொல்லல.''

''எனக்கு எந்தக்கலவரமும் கிடையாது. என் பயமெல்லாம் எங்கப்பாவும் உங்கம்மாவும் ஒண்ண வரணுமேன்னு



தான்... அந்தக் கிழவி ஏதாவது சொல்ல, நான் பதிலுக்கு ஏதாவது பேச, நீ வருத்தப்பட்டுருவியோனு பயம்தான்.''

''சரி... அதுக்காக எத்தனை நாள் மூடி மூடி வைக்கிறது. தொடர்ந்து எங்கம்மாகிட்ட பொய் சொல்றது எனக்குப் பிடிக்கல. கண்டுபிடிச்சிருச்சுன்னா அழும். வேற யாராவது போய் சொல்லிக் கொடுத்துட்டாங்கன்னா, 'ஊரார் சொல்லி எம் புள்ளையப் பத்தி தெரிஞ்சுக்க வேண்டியிருக்கே'ன்னு வருத்தப்படும். அது அழ ஆரம்பிச்சா, எனக்கு தாங்கல. அப்செட் ஆயிடறேன். நம்ம விஷயத்தை சொல்லிடலாமே...''

''வேணாம்.''

''ஏன்?''

''மாமியார் என்ன சொன்னாலும் நாம வாயே திறக்கக் கூடாதுன்ற பக்குவத்துக்கு நான் இன்னும் வரல. இன்னும் கொஞ்ச காலம் பொறு.

''கொஞ்ச காலம்னா எத்தினி...''

''ஒரு மாசம்.''

''ஒரு மாசம் கழிச்சு சொல்றதுக்கு இப்போ சொன்னா என்ன...?''

''காரணம் இருக்கு. வெக்கமில்லாம சொல்லட்டுமா. ஒரு வேளை, உங்க அம்மாக் கிழவிக்கு தெரிஞ்சு, அவ சத்தம் போட்டு நீ பட்டிமன்றத்துக்கு என்கூட துணையா வரலைன்னா, பட்டிமன்றத்துல என்னால பேசவே முடியாது. நான் பட்டிமன்றம் பேசறதை குறைக்கப் போறேன். நிறைய கட்டுரை எழுதப் போறேன். எனக்கு இன்னும் ஒரு மூணு பட்டிமன்றம் இருக்கு. சரியான தேதி இனிமேதான் தெரியும். அந்த மூணுத்துக்கும் நீ என்கூட வந்துரு. வழக்கம் போல என்கூட தங்கிடு அந்த மூணை

யும் சந்தோஷமா கொண்டாடிட்டு, அப்புறம் நாமளா மாட்டிக்கலாம்.

அவன் சற்று நேரம் மௌனமாக இருந்தான். சரி என்று தலையசைத்தான்.

அவர்கள் உண்டதற்கு காசு கொடுத்து விட்டு வெளியே வந்தார்கள். அவன் ஆட்டோவை நிறுத்தி, பெட்டியை ஏற்றினான். நாலு முழம் முல்லைப் பூ வாங்கிக் கொடுத்தான். அவள் உட்கார்ந்ததும் கையசைத்து விடை கொடுத்தான். அவளை சுமந்து ஆட்டோ அவள் வீட்டிற்குப் போயிற்று.

செலவா லோக்கல் பஸ் ஸ்டாண்ட் நோக்கி நடந்தான் பஸ்ஸில் உட்கார்ந்து படிப்பதற்காக 'மலைமலர்' பேப்பர் வாங்கினான், பேப்பரில் முதல் செய்தியாக அமைச்சர் மாரியப்பனின் ஆவேசப் பேச்சு இடம் பெற்றிருந்தது' செய்தியை பிறகு படித்துக் கொள்ளலாம் என்று பத்திரிகையை வேகமாக புரட்ட 'இவ்வளவுதான் உலகம். என்ற பகுதி கண்ணில் பட்டது.

'கண்ணகி பேச்சாளியின் காதல் லீலை' என்ற செய்தி சட்டென்று தென்பட்டது.

செல்வா செய்தியைப் படித்தான். உஷ்ணமானான்.

அவள் பெயரோ, அவன் பெயரோ நேரடியாக சொல்லப்படவில்லை. அவர்கள் காதலர்களென்றும் காட்டப்படவில்லை. பட்டிமன்றம் ஏற்பாடு செய்பவர் களின் செலவில் வசதியான டீலக்ஸ் ரூம் எடுத்து, இரவு தங்க வேண்டிய அவசியமில்லையென்றாலும் ஏதாவது சாக்கு சொல்லி இரவு தங்கி ஒரு ஆணுடன் ஜல்சா செய் கிறாரென்று மட்டமாக எழுதப்பட்டிருந்தது. பேச்சு மட்டும் நெருப்பாக இருந்தால் போதுமா. சொந்த வாழ்க்கையில் சுத்தம் வேண்டாமா என்று அந்த கிசுகிசு இருந்தது.



யோசிக்க கொஞ்சம் மிரட்சியாக இருந்தது. அவளு டைய வளர்ச்சியை தான் கெடுத்து விட்டோமோ என்று தோன்றியது.

வீட்டில் யாரும் கண்டிக்க மாட்டார்கள். ஏன் இப்படி என்று கேட்க மாட்டார்கள். மாமாவுக்கு செல்வா மாதவியோடு துணைக்குப் போவது நன்றாகத் தெரியும்.

"எங்கிட்ட எதுக்குடா பர்மிஷன் கேக்கற... நல்லது கெட்டது உனக்கும் தெரியும். அவளுக்கும் தெரியும் நீ துணைக்குப் போறது நல்லது தான். எனக்கு சந்தோஷம். ராத்திரி யாச்சே காணோமே...ரெண்டு நாளாச்சே காணோமேன்னு நான் கவலைப்பட மாட்டேன். நீ கூட இருக்கிறதே போறும். உங்க அம்மாவுக்கு என்னைப் பிடிக்காது."

"ஏன் அம்மாவுக்கு உங்களை பிடிக்காது போயிருச்சு" செல்வா மாமாவைக் கேட்டான்.

"உங்கம்மா ஒண்ணும் சொல்லலையா."

"இல்லை. கேட்டாலும் உனக்கு தேவையில்லைங் கிறாங்க."

"உங்கம்மாவே சொல்லாதபோது நான் எதுக்கு சொல்லணும். நீ தெரிஞ்சுக்க வேண்டிய அவசிய மில்லைன்னு அவளே முடிவு பண்ணிட்ட பிறகு, நான் ஏன் பேசணும்." மாமா விலகி விடுவார்.

அம்மா அவள் அண்ணனைப் பற்றி உயர்வாகவும் பேசியதில்லை. தாழ்த்தியும் சொன்னதில்லை. ஆனால் வேறு உறவுகள் இருந்து அவர்கள் மூலம் அப்பாவிற்கும், மாமாவிற்கும் ஆகாது என்று தெரிந்து கொண்டிருக் கிறான்.

"உங்கப்பா இப்பத்தான் மந்திரி. நீ சின்னப் பையனா இருக்கிறப்போ, மாவட்டச் செயலாளர்தான். ஆனா,

துடிப்பான பய. எந்தக் கட்சி ஆட்சியில இருந்தாலும் சரி, அவன்கிட்ட சொல்லிட்டோம்...காரியத்தை கச்சிதமா முடிச்சிக் கொடுத்துடுவான். காரியம் முடியலியா...காசை திருப்பிக் கொடுத்துருவான்.''

''இங்க ஒரு கால் சப்பட்டையான ஐயர் பொண்ணு 'எனக்கு அரசாங்க வேலை வாங்கிக் கொடுத்துடுங்க'ன்னு நாலாயிரம் ரூபா கையில கொடுத்துது. 'எனக்கு வேலை வாங்கிக் கொடுத்துருங்க. இன்னும் ஒரு ஆறாயிரம் ரூபா நகைய வித்துக் கொடுத்துடுறேன்'னு சொல்லுச்சு. இது நடந்து இருபது வருஷத்துக்கு முன்னே...''

''உங்க அப்பன் ஒரு செகண்ட் அந்தப் பெரண்ணை உத்துப் பாத்தான்.

''உன்னை சின்ன வயசுலருந்தே தெரியும். நம்ம ஊர்ல கால ஊனிகிட்டுப் போற ஒரே பொண்ணு நீதான். உன்னை பாக்கறபோதெல்லாம் மனசு கஷ்டப் பட்டிருக்கேன். உங்கிட்ட காசு வாங்க மாட்டேன். ஆறு மாசத்துக்குள்ள உன்ன ஒரு அரசாங்க வேலையில் உக்கார வைக்கிறேன். கவலைப்படாதேன்னான்.

'நான் தினம் வந்து பாக்கட்டுமா'ன்னு கேட்டுது அந்தப் பொண்ணு. 'வேணாம். நீ வராதே. நான் வரேன். தினம் கட்சி அலுவலகம் போறதுக்கு அக்ரஹாரத்து வழியாதான் போகணும். தினம் உங்க வீட்டுத் திண்ணையில உக்காந்துட்டுப் போறேன். ஒரு சொம்பு தண்ணி மட்டும் உன் கையால கொடு, அது போறும்மா.'' என்று சொல்லி அனுப்பினான்.

'நாலு மாசம் தண்ணி மட்டும் குடிச்சிகிட்டிருந்தான். வேலையப்பத்தி அந்தப் பொண்ணும் கேக்கல, அவனும் சொல்லல...ஆனா, அக்ரஹாரம் முழுக்க, அவன் எப்போ வேலை வாங்கித் தரப் போறான்னு ஆவலா காத்துகிட்டிருந்தாங்க.''



''கட்சி ரெண்டா பிரிஞ்சதும் உங்க அப்பன் வீட்டைவிட்டு வெளியவே வரல. ராவோட ராவா கார் போட்டு, ஊர்ல இருக்கற அத்தனை கட்சிக் காரனையும் விட்டுட்டு, உங்கப்பாவ மட்டும் ராமாவரம் தோட்டத்துக்கு கூட்டிட்டுப் போனாங்க. கட்சியில உங்க அப்பாவுக்கு பலத்த எதிர்ப்பு. உங்கப்பா, ஊசலாட்டமே இல்லாத, 'இவர்தான் தலைவர்'னு திடமா நின்னான். கூட இருந்தவங்க எல்லாம் விலகிட்டாங்க.

உங்கப்பாவே சொந்தக் கர்சு செலவு பண்ணி, போஸ்டர் அடிச்சு, தானே ஒட்டி, கொடியேத்தி உதைபட்டு, அப்போ ஆளுங்கட்சியா இருந்தவங்க துரோகின்னு சொல்ல, போலீஸ் கேஸ் போட்டு பயமுறுத்த, அந்த நொண்டி பொண்ணுகிட்ட தண்ணி வாங்கிக் குடிக்கிறது கூட நின்னு போச்சு. அக்ரஹாரம் முழுக்க அவனையும், அந்த நொண்டிப் பொண்ணையும் கேலி பண்ணுச்சு.''

''உன் கையால தண்ணி வாங்கிக் குடிச்ச வேளை, அவன் அநியாயத்துக்கு சீப்படறான்னு கலாட்டா பண்ணுச்சு.''

''தேர்தல் வந்தது. பிட் நோட்டீஸ் அடிக்கக்கூட துட்டுஇல்ல. அந்த நொண்டி ஐயர் பொண்ணு நாலாயிரத்தோட மறுபடி வந்துச்சு. 'இதை தேர்தல் செலவுக்கு வச்சுக்கங்க. நீங்க ஆட்சிக்கு வந்தீங்கன்னா, வேலை வாங்கிக் கொடுங்க.'ன்னு சொல்லுச்சு.''

''உங்கப்பா அந்த துட்டை கை நீட்டி வாங்கினான். தேர்தல் செலவுக்கு வெச்சுகிட்டான். வாசலை விட்டு வெளியே வந்து, அந்தப் பொண்ணு காலைத் தொட்டு கண்ணுல ஒத்திகிட்டான். 'நாங்க ஆட்சியைப் பிடிக்கிறோம். நீ அரசாங்க வேலையில உக்கார்றே...இது ரெண்டும் நடக்கும்ன்னான்.''

''செக்கச் செவேர்னு அவங்க கட்சித் தலைவர் வந்தார். அவரை வச்சுகிட்டு, உங்கப்பா அருமையா பேசினான்.

''நமக்கு படிப்பு கிடையாது, இலக்கியம் தெரியாதுன்னு, ஆளுங்கட்சிக்காரங்க பேசறாங்க. ஆனா... தலைவரே...முதமுதல்ல இந்தத் தொகுதிக்கு தேர்தல் நிதி நாலாயிரம் ரூபா தந்தது படித்த உயர் ஜாதிப் பெண். அவங்களுக்கு கால் சரியில்ல. மேடைக்கு வர முடியாது. அப்படியே வந்தாலும் வெக்கப்படுவாங்க. அதனால தலைவரே...உங்கள கெஞ்சி கேட்டுக்கறேன். நீங்க மீட்டிங் முடிஞ்சு போறபோது, அவங்க வீட்டுத் திண்ணையில உக்காந்து, அந்தப் பொண்ணு கையால ஒரு சொம்பு ஜலம் குடிச்சிட்டுப் போகணும். எனக்காக இதை நீங்க செய்யணும்'னு கெஞ்சினான்.''

''தலைவர் உடனே தொப்பிய சரி செய்துட்டு எழுந்தாரு. 'முதல்ல அவங்க வீட்டுக்கு போயிட்டு வருவோம். அப்புறம்தான் மீட்டிங்'குன்னு சொல்லிட்டாரு.''

''பன்னெண்டாயிரத்து கொச்ச ஜனங்களும், தலைவரும் மாரியப்பனும் அக்ரஹாரத்துக்குள்ள நுழைஞ்சாங்கப்பா...என்ன ஆவும் அந்த அக்ரஹாரம்... ஐயருங்கயெல்லாம் வாசக்கதவை மூடிட்டு, கொல்லைப் பக்கமா ஓடிட்டாங்க. ஒரு அம்மா தலைவர் கால்ல விழுந்து, 'நாங்க ஒரு தப்பும் பண்ணலியே' அப்படின்னாங்க. தலைவர் ஜீப்புல ஏறி நின்னாரு. ஒருத்தன்கூட சத்தம் போடக் கூடாதுன்னாரு. பக்குன்னு கூட்டம் மூச்சை அழுத்திகினு நின்னுச்சு.''

''அந்த ஐயர் பொண்ணு நொண்டி நொண்டி பசும் பால் கொண்டாந்து, தலைவர்கிட்ட ஒரு டம்ளர், மாரியப்பன்கிட்ட ஒரு டம்ளர் கொடுத்துச்சு. வீட்டு முகப்புல அவர் போட்டோ இருந்துச்சு.''



''வசதி இல்லேன்னு சொடுக்குற நேரத்துல தலைவருக்கு தெரிஞ்சு போச்சு. ஒரு மடக்கு பால் குடிச்சுட்டு டம்ளரை ஓரமா வைச்சாரு. அந்தப் பொண்ணு கைய எடுத்து, கண்ணுல ஒத்திக்கிட்டாரு.''

''இப்போ, காசு கொடுக்கற நிலைமையில நான் இல்ல. ஆனா, நீ கொடுத்த காசுக்கு வட்டியும் முதலுமா திருப்பிக் கொடுப்பேன். இது சத்தியம்னு சொன்னாரு.''

''அக்ரஹாரம் ஒட்டுப் போடுமான்னு சந்தேகம் இருந்தது போயி, மொத்த அக்ரஹாரமும் 'சபக் சபக் சபக்'குன்னு மொத்தமா குத்தித் தள்ள, ஒரு ஏழைப் பொண்ணு வீட்டுக்கு வந்தார்னு மத்த ஜாதியும் ஓட்டுப் போட...மாரியப்பன் மூணேகால் லட்சம் ஓட்டு வித்தியாசத்துல ஜெயிச்சான்.''

''நேரா தோட்டத்துக்கு போனான். 'மாரியப்பா உனக்கு என்னா மந்திரிப் பதவி வேணும்'னு கேட்டாராம் தலைவரு. எனக்கு மந்திரி பதவி கொடுக்கறது இருக்கட்டும். முதல்ல அந்த ஐயர் பொண்ணுக்கு ஒரு வேலை கொடுங்கன்னான். ஒரு பிளாஸ்டிக் கவர்ல, லட்ச ரூபா போட்டு, 'முதல்ல அந்தப் பொண்ணுகிட்ட இதை கொடுத்துட்டு வா. கடன் வச்சுக்காதே'ன்னாரு.''

''நாலாயிரம் ரூபா போட்டு, மூணு மாசத்துல ஒரு லட்ச ரூபாயா...எவனுக்கும் அந்தக் காசுல பேர்பாதியாவது தள்ளிக்கிறதுக்கு ஆசை இருக்கும்.''

''மாரியப்பன் வீட்டுக்கு துட்டை எடுத்துக்கிட்டு போயி, ஊர் பெரியவர் நாலு பேரை கூப்பிட்டு உக்கார வைச்சுட்டு, அக்ரஹாரத்து பெரிய மனுஷாளையும், அவங்க அப்பாவையும் அந்த பொண்ணையும் வரச்

சொன்னான். அவன் துட்டா ஒரு அஞ்சாயிரத்துக்கு மேல வைச்சான்.''

''இந்தாம்மா. நீ கொடுத்த நாலாயிரத்துக்கு ஆயிரம் ரூபா வட்டி போட்டு கடனை கொடுத்துட்டேன். இதுல ஒரு லட்ச ரூபா, என் தலைவர் உனக்கு கொடுத்த காசு. வேலை நிச்சயம் தரேன்னு சொல்லிருக்காரு. முதல்ல காசை வாங்கிக்க' அப்படின்னு, பதினோரு பேர் சாட்சி வச்சு, காசு கொடுத்தான்.''

''மாரியப்பனை சோதிக்கிறதுக்காகவே. நம்ம தலைவர் செஞ்சாரு. நொண்டிப் பொண்ணுக்கு துட்டு கொடுத்தா, இடையில தின்னாத இருப்பானான்னு டெஸ்ட் வெச்சாரு. மாரியப்பன் துட்டு கொடுத்த மூணாவது மணி நேரம் தலைவருக்கு தெரிஞ்சு போச்சு. கூப்பிட்டு, பொதுப்பணித்துறைய கொடுத்தாரு.''

''அன்னிக்கு ஏறின பிடிதான் ஒம்பது வருஷமாச்சு. அசைக்கக்கூட முடியலை.''

''அந்தப் பொண்ணுக்கு கலெக்டர் ஆர்டர் எடுத்துக் கொடுத்தாரு. மதுரைலயே, அந்த மூணு ஆபீசுல, நீ எந்த ஆபீஸ் வேணாலும் போலாம்னு அவங்க வீட்லேருந்து நேரா பஸ் ஆபீஸ் போற இடமா பாத்து கொடுத்தாங்க.''

''மதுரையில் இருக்கிற ஸ்கூட்டர் கம்பெனி, அந்தப் பொண்ணுக்கு மூணுசக்கர ஸ்கூட்டர் கொடுத்தது. அந்தப் பொண்ணு கில்லாடி. 'இது தலைவர் கொடுத்த வாழ்வு. வாழ்க தலைவர்'னு ஸ்கூட்டர்ல எழுதி போர்டு போட்டு கிச்சு. பங்க்சர் ஒட்டுறவன் காசு வாங்க மாட்டான். 'நோ பாக்கிங்'ல நின்னாலும் போலீஸ் பிடிக்க மாட்டான். அந்தப் பொண்ணு அவங்க ஜாதியிலே, ரொம்ப நல்லா வாழ்க்கைப்பட்டுது.''

''எதுக்கு சொல்றேன். உங்கப்பனைப் பத்தி, உங்க ஆத்தா உங்கிட்ட முன்ன பின்ன சொல்வாளா இருக்கும்



நடுவாந்திரத்துல விட்டுட்டுப் போயிட்டானேன்னு நெஞ்சு வலியில திட்டுவாளாருக்கும். அதெல்லாம். உண்மையில்லை. உங்கப்பன் நல்லவன். நல்லது செய்றான் நல்லாருக்கான்.

''அவகூட போயிட்டான், இவகூட போயிட்டான்னு சொல்றதெல்லாம் உண்மை ஆனா... அரசியல்ல இதெல்லாம் சகஜமப்பா...''

''என்னியக்கேட்டா, உங்கம்மாருக்கு தெரியலை அனுசரணை போறது. அவ உத்தமிதேன். நல்ல குடும்பத்துப் பொம்பளைதேன். ஒரு அரசியல்வாதிக்கு பொண்டாட்டியா இருக்க அவளுக்கு தெரியல. அங்கனதேன், விவகாரம் சிக்கிடுச்சு.''

''நீ பாவம் செல்வா. எங்கியோ இருக்க வேண்டியவன் இங்க இருக்க, ராணி மாதிரி இருக்க வேண்டிய உங்கம்மா, நூல் புடவை கட்டிகிட்டு' தக்காளி பொறுக்கிப் பாத்து வாங்குறா. வீட்டு முத்தத்துல உக்காந்து உளுந்து உருட்டிக் கிட்டிருக்கா.''

''மெட்ராஸ்ல முல்லைன்னும், மல்லிகைன்னும் எத்தினி பங்களா. எவ்ளோ பெரிய தோட்டம். எத்தினி காருங்க... என்ன மரியாதை... அக்தினியும் வேற எவளுக்கோ போயிருச்சு. இத்தனைக்கும் உங்கப்பா வெச்சுகிட்டிருக்கிற பொம்பள லட்சணமா இருக்காளா... நிறமாவது உண்டா ...எதுவும் இல்ல...''

''என்னா இருக்கு அவகிட்டே... அனுசரணை... ஆட்டைத் தூக்கி மாட்டுல போட்டு, மாட்டைத் தூக்கி ஆட்டையில் போட்டு... அவங்ககிட்ட ஒண்ணு பேசி, இவங்ககிட்ட ஒண்ணு பேசி, வெள்ளைக் கணக்கு கட்சிக் கணக்கு, கம்பெனி கணக்குன்னு தனித்தனியா எழுதி எவன் கிட்ட சிரிக்கணுமோ சிரிச்சு, எவன் கிட்ட அதட்டணுமோ அதட்டி... ஏகப்பட்ட அனுசரணை...''

''நீ வளர்ந்த புள்ளை. உனக்கு உலகம் தெரியும். இப்போ உலகம் தெரியாட்டி வேற எப்பவுமே தெரிஞ்சுக்க முடியாது. உங்கப்பனை ரெண்டாந் தாரமா கொண்டவ கிட்ட நம்ம மகளிரணி செந்தமிழ் செல்வி கேட்டா ளாம்.''

''நீ என்ன பண்ணி, மாரியப்பனை கவிழ்த்தே...நீ என்னா அழகுன்னு மாரியப்பன் உன்னை வெச்சுகிட்டி ருக்கார்னு மூஞ்சிக்கு நேரேயே கேட்டாளாம்.,'

''நான் அழகு இல்லடி செந்தமிழ்செல்வி. ஆனா, எவ அழகுன்னு எனக்குத் தெரியும். இதான் செந்தமிழ் செல்வியா...நல்லாருக்கே..என்னா பண்ணுது அப்படின்னு புருஷன் கேட்டா போறும். ராத்திரி நீயும் நானும் பெட்ரூம்ல உக்காந்திருக்கணும். 'வரலக்ஷ்மி தூக்கம் வரலையா'ன்னு கேக்கற வரைக்கும், நான் அங்கேதான் இருப்பேன். கேட்டதும் உன்னை விட்டுட்டு, என் ரூமுக்குப் போயிடுவேன்.''

''அடிப்பாவி...வந்தவ கவுத்துட்டா...''

''அம்சமா வந்தவ இன்னொரு அழகிய உள்ள விடுவாளா...எங்க மந்திரிக்கு வகை வகையா கிடைக்குமா. உன் கெட்டிக்காரத்தனமெல்லாம் படுக்கையோட முடிஞ்சு போயிடும். கோட்டைக்குப் போகும்போதுகூட கார்லியே போயி, யார்யார் வீட்டுக்கு வருவாங்க. எவ்ளோ எவ்ளோ தருவாங்கன்ற கணக்கை கேட்டு வாங்கி யார் கண்ணுலி யும் படாத, மூட்டைய வாங்கி, வாங்கின மூட்டைய வீட்ல வைக்காத நம்பிக்கையான நாலு இடத்துல வெச்சு, அந்த நம்பிக்கையான இடத்த, நாலு தடவை செக் பண்ணி...ஒரு நாளைக்கு நான் அஞ்சு மணி நேரம் தூங்குறதே பெரிசு தெரியுமா ...ஒரு டென்ஷன்ல உள்ளங்கை தோலு, வெடிக்க ஆரம்பிச்சிருச்சு. சொற சொறன்னு போயிருச்சி. டாக்டர் 'இதுக்கு மருந்தே கிடை யாது. தியானம் பண்ணுங்க'ன்றான்.''



மந்திரி பொண்டாட்டி தியானம் பண்ண முடியுமா. நேரம் இருக்கா. டாக்டர் விட்டு, என் நிலைமைய மந்திரி கிட்ட சொல்லச் சொன்னேன். உங்க மந்திரி என்னை கட்டிப்பிடிச்சிகினு அழுதாரு.''

''ரெண்டு தடவை ரூலிங் பார்ட்டியில இருந்துட் டோமா...எப்ப நிக்கணும் எப்ப உக்காரணும், எங்க திரும்பணும் எங்க திரும்பக் கூடாதுன்னு எல்லாம் தெரியும்.''

''என் புருஷனைவிட, இந்த ஊர் அரசியல் எனக்கு தெளிவா தெரியும். என் பேச்சைக் கேட்டா நல்லதுன்னு என் புருஷனுக்கும் தெரியும்.''

''மூத்தாளுக்கு ஏதாவது அனுப்பறதுதானே...''

''அந்த தப்புதான் செய்யக் கூடாது. 'ஐயோ பாவம்'னு நாம ஏதாவது செய்ய. இவரு பாசம் பொங்கி எதுனா ஒட்டிட்டார்னு வெச்சுக்கோ. என் பொழப்பு கேவலமாயிடும்.

அந்த பொம்பள ராசியில்ல. அவகிட்ட நீ போகா தேன்னு சொல்லி வெச்சுருக்கேன். மீறி, போயிட்டு வந்தான்னு வெச்சுக்க...பேதியாவுற மாதிரியோ, ஜுரம் வர்ற மாதிரியோ எதுனா கலந்து கொடுத்துருவேன். மூக்குறிஞ்சான் இல்ல...கரப்பான் பூச்சி மருந்து அடிச்சு வச்சுட்டேன். மந்திரிக்குத்தான் எந்நேரமும் சளியாச்சே... வந்து உறிஞ்சி, மண்டை இடிக்குது, தலை சுத்துதுன் னாரு. 'ஐயோ...மூத்தாள் மை வச்சுட்டான்னு சொல்லி, ரெண்டு லட்ச ரூபா செலவுல ஆறேழு நாள் பூஜை பண்ணி...அவ ஊர் பேர் சொன்னாலே அலறுகிற மாதிரி பண்ணிட்டேன். நான் அழகியில்லடி. செந்தமிழ் செல்வி... ஆனா, அறிவாளி...''

''இத்தினி ஏன்...இன்னிக்கு ராத்திரி மந்திரியோட. நீ இருந்து. என்னை கவுத்துட்டே...ரெண்டே நாள் உன்

அழகை இருக்கிற இடம் தெரியாம நான் பண்ணிடுவேன் நீ கவுக்கல... நல்லத்தனமா வந்து நல்லத்தனமா போயிட்டே... வரலக்ஷ்மி அக்கா மாதிரி உண்டான்னு பத்திரிகையில சொன்னேனு தெரிஞ்சுது... அப்படியே தங்கத்துல இழைச்சு அனுப்புவேன்.''

''பிறை நிலவுன்னு ஒரு பொண்ணு நம்ம வூட்டுக்கு வந்துட்டுப்போகும் குடிசையில இருந்த பொண்ணு அது. இன்னிக்கி, கோயம்பேடுல தனி பங்களாவுல இருக்கு. அவர் கூப்பிடணும்னுகூட அவசியமில்ல. நான் கூப்பிட்டாக்கூட வரும். வந்து கை, கால அழுத்திவிட்டுட்டு போகும். வேலை தெரிஞ்ச பொண்ணு.''

''ஆனாலும், அந்த மூத்தாளப் பாக்கிறபோது பாவமாதான் இருக்கு. கோயிலுக்கு சாமி கும்பிட வருவாங்க. எங்க எல்லாருக்கும் அவங்க யாருன்னு தெரியுமா. ஒதுங்கி வழி விடுவோம். முன்ன போய், கண்ணை மூடி அம்மன் கிட்ட இருந்து கும்பிட்டுட்டு, சத்தம் போடாம திரும்பிப் போயிடுவாங்க அவங்களுக்கு எதுனா செய்யணும்னு செந்தமிழ் செல்வி சொல்லிச்சாம்.''

''அவ பேர சொல்லி உள்ள வந்தே... கொன்னுடுவேன். அந்த பொம்பள மிரட்டி அனுப்பிச்சிருச்சாம். போறப்போ செந்தமிழ் செல்விக்கு அஞ்சு பவுன்ல ரெண்டு வளையல் போட்டு அனுப்பிச்சாங்களாம்.''

''எதுக்கு சொல்றேன்...உங்க அம்மாவப் பத்தி விசாரிச்சா பொம்பளைக்கு அஞ்சு பவுன் நகை. ஆனா... உங்கம்மாவுக்கு ஒண்ணும் இல்ல நீ வளர்ந்த பையன். இதெல்லாம் ஏன், என்னான்னு நீ கேட்டுக்கணும், இதைப் பத்தி நீ யோசிக்கணும்.''

''அட... உங்கம்மாதான் ஆவல... நீயும் ஆவாத போயிட்டே...இருவத்தி நாலு வயசாச்சு. எம்.ஏ. படிச்சு



என்ன புண்ணியம். உன்னால ஒரு வேலையிலயும் சேர முடியலியே... வீடியோ கடை வெச்சிருக்கேன்னு சொல்லாதே அது பொட்டப்புள்ளைங்க செய்ற வேலை. அப்படி ஒரு கடை நடத்துறதுலேஉனக்கு எந்தப் பெருமையும் இல்ல.''

''நீ எதுனா செய்து மேல வரணும். அப்பாவ அனுசரிச்சு மேல வருவியோ, அப்பா உதவி இல்லாம ஜெயிப்பியோ...அதில்ல முக்கியம். எப்படியாவது... எப்படியாவது மேல வரணும். உங்க அம்மா அந்த பத்தினி தெய்வம். அவளுக்காகவாவது நீ 'ஓகோ'ன்னு வரணும்.''

உறவே இல்லாத யாரோ விவரித்துப் பேச, செல்வா அதிர்ந்து போனான் அம்மாவிடம் உட்கார்ந்து அப்பாவைப் பற்றி, அவள் அபிப்ராயம் என்னவென்று விசாரிக்கத் துவங்கினான்.

அம்மா முற்றிலும் வேறான ஒரு கதையைச் சொன்னாள்.

# 3

''உங்கப்பாவ தப்புன்னு சொல்ல மாட்டேன் செல்வா அவரு ஒரு ஜாதி. அது ஒருவிதமான தாவரம். உலகத்துல ஒவ்வொரு மனுஷாளும் ஒரு தாவரம். எல்லா தாவரமும் உபயோகம். உலகத்துல எந்தத் தாவரமும் உபயோகப் படாமயில்ல. அதே போல எந்த மனுஷாளும் அனாவசியமா பொறக்கல.''

'அது ராவணனா இருந்தாலும் சரி. ராமனா இருந்தாலும் சரி. ஒரு அம்சம் இல்லாம, ஒரு காரியம் இல்லாம இங்கு பொறக்கல.''

''நீ எத்தனை கெட்டிக்காரனா இருந்தாலும் எவ்வளவு வலுவுள்ளவனா இருந்தாலும் இவன் இதை செய்திருக்கப்படாதுன்னுதான் ராவணன் பொறந்தான்.

''அதே மாதிரி உங்கப்பா பொறப்புக்கும் ஒருஅர்த்தம் இருக்கு.''

''உங்கப்பா கருவேலமரம். நல்ல நட்ட நடு ஏரியில ஒரு யானைக்கால் தடிமனுக்கு அகலமா, உயரமா வளர்ந்திருக்கும் கருவேல மரம். நிழல் இருக்காது, கனி இருக்காது இலை சமைக்க உதவாது. ஆனாலும் விறகா உபயோகப்படுறாப்போல, வேலியா உபயோகப்படுறாப்போல, ஏதோ ஒரு உபயோகம் இருக்கும்'.'

''நான் வாழைமரம். வேல மரத்துக்கும் வாழை மரத்துக்கும் கல்யாணம் ஆகுமா. பக்கத்துல பக்கத்துல வளர்ந்தா நல்லாருக்குமா. கருவேல மரத்துக்கு கெடுதலோ இல்லியோ, வாழை மரத்துக்கு கெடுதல். வாழ்க்கை அப்படித்தான் ஆயிப்போச்சு.''

''பஞ்சாங்கத்துல ஒவ்வொரு நட்சத்திரக்கு எதிரே மிருகம், பறவை,மரம்னு போட்டுருக்கும். அவரு சிறுத்தை நான் பசு. எப்படி சரியா வரும்.''

''அவரு மாதிரியா இருக்கிறது எனக்கு அதிசயமேயில்ல, அர்ஜுன தபஸ் மாதிரியில்ல செய்தாரு. திடீர்னு ராத்திக் முழிச்சுகினு படுக்கையில உக்காந்து, 'நான் மந்திரியாயிடுவேனா'னு கேப்பாரு.''

''கெட்டிக்கார பொம்பளையா இருந்தா, நீங்க நிச்சயமா மந்திரியாயிடுவீங்கன்னு சொல்லலாம்.''

''எனக்கு சொல்லத் தெரியாது. 'ஏன் நீங்க மந்தியாகணும்'னு கேட்டேன். விட்டாரு ஒரு அறை. புருஷென் அடிச்சதுதான் தெரிஞ்சுதே தவிர, அவன் எதுக்கு ஆசைப்படுறான்னு எனக்கு புரியவேயில்ல புருஷன் அதிகமா



ஆசைப்படுறவனா இருந்தா, பொண்டாட்டியும் அதுக்கு மேல ஆசைப்படுறவளா இருக்கணும். அப்படி இல்லாத போனா, குழப்பம் வரும்.''

''என் வீட்ல அப்படி ஒரு குழப்பம் வந்தது.''

''பேயா முன்னேறணும்னு ஆசை வந்துட்டா, பொய் புனை சுருட்டு எல்லாம் தப்பேயில்ல.''

''அப்படி சொல்ற பொய்ய சட்டுன்னு சொல்லணும். சாமர்த்தியமா சொல்லணும். சின்ன வயசிலேருந்து பொய் சொல்லி பழக்கம் இருக்கணும். ஆனா...நான் வளர்ந்த விதம் வேற. எத்தினி கஷ்டம் வந்தாலும் பொய் சொல்லக் கூடாதுன்னுதான் எனக்கு கத்துக் கொடுத்தாங்க.''

''எல்லாருக்கும் அப்படித்தான் கத்துக் கொடுப்பாங்க. ஆனா, அதெல்லாம் முக்கியமா எடுத்துக்கக் கூடாது. அப்படியே பின்பற்றி நடக்கக்கூடாது.''

''பொய் சொன்ன வாய்க்கு போஜனம் கிடைக்காதுன்னு பழமொழி ஆனா, நம்ம நிலைமை வேற. பொய் சொன்னாதான் நமக்கு சாப்பாடு கிடைக்கும்.

''ஏங்க பொய் சொல்லணும். கறிகாய் வியாபாரம் பண்ணலாம். கட்டிட காண்ட்ராக்ட் எடுக்கலாம். டீக்கடை வைக்கலாம். விவசாயம் பண்ணலாம். இந்த மாதிரி எவ்வளவோ இருக்கேன்னு சொன்னேன்.''

''இது ஒண்ணுகூட என்னால பண்ண முடியாது. இதுக்கெல்லாம் உடம்பு வளைச்சு கஷ்டப்படணும். என்னால அத்தினி கஷ்டப்பட முடியாது. புத்திய வெச்சுகிட்டு சம்பாதிக்கணும் நிறைய சம்பாதிக்கணும். ஆயிரம், ரெண்டாயிரம்லாம் போறாது. அஞ்சாயிரம் பத்தாயிரம்னு வேணும்.''

''பேசிகிட்டே இருக்கும்போது கதவைத்தட்டினாங்க. அவரு கதவு சந்து வழியா உத்துப் பாத்தாரு. யாருன்னு

கேக்க சொன்னாரு. அவங்க பேர் சொல்லல. அவரு வெளிய போயிருக்கிறதா சொல்லச் சொன்னாரு. எனக்கு சரியா பதில் சொல்ல வரல. உளறினேன். வெளிய அவர் பேர் சொன்னாங்க. டக்குன்னு கொஞ்சம் கதவு திறந்து, நீங்கதானா... வாங்க வாங்கன்னாரு.''

''எனக்கு கூசிப் போச்சு. இப்பத்தான் இல்லேன்னு சொன்னோம். இவர் டக்குன்னு கதவு திறந்து 'வாங்க வாங்க'ன்றாரே... அவங்க யாரும் அதை பெருசா எடுத்துக்கவேயில்ல.''

''அவங்க கள்ளச்சாரயம் விக்கிறவராம். போலீஸ்ல ரெய்டு ஆயிடுச்சாம். ஸ்டேஷனுக்கு வந்து, அவங்க ஆளுங்கள மீட்டுகிட்டு வரணுமாம்.''

''அவரு டக்குன்னு, 'நெஞ்சு வலிப்பா காலையில பாத்துக்கலாம்'னு சொன்னாரு.''

''நான் ஒரு மக்கு பொம்பள. நெஞ்சு வலியா... எங்கிட்ட சொல்லவே இல்லையேன்னு பதறினேன். 'ஏய்.. உள்ள போ' அப்படின்னாரு.''

''வந்தவன் சாராய வியாபாரி. கெட்டிக்காரன். 'மாரியப்பா எத்தினி காசு வேணும்'னு கேட்டாங்க. 'இப்போதைக்கு ஆயிர ரூபா கொடு பிரச்னையை முடிக்கிறத வச்சி, மிச்ச துட்டை கேக்கறேன்.''

''அவன் ஆயிர ரூபா கொடுத்தான். அதை எங்கிட்ட கொடுத்து சட்டைய மாட்டிகிட்டு வெளிய போயிட்டாரு.''

''விடிகாத்தால நாலாயிரம் ரூபாயோட வந்தாரு. 'அந்த ஆயிர ரூபா எங்கே'னு கேட்டாரு. நான் கடுகு டப்பாவுலேருந்து எடுத்துக் கொடுத்தேன்.''



''ஏன்... இதை சாமியறையில வைக்கலன்னு கத்துனாரு. சாராயக் காசை சாமியறையில வைக்கலாமா. இது எத்தினியோ குடும்பத்தை அழிச்ச காசுன்னு சொன்னேன்.

''போடீ மயிரு... அப்படின்னு 'என்னை தள்ளினாரு. சுவத்துல போய், டங்குன்னு முட்டிகிட்டேன். கையில இருந்த காசையும் அந்த ஆயிரத்தையும் சாமியறையில வச்சு கும்புட்டாரு. கண்ணை மூடி ரொம்ப நேரம் வேண்டினாரு,''

''எனக்கு ஒண்ணும் புரியல. ஒரு ஆளு இப்ப என்ன வேண்ட முடியும். நிறைய பேர் சாராயம் காய்ச்சணும். நிறைய பேர் போலீஸ்ல மாட்டணும். நான் போய் பஞ்சாயத்து பண்ணி, துட்டு சம்பாதிக்கணும்னா வேண்ட முடியும். அப்பப்ப, அவரை நான் உத்துப் பாத்தது அவருக்குப் பிடிக்கல. என் மேல எப்பவும் ஒரு கோபம் இல்ல... அலட்சியம்.''

''முழு நேர கட்சி ஊழியர் அப்படின்னு கார்டு வாங்கி, முன்னயும் பின்னயும் அலைவாரு. வெள்ளை சட்டை, வெள்ளை வேட்டி தான். நாளு கிழமைன்னு கூட பாக்கறதில்ல. தினம் அசைவம். விளக்கு வச்சவுடனே பாட்டில் எடுத்துடுவாரு. தண்ணீ போட்டா ரொம்ப சந்தோஷமாயிடுவாரு.''

''ஏண்டி என்னை புடிக்கலியானு கேப்பாரு நான் பேசாத நிப்பேன்.''

''டைவர்ஸ் பண்ணிடலாமானு கேப்பாரு. அப்பவும் பேசாத நிப்பேன்.''

''உன்னை டைவர்ஸ் பண்ண என்னால ஆகாது. அதே சமயம், உன்னோட குடித்தனம் பண்ண முடியுமான்னும் எனக்குத் தெரியலைன்னாரு. நாலு நாள்ல கட்சி ரெண்டா பிளந்தது. அவரு டகார்னு குடிக்கிறத நிறுத்து

னாரு. வீட்டுல இருந்த பாட்டிலை ஒரு ரிக்ஷாகாரன்கிட்ட கொடுத்து குடிச்சுடுறான்னுட்டாரு.”

“இனிமே குடிக்க மாட்டீங்களானு கேட்டேன். ஒரு நிலைமை வர்ற வரைக்கும் குடிக்க மாட்டேன்னாரு. நான் விவரம் தெரியாத முழிச்சிப் பார்த்தேன்.”

“கட்சி ரெண்டா உடையுது. நான் நடிகர் பக்கம் சேரப் போறேன். நடிகருக்கு தண்ணி போடுறவங்கள பிடிக்காது. அதனால, குடியை நிறுத்தப் போறேன்னாரு. இவரை இந்தப் பக்கமும் கூப்பிடுறாங்க. அந்தப் பக்கமும் கூப்பிடுறாங்க. இவர் வாயே திறக்கல.

இருட்டுற நேரத்துல வேற ஒரு ஆளோட மோட்டார் சைக்கிள்ல ஏறுனாரு. யாரு கேட்டாலும், தண்ணி போட்டு தூங்கறாரு. எழுப்புனா கத்துவாருன்னு என்னை சொல்லச் சொன்னாரு. டக்குன்னு மெட்ராஸ் கிளம்பி நடிகரைப் பாக்க போயிட்டாரு.”

“என்னை ஊர்ல, நோண்டி நோண்டி விசாரிக்கிறாங்க. நான் ‘தூங்கறார் தூங்கறார்’னு பொய் சொன்னேன். ஒருத்தன் உள்ள வந்து பாக்கணும்னான். ‘அந்த அம்மா பொய் சொல்ல மாட்டாங்க வாங்கடா’ன்னு இன்னொருத்தன் கும்பல கூட்டிகிட்டு போயிட்டான்’”

“விடிகாலையில ஆறு மணிக்கு எனக்கு போன் வருது. விழுப்புரம் தாண்டிட்டேன். இன்னும் நாலு மணி நேரத்துல வீட்டுக்கு வந்துடுவேன். அதுவரைக்கும் நான் வீட்ல இருக்கிறா மாதிரியே நடந்துக்கன்னாரு.”

“அந்த நாலு மணி நேரம் தவிச்சிட்டேன். பத்து நிமிஷத்துக்கு ஒரு ஆள் வந்து கேக்கிறான் ‘எங்க எங்க’ன்னு. நூத்துக்கணக்கா பொய் சொன்னேன். மூச்சு திணறிப் போற அளவுக்கு பொய் சொன்னேன்.”



“புல்லுக்கட்டு பொம்பள மாதிரி உடம்புல புடவை சுத்திகிட்டு, தலையில புல்லுக்கட்ட வச்சுக்கிட்டு வீட்டுக்கு வந்தாரு. குளிச்சாரு. காப்பிட்டாரு. தூங்கினாரு.”

மறுநாள் எழுந்து நடிகர் கட்சியில சேந்துட்டதா அறிக்கை கொடுத்தாரு. நேராப் பாத்து, கட்சியில சேர்ந்ததை போட்டோ காமிச்சு, ஃப்ரூ பண்ணினாரு.”

“அடி முண்டச்சி... புருஷன் வீட்ல இருக்கறதா சொல்லி ஏமாத்திட்டியேடி. வாசல்ல இருக்கற ஒருத்தன் காரித் துப்புனான், எனக்கு உடம்பே ஆடிப் போச்சு. நான் அழுதேன். ஆனா, அதைப்பத்தி அவர் கவலையேப் படல.”

“அவரு நடிகர் கட்சிக்கு போனவுடனே, தபதபன்னு ஊர்ல நிறைய பேர் கட்சி மாறிட்டாங்க. ஏகப்பட்ட ரகளை.”

“எந்த போலீஸ்காரன் துட்டு வாங்கி சல்யூட் பண்ணினானோ, அதே போலீஸ்காரன் இவரு ரவுடித்தனம் பண்ணினதா அடிச்சான்.”

“வரிவரியா முதுகுல பிரம்படி. நான் எண்ண தடவி, தவிட்டு ஒத்தடம் கொடுத்து, டாக்டர்கிட்ட ஓடிப் போய் மாத்திரை வாங்கிட்டு வந்து எல்லாம் செய்தேன். இவரு வெளிய போனா, எல்லாரும் அடிப்பானே. அதனால நானே போனேன்.”

“ஒரு ஒரு மாசம் பயந்து பயந்து வாழ்ந்தோம். அப்புறம் நடிகர் பக்கம் கூட்டமாயிடுச்சு. கட்சியில பெரிய ஆளுங்க எல்லாம் இவர் பக்கம் வந்துட்டாங்க. வாலிபமான பசங்க நிறைய பேர், நடிகர் சைடுல நின்னுட்டாங்க.”

“எப்பவும் வீட்டு வாசல்ல கூட்டம். வர்றவன் போறவனுக்கெல்லாம் டீ. வெளியூர்காரன் மூணு நாலு பேருக்கு

சாப்பாடு ராத்திரி பத்து பதினொண்ணாகும் படுக்கறதுக்கு. காலையில நாலரை மணிக்கு எழுந்திருக்கணும்,''

''தடால்னு தேர்தல் சொன்னாங்க. இவரு திகைச்சுப் போய் நின்னாரு. 'காசு இருக்கா காசு இருக்கா'ன்னு கேட்டாரு. எங்கப்பாகிட்ட பன்னெண்டாயிரம் ரூபா கடன் வாங்கி, டீயா ஊத்தினதை சொன்னேன். சைலன்டாயிட்டாரு,''

''அப்பதான் அந்த ஐயர் பொண்ணு வந்தது. இவரு துட்ட வாங்கி வச்சுகிட்டு, யோசனை பண்ணினாரு.

''எங்கிட்ட கயிறுல குண்டு, குழலு, திருமாங்கல்யமா ரெண்டே கால் சவரன் இருந்தது. அதை அவுத்துக் கொடுன்னாரு நான் அவுத்துக் கொடுத்தேன்.''

''என்னால வேலை வாங்கித் தர முடியுமான்னு தெரியல. நாங்க ஆட்சி பிடிப்போம்றது நிச்சயம் இல்ல. ஆனா, தேர்தல் செலவுக்கு எனக்கு நாலாயிரம் ரூபா வேணும். வட்டியில்லாத கடனா இதை வாங்கிக்கிறேன். நீ பயமில்லாத இருக்கறதுக்கு இந்த திருமாங்கல்யத்த அடமானமா வைக்கிறேன்னாரு. அப்போ சவரன் ரெண்டாயிர ரூபா.''

''அந்த ஐயர் பொண்ணு வேணாம்னு சொல்லிரும்னு நினைச்சேன். தாலிய திருப்பிக் கொடுத்துடும்னு நினைச்சேன். அது சரின்னு வாங்கி, இடுப்புல சொருகினு போச்சு. நாலாயிரம் ரூபா அட்வான்ஸ் கொடுத்து, நடிகர் போஸ்டர் அச்சடிச்சாரு. ஒவ்வொரு வீட்டு வாசல்லயும் இவரே ஒட்டுனாரு. அதை ஒரு பையன்கிட்ட கேமிரா வாங்கி, பிலிம் கடன் வாங்கி, இவரா ஃபோட்டோ எடுத்து 'இதோ இப்ப துட்டு கொடுத்துடுறேன்'னு டெவலப் பண்ணி, மறுபடியும் எவன் வண்டியிலியோ மெட்ராசுக்கு போய், நடிகர்கிட்ட காண்பிச்சுட்டு வந்தாரு. வெறுமனே வரல. இரண்டு உரம் பை நிறைய



துட்டு எடுத்தாந்தாரு ஒரு உரப் பைய பரண்ல போட்டாரு. இன்னொரு பைய பீரோவுல வச்சாரு.''

''அப்பத்தான் அந்த குண்டு பொம்பள வந்து சேர்ந்தா.''

''நடிகர் நம்ம வீட்டுக்கு வந்தாலும் வரலாம். விருந்து பண்ணி வையின்னு நானூறு ரூபா கொடுத்தாரு. ஆனா, யாருமே வரல. நடிகர் ஐயர் பொண்ணு வீட்டுக்குப் போய், பால் சாப்பிட்டுட்டு அப்படியே டிரெய்ன் ஏறிட்டாரு. ராத்திரி இவரும் வரல. விடிகாலையில கூட்டு, பொரியல், பச்சடி, பழரசம், சோறு, குழம்பு, ரசம் எல்லாத்தையும் கலந்து பசு மாட்டுக்கு போட்டேன்.''

''காலங் காலையில சிவன் கோயில் யானை வந்து நின்னுது. அதுக்கு ரெண்டு சீப்பு பழம், ஆப்பிள் எல்லாம் கொடுத்தேன்.

''அவரு கட்சி அலுவலகத்திலயே தங்கிட்டாரு.''

''தேர்தல்ல ஜெயிச்சப்போ வீட்டுக்கு வந்தாரு. ஹால்ல உக்காந்தாரு சாமி கும்பிட்டாரு. பொட்டியில துணி அடுக்கினு மெட்ராஸ் போனவர்தான்...அப்புறம் பாக்கல.''

''நடுவுல ஒரு தடவை வந்து, அந்த குண்டு பொம்பள வீட்டுல ரகசியக்கூட்டம் போட்டதா சொன்னாங்க.''

''இந்த குண்டு பொம்பளதான் சொல்லிக்கொடுத்திருக்கா. நடிகர்கிட்ட மந்திரிப்பதவி கேக்காதீங்க. கேக்கிறவங்கள அவருக்கு பிடிக்காது. கேக்காதவங்களை அவருக்கு ரொம்ப பிடிக்கும்.''

''என்ன மாரியப்பா. எந்த இலாகா எடுத்துக்கிறேன்னு கேப்பாரு. எந்த இலாகாவும் வேணாம். உங்க வீட்ல வேலைக்காரனா இருக்கேன்னு சொல்லுங்கன்னு அவ சொல்லிக் கொடுத்ததுதான்,''

''நடிகர்கிட்ட அப்படியே சொல்லிட்டு இங்க வந்து புலம்புறாரு. எனக்கு மட்டும் மந்திரி பதவி கிடைக்கல... உன்னை, குத்தி கொலை பண்ணிட்டுதான் மறுவேல' அப்படின்னு அந்த வரலக்ஷ்மிகிட்ட கத்துனாராம். பொத்து பொத்துன்னு முதுகில அடிச்சு, எத்திவிட்டாராம். தலைமுடியைப் பிடிச்சு தள்ளிவிட்டாராம். இத்தினியும் அந்த வரலக்ஷ்மியோட ஆம்படையான் பாத்துகிட்டே இருந்தானாம்.''

''அந்த பொம்பள அசரவே இல்லியாம்.''

''நீ மந்திரி ஆயிட்டா என்ன தருவேன்னு கேட்டாளாம். நான் மந்திரியாயிட்டா எனக்கு எல்லாமே நீதாண்டின்னு கட்டிப்பிடிச்சு, முத்தம் கொடுத்தாராம். அதையும் அவ ஆம்படையான் பாத்துட்டுதான் இருந்தானாம்.''

''இந்த ரூம்ல இருக்கிற பத்துபேரும் சாட்சி. இவரு மந்திரியாவுறாரு. என் கணக்கு தப்பாது. இன்னும் பத்து நாளைக்குள்ள இவரு மந்திரியா வரலைன்னா நான் மொட்டை அடிச்சி, மூஞ்சியில கரும்புள்ளி செம்புள்ளி குத்தி டாப் இல்லாத சைக்கிள் ரிக்ஷாவுல, ஊர்கோலம் வர்றேன். அப்படின்னு சபதம் செஞ்சுதாம்.''

''அப்படி மந்திரியாயிட்டா, இவர் சொன்னாப்ல, இவருக்கு எல்லாமே நானாத்தான் இருக்கணும்.''

''எங்க வீட்டுக்காரரு மந்திரி ஆயிட்டாரு, அவ. அவருக்கு எல்லாமுமா ஆயிட்டா. என்னை வுட்டுட்டாரு, அப்போ: உனக்கு வயசு பத்து. அப்பாவ கண்டா பயந்து பயந்து ஓடுவே...சமையல் ரூம்லதான் படிப்ப...''

''அவரு என்னை விட்டுட்டு, குண்டு பொம்பளை கிட்ய போனதுல, ஆச்சரியமேயில்ல...ஆனா எப்படி புள்ளைய வுட்டுட்டுப் போனாருன்னுதான் தெரியல.''

''அப்பனையும், புள்ளையையும் பிரிக்கிற அளவுக்கு கெட்டிக்காரியா.''



''டக்குன்னு ஒருநாள் ஆள் அனுப்பிச்சு, வீடு ரிப்பேர் பண்ணி, ஓடு மாத்தி வாசல்ல பேர் பலகை போட்டு, பளிச்சின்னு வச்சாங்க.''

''எங்க போனாலும் அவளையும் கூட்டிகிட்டு போறதா சொன்னாங்க. ஊருக்கு வந்தப்போகூட, கொஞ்ச நேரம் ஹால்ல உக்காந்துட்டு போயிட்டாங்க.''

''நாலு வருஷம் மந்திரியான பிறகு திடீர்னு ஒருநாள் எங்கிட்ட நம்மூர் ஆளுங்கள அனுப்பி, டைவர்ஸ் வேணும்னு கேட்டாங்க. நான் மாட்டேன்ன போது, போன்ல கூப்ட்டு திட்டுனாங்க.''

''நான் எங்கப்பாவுக்கு தகவல் அனுப்பிச்சேன்.''

''உனக்கு டி. பின்னு அவன் சர்டிபிகேட் வெச்சிருக்காம்மா. இது பொய்தான். அவசியம் ஏற்பட்டா, அவளுக்குள்ள நிஜமாவே டி. பி. மருந்து ஏத்திட முடியும். உங்க பொண்ணுக்கு பொய் சொல்ல வராது. நாகரிகம் போறாது. பேச்சு சாமபத்தியம் கிடையாது: என்கூட அவ இருந்தா, அவளுக்கும் கஷ்டம். எனக்கும் தொந்தரவு. என்ன வேணுமோ அதைக் கேட்டு வாங்கிக்கங்கன்னு சொன்னாராம்.''

''இந்த வீடு, தொண்ணூறாயிர ருபா பணம் கொடுத்தனுப்பிச்சு, கையெழுத்து வாங்கி, மதுரை கோர்ட்டுல ஞாயித்துக்கிழமை திறந்து, ரகசியமா டைவர்ஸ் பண்ணிகிட்டோம்.''

''கல்யாணம்தான் ரகசியமா பண்ணிப்பாங்க. கேள்விப்பட்டிருக்கேன். டைவர்ஸ் ரகசியமா பண்ணினது. இதுதான் முதல் தடவைன்னு நீதிபதியே சொன்னாரு.''

''உங்களுக்கு டி, பி. இருக்காம்மான்னு நீதிபதி கேட்டாரு. ஆமான்னுட்டேன்.''

''கையெழுத்து போட்டுட்டு நானும் மந்திரியும் கோர்ட்டு வராண்டாவுல நின்னோம். இப்போ...என் புருஷன் இல்லியே...மந்திரிதானே... நான் தலைப்பு போத்திகிட்டு பேசாத நின்னேன்-''

''நம்ம புள்ளைக்கு நான் ஏதாவது பண்றேன். கவலைப்படாதே. அவசியமாச்சுனா இன்னொரு கல்யாணம் பண்ணிக்கோ நீன்னு சொன்னாரு. நான் அதுக்கு பதில் சொல்லல.''

''இன்னொரு கல்யாணம் பண்ணிக்குவியான்னு கேட்டாரு. மாட்டேன்னு சொன்னேன். ரொம்ப சந்தோஷமாயிட்டாரு. கொஞ்ச நேரம் அழுதாரு.''

''தோள் பையிலேருந்து ஒரு லட்ச ரூபா எடுத்து, 'இந்தா வச்சுக்க'ன்னு குடுத்தாரு. மறுநாளே, குண்டு பொம்பளைய கல்யாணம் பண்ணிகிட்டாராம். அதுவும் ரகசியமா நடந்துதாம்.''

''எனக்கு இப்பக்கூட ஒண்ணும் புரியல. ஆனா... கட்சிக்காரங்க வந்து சொல்லுவாங்க. தினம் ஒரு சின்னப் பொண்ணு ஏற்பாடு பண்ணுவாளாம். நாளைக்கு அரசியல்ல என்ன நடக்கும்னு, குறி சொல்றாப்போல சொல்லுவாளாம். ஒரு வருஷத்துல மூணு கோடி ரூபாய் சொத்து சேர்த்தாளாம். அவ இல்லன்னா, அவர் இல்லியாம். அதிகாரிங்கல்லாம் அவகிட்ட பயப்படுவாங்களாம்.''

''அவர தூங்க விட்டுட்டு, ராத்திரி முழுக்க, அவ ஃபைல் பாப்பாளாம். நாலு மணிக்கு படுத்து, காலையில ஏழு மணிக்கு எழுந்திருந்து, எட்டு மணிக்கு ரெடியாயிடுவாளாம்.''

''ஒரு சமயம் நடிகருக்கே சென்ட்ரல் கவர்ன்மெண்ட் பிரச்னைல என்ன பண்ணனும்னு ஆலோசனை சொன்னாளாம்.''



''அதெப்படி உனக்கு இதெல்லாம் தெரியும்னு அவர் கேட்டப்போ, நான் தினம் ஆறு இங்கிலீஷ் பேப்பர் படிக்கிறேன்னு விபரம் சொன்னாளாம்.'

''என்னால முடியுமா. சுட்டுப் போட்டாலும் எனக்கு இது வராது. ஒதுங்கினதுதானே மரியாதை...அதுதானே நிம்மதி...'' அம்மா பேசிவிட்டு, புடவை தலைப்பால் முகத்தை மூடிக் கொண்டாள்.

வாழ்க்கையில் வெற்றியை பிடுங்கித் தின்ன போட்டியிடுகிற மனிதர்களைப் பார்த்து செல்வா திகைத்துப் போய் நின்றான்.

அவனுக்கு அப்பா மீது வெறுப்பு வரவில்லை. அம்மா மீது பரிதாபம் வரவில்லை. வரலக்ஷ்மி என்ற அந்த குண்டு பெண்மணியின் மனோநிலைமை பற்றிதான் மிகப் பெரிய கேள்வி வந்தது. இப்படியொரு வாழ்க்கை வாழ, நீ எங்கு தயாரானாய். எப்போது தயாரானாய்.

எப்பேர்ப்பட்ட போராடும் வெறி இருந்தால், உச்சிக்கு வரவேண்டுமென்ற பேராசை இருந்தால் இந்த ஆட்டம் உனக்கு ஆடத் தோன்றியிருக்கும். நாம் வாழ்க்கையில் ஜெயிக்க அவமானமேயில்லாத அரசியல்தான். அவமானம் பற்றிய அக்கறையில்லாத அரசியல்தான் சரியான வழி என்று உனக்கு எப்படித் தெரிந்தது.

கைக்கு அடக்கமான ஒரு பொறுக்கியை முன்னே அனுப்பி. சதுரங்கமாடும் சாமர்த்தியம் யாருக்கு வரும். அவரை டம்மியான ஆளாய் மாற்றி, அல்சேஷியன் நாய்க்கு தீனிபோடுவது போல, அன்றாடம் பெண்களை அனுப்பி அவன் ஆட்டம் போட, நீ கோப்புகள் பார்ப்பதென்றால் நீ மிகமிகத் தெளிவானவள் என்று அர்த்தம்.

உனக்குள் அவமானம் இருக்காதா. இருக்கும். ஆனால், விழுங்கிக் கொள்கிறாய். நீ சுறுசுறுப்பாய் ஆண் முகமாய்

இருப்பதை இடித்துக் காட்டியிருப்பார்கள். நீ தனியே உட்கார்ந்து அழுதிருப்பாய். ஆத்திரப்பட்டிருப்பாய். அதனால்தான், உன் புருஷன் இருக்கும்போதே இன்னொருவனிடம் நீ அடிவாங்கினாய். அதனால்தான் உன் புருஷன் இருக்கும்போதே இன்னொருவனால் முத்தமிடப் பட்டாய்.

'வீட்டிலுள்ள ஆண்களை சமாளித்து' சமாளித்து, அரசியல் எதிரிகளை. சமாளிக்கும் கலை உனக்கு கைவந்து விட்டது. எவனுக்கோ பணத்தாசை காட்டி, எவனுக்கோ பெண்ணாசை காட்டி; ஊர் முழுவதும் மண்டியிடவைக்கும் உன் ஆசையை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறாய்.

நீ பாவம். யாராலும் உணரப்பட முடியாத பரிதாபம். உன்னை எங்கேனும் பார்த்தால் 'நலமா' என்று சொல்லி, கைகூப்ப வேண்டும்.

ஆனால், இவன் யோசிப்பிற்கு மாதவி மிகச் சரியாய் பதில் கொடுத்தாள்.

''அவ ஒரு கேவலமான பொம்பள, அவளப்போய் எதுக்காக 'ஆஹா ஓஹோ'ங்ற நீ...ஆத்தா ஒரு விதமான பைத்தியம்னா, நீ ஒரு விதமான பைத்தியம். எந்த கொள்கையும், எந்த லட்சியமும் இல்லாத பொம்பள. இனத் துரோகி. தனக்கு காரியமாகணும்னா, ஒரு பொம்பள வாழ்க்கைய, அவ கூசாம சீரழிப்பா. தான் தப்பிச்சுக் கணும்னா தன் குழந்தையக் கொல்லுவா.''

''அவ முகம் குரூரமில்ல. மனசு குரூரம். மனசு கேவலத்தினாலதான் முகம் மாறிப் போயிடுச்சு. அவளால யாரையும் சந்தோஷப்படுத்த முடியாது, எந்த விதமாவும் உதவ முடியாது.''

''உங்கப்பா மந்திரியா இருக்கிற வரைக்கும்தான் அவருக்கு மரியாதை.உங்கப்பா மந்திரியா இல்லாத அடுத்த



நிமிஷம் அவமுகம் வேற. உங்கப்பா அதை அனுபவிக்கத் தான் போறாரு.''

''உங்கம்மா பண்ணின கெட்டிக்கார விஷயம் உங்கப்பாவ கழட்டி விட்டது தான். நிம்மதியா தூங்கறாங்க பாரு...ஆனா, ஒரு விஷயம், உடனே டைவர்ஸுக்கு ஒத்துக்காத ஒரு அஞ்சு லட்சம் வாங்கின உடனே ஒத்துக்கிட்டிருக்கலாம். விளைநிலமா, தென்னந்தோப்பா ஏதாவது வாங்கிப்போட்டுருக்கலாம்.இப்போ வெறுமனே வீடும், வீடியோக் கடையும் தானே இருக்கு.''

''இது இப்போதைக்கு போறும்.''

''பின்னால, போறாதில்ல...பேசாம என்னை கல்யாணம் பண்ணிக்க...''மாதவி கண் சிமிட்டினாள்.

''உன்னை கல்யாணம் பண்ணிக்கிட்டா என்னாவும்.'' அவன் வியப்போடு கேட்டான்.

''ரெண்டு பேரும் டக்கரா ஒரு டியூஷன் சென்டர் ஆரம்பிக்கலாம். என்ட்ரன்ஸ் எக்ஸாமுக்கு கோச் பண்ணலாம். மெட்ராஸ்ல இந்த விஷயத்துக்கு பெரிய மரியாதை. மூணு மாசத்துக்கு டியூஷன். ஒரு மாசத்துக்கு ஆயிரம் ரூபா சம்பளம்னாலும் தயங்காம தர்றான்.''

''வேணாம்...எனக்கு பிடிக்கலை.''

''ஏன்...''

''வீடு முழுக்க 'ஜேஜே'ன்னு பசங்க கூட்டம் இருக்கும் அம்மா டென்ஷனாயிடுவாங்க. நான் டிஷ் ஆன்டெனா போட்டு சாட்டிலைட் டி.வி.கனெக்ஷன் கொடுக்கலாம்னு இருக்கேன்.''

''எனக்கு இது பிடிக்கல...ஆம்பளையா லட்சணமா நல்ல வியாபாரமா நீ செய்யணும். மாசம் எழுபத்தஞ்சு ரூபான்னு ஒவ்வொரு வீட்டுக்குமா போய் வாங்கிட்டு

வர்றது மரியாதையே இல்ல. அது சம்பாத்தியமே இல்ல. ஏதோ மேல் வரும்படியா வெச்சுக்கலாமே தவிர, இதெல்லாம் நிறைவான வேலையில்ல...''

''அப்படின்னா...எங்க அப்பா மாதிரி அரசியல்ல புகுந்து எம்.எல்.ஏ.ஆகணும்.

''நீயா...எம்.எல்.ஏ.வா...ஒரு நாளும் ஆக முடியாது'' அவள் பழிப்பு காட்டினாள்.

அவன் உள்ளுக்குள் குமைந்தான், காதலிக்கிற பெண் கேலி செய்வதான ஒரு தாய் தந்தையர் கிடைத்ததற்காக நொந்து கொண்டான். வளரும் வயதில் வலிவேற்ற அப்பா என்கிற ஆண் இல்லாது போனதற்காக வருத்தப்பட்டான் மௌனமானான்.

அப்பா சரியில்லாதது அம்மாவை மட்டும் பாதிக்க வில்லை. இவனையும் தாக்கியிருக்கிறது. இவன் எதிர் காலத்தை கேள்விக்குறியாக்கியிருக்கிறது. நஞ்சையும் புஞ்சையும் இருந்தென்ன...தோப்பும் துரவும் அவன் பெயருக்கு மாறும் என்று நினைத்த தருணத்தில் அந்த வரலக்ஷ்மி அப்படியே திருப்பிக் கொண்டு போனாள்.

அப்பா மந்திரியாகி, அவள்தான் அப்பாவிற்கு எல்லாம் என்றாகி, அம்மாவை ஒதுக்கி வைத்து நான்கு வருடங்கள் கழித்து ஒருநாள் வீட்டு வாசலுக்கு அப்பா வந்து இறங்கினார். திண்ணையில் வந்து உட்கார்ந்தார்.

''சட்டப் பிரகாரம் பிரிஞ்சிட்டோம். இருந்தாலும் புள்ளையப் பாக்காம முடியல. அதையும் தவிர, சில சொத்து விவகாரங்கள நாம பைசல் பண்ணிக்கலாம். அவன் நாளைக்கு உரிமை கொண்டாடாதா இருக்கிற துக்கு அவன் சார்பா நீ காசு வாங்கிட்டதா கையெழுத்து போடணும்.''

''தோப்போ,வயலோ அவனுக்கு சொந்தமில்லைன்னு தெளிவுபடுத்திடணும்.''



''எதுக்கு கையெழுத்து. நாங்க எதுவும் எபபவும் கேக்க மாட்டோம்''

''அதைத்தான் நானும் சொன்னேன். ஆனா, வக்கீலு கேக்க மாட்டேன்னுட்டாரு. பையன் படிப்புக்காகவும், வளர்ச்சிக்காகவும், ஒரு தொகை வாங்கினதா எழுதி உன் கையெழுத்து போட்டு வாங்கிட்டு வரச் சொல்றாங்க. ஸ்டாம்ப் பேப்பர்ல இருக்கணுமாம். லோக்கல் மேஜிஸ்திரேட் மத்தியஸ்தம் பண்ணிருக்கணுமாம்.''

அம்மா ஒரே வார்த்தையில் சரியென்று சொன்னாள்.

அப்பா திகைத்துப் போனார்.

மாமா குதித்தார்.

''அப்படி ஒத்துக்காதே..அப்படி ஒத்துக்காதே...அவன் ஏகமா சம்பாதிக்கிறான் எதுனா கேளு. ரெண்டு லட்சம் மூணு லட்சம்லாம் இப்ப அவனுக்கு பாக்கெட் மணி மாதிரி எதுனா கேளு.''

''அந்தக் காசு நமக்கு எதுக்கு. உழைச்ச காசா அது... ஊரை அடிச்சு உலையில போட்ட காசு. அந்தக் காசு நமக்கு வந்தா நாம நல்லாருக்க மாட்டோம். என் புள்ளைக்கு அந்தக் காசு வேண்டவே வேண்டாம்.''

அம்மா யார் பேச்சையும் கேட்கத் தயாராக இல்லை.

பத்திரம் வந்தது. ரூபாய்...பெற்றுக் கொண்டு எல்லா சொத்துக்களிலிருந்தும் நானும் என் பிள்ளையும் அனுபோக பாத்தியதையை விலக்கிக் கொள்கிறோம்' என்று தமிழில் எழுதப்பட்டிருந்தது.

அம்மா கையெழுத்து போட்டாள்.

''எத்தினின்னு எழுதவே இல்லையேம்மா.'' மாமா கத்தினார்.

''எனக்கு எதுவும் தேவையில்ல...''

''அவனுக்கு தேவை. அவன் வளர்ந்தா அவன் வாழ்க்கைக்குத் தேவை.''

''கடவுள் கொடுத்த புத்தியிருக்கு ஊனமில்லாத உடம்பிருக்கு. கஷ்டப்பட்டு உழைக்கிறதுக்கு மனசு இருக்கு. வழிகாட்ட, உன்னை மாதிரி ஒரு நல்ல தாய் மாமன் இருக்கான். அவன் சம்பாதிக்கட்டும். அப்பன் வேணாம்னு அறுத்துட்டான். அவன் காசு மட்டும் வேணுமா. அப்படித்தான் வேணும்னா, அவன் என்னைய வித்து சம்பாதிக்கட்டும். ஏன் மூஞ்சிய சுளிக்கிறீங்க... ஆத்தாள வச்சு யாராவது சம்பாதிப்பானா...அது எவ்ளோ அசிங்கமோ. அவ்ளோ அசிங்கம் அவங்க அப்பன் காசு.''

''வேணா, அவங்க அப்பன்கிட்ட ஒண்ணே ஒண்ணு சொல்லிட்டு வா. இத்தோட போதும். வேற எந்தக் காரணத்துக்காகவும் இனி படியேற வேண்டாம்னு பக்குவமா சொல்லிட்டு வா. அந்த ஆள் உக்காந்த நாற்காலிய யாருக்குனா குடுத்துட்டு, எனக்கு புதுசா ஒரு நாற்காலி வாங்கிட்டு வா.''

''அவ்ளோ வெறுப்பா.'' பிள்ளை திகைத்துப் போனான். அம்மாவை பின்பற்றி அப்பாவிடமிருந்து முற்றிலுமாய் அந்நியமானான்.

ஆனால், மாமா விடவில்லை.

''பிளாங்க்-செக்மாதிரி,காசுபோடாத அக்ரிமென்ட்ல கையெழுத்து போட அனுப்பிச்சிருக்கியே...நீயெல்லாம் ஒரு மனுஷனா...பையன் மைனரு, பொம்பளைக்கு மன நிலை சரியில்லை. நீ சவுக்குல அடிச்சி, கையெழுத்த வாங்கிட்டேனு, ஹைகோர்ட்டுக்கு ஒரு பெட்டிஷன் எழுதிப் போட்டுறுவேன். காப்பியை சீல் பண்ணி கையில வெச்சுருவேன். பையன் மேஜராயிட்ட பிறகு கதறக்கதற துட்டு வாங்குவேன்.'' உரக்க கத்திவிட்டு, உடன் இருப்



போர் சமாதானம் செய்ய, ஒருநாள் முழுவதும் பேசிப் பேசி இரண்டே முக்கால் லட்ச ரூபாய் வாங்கி வந்தார். 'இதற்கு நானும் ஒத்துக் கொள்கிறேன்' என்று சாட்சி கையெழுத்து போட்டு விட்டு வந்தார்.

காசு வாங்கினதை அம்மாவிடம் சொல்லவில்லை. அம்மாவுக்கு அவள் அப்பா எழுதிய மேடான தரிசு நிலம் ஒன்று மதுரையிலிருந்து ராமேஸ்வரம் போகும் சாலையிலிருந்தது.

வெறும் பாறைகள் முளைத்த பொட்டல் நிலம் பூச்செடிகள் கூட முளைக்காத இடம்.

சைவ நாயன்மார்களில் ஒருவரான மாணிக்கவாசகர் பிறந்த வாதவூருக்கு அருகே உள்ள நிலம். அம்மாவின் அப்பாவிற்கு அது சொந்த ஊர். மானம் பார்த்த பூமி வறுமைக் கோட்டுக்கு கீழே வாழுகின்ற மக்கள் எப்போதாவது ஒருமுறை அந்த ஊர் பக்கம் ஒரு முறை பஸ்ஸில் போய் வந்தார்கள்.

ஊர் ஜனங்கள் பிழைப்பிற்கு வெளியே போய் கூலி வேலை செய்து, வார இறுதியில் ஊர் சுற்றுவார்கள்.

அம்மா அந்த ரெண்டே முக்கால் லட்சத்தை வாங்க மாட்டாள் என்பதை தெரிந்து மாமா அதை வேறுவிதமாக பயன்படுத்தினார்.

மகளுக்கு ஐம்பதாயிரத்திற்கு நகை வாங்கினார். இருபத்தைந்து ஆயிரத்தை அவர் பெயரில் நிரந்தர வைப்பில் இட்டார்.இரண்டு லட்ச ரூபாயை அம்மாவிற்கு அப்பா கொடுத்த நிலத்தோடு, அதைச் சுற்றியுள்ள நிலங்களையும் விலை கொடுத்து வாங்கி பெரிதாய் வளைத்துப் போட்டார்.

''ரெண்டு ரூபாய்க்கு என்னென்னவோ கிடைக்கும். வீடா, தோப்பா நந்தவனமா வாங்கிப் போட்டுருக்கலாம் என்னத்துக்கு இந்த வறண்ட பூமி''

''மதுரைக்கு பைபாஸ் ரோடு இந்தப் பக்கம்தான் சேங்ஷன் ஆகியிருக்கு. அதாவது, நேஷனல் ஹைவேயா இது வரப்போகுது. அப்படி வந்துதுன்னா...இந்த இடம் தங்கம்.''

''அப்படி வரலைன்னா...''

''போயிட்டுபோவுது. வேறொரு விஷயத்தாலையும் இது ஓகோன்னு வரும். வறட்சியான ஊர்ல தொழிற் சாலை ஆரம்பிச்சா எல்லா விதமாயும் வரிச்சலுகைஉண்டு இனிமே மதுரைக்குள்ள பஸ் ஷெட்டு கூடகட்ட முடியாது. அத்தனை கசகசாவா ஆயிப்போச்சு, இன்னும் அஞ்சு வருஷத்துல வெளிப்பக்கம் வந்தேயாகணும் வெளியூர் பஸ் டெர்மினஸ்க்கே இதுங்கிட்டதான் இடம் ஒதுக்கிருக் காங்க.''

''இத்தினியும் உனக்கு எப்படிய்யா தெரியுது... பத்திரிகையில போடுறான் தானே...''

''பத்திரிகையில வராது. அரசாங்க கெஜட்ல சொல்லி வச்சு வாங்கணும்.''

''இவ்ளோ பெரிய வியாபாரியா இருக்க...உன்னைப் போய் கம்யூனிஸ்ட்டுங்கிறாங்களே...''

''நான் வியாபாரியா இருந்தா என் தங்கச்சிய முட்டாளாக்கி, இந்தக் காசுல நானே என் பேருக்கு சொத்து வாங்கிருப்பேன். நான் ஒரு நல்ல கம்யூனிஸ்ட் அப்படி செய்ய மாட்டேன்.''

''ஆனா, பொண்ணு பேருக்கு அம்பதாயிரம் ரூபா நகை மட்டும் லவுட்டிப்பீராக்கும்...''

''இடுப்புத் துணிய நம்பாத ஜனங்க இதைப்பத்தி நான் பேசுனா நம்புவாங்களா...நம்ப மாட்டாங்க. என் பொண்ணை தங்கச்சி பையனுக்கு கொடுக்கிறதா தான் நினைச்சு இதைப் பண்ணியிருக்கேன். எம் பொண்ணு



செய்துக்க மாட்டேன்னுடுச்சு...அந்த புள்ள எம் பொண்ணை வேண்டாமனுட்டான்... அப்போ இந்த நகையைக் கொண்டு போய் அவகிட்ட கொடுத்துருவேன். ஏன்னா...நான் ஒரு நல்ல கம்யூனிஸ்ட். எனக்கு தங்க நகை தேவையில்லை.''

''உம் பொண்ணு பெரியவதானே...தான் அத்தை பையனை விரும்புதா விரும்பலைனு இந்நேரம் தெரிஞ்சு இருக்குமே...''

''நாளைக்கு அவளுக்கு பரீட்சை. கட்டில்ல குப்புறப் படுத்திட்டிருக்கா. அவ அத்தை பையன்தான் கால் பிடிச்சு விட்டுகிட்டிருக்கான்.''

''அடேய்...ஒண்ணு கிடக்க ஒண்ணு ஆயிடப் போகுதுடா.

''ஆயிட்டுப் போவுது. ஒரு நல்ல கம்யூனிஸ்ட் மகளுடைய காதலுக்கு குறுக்க நிக்க மாட்டான்.''

நெருங்கிய சொந்தங்கள் வாய் பிளந்து நின்றன. மாமா விலகி நின்று வழிகாட்டியாக நின்றார்.

அம்மாவிடம் அவர் நேரடியாய் பேசியதில்லை. அம்மா அவரை வரவேற்பதில்லை. வாழ்த்தோ வசவோ பரிமாறிக்கொள்வதில்லை.

அவன் காரணம் கேட்டபோது, அது பற்றி பதிலும் சொல்லவில்லை.

ஒரு விஷயத்தை அம்மா சொல்ல வேண்டாமென்று தீர்மானித்து விட்டால், இறைவனே வந்தாலும் வாய் திறக்கமாட்டாள். அவள் முகம் பிரகாசமடைய, அவள் மனம் இளகி நிற்கிற, அவள் விரல்கள் தடவத்துடிக்கிற ஒரே ஆள் மாதவி.

ஆனாலும் அவர்கள் சந்தித்த போதெல்லாம் சண்டை போட்டுக் கொண்டார்கள்.

செல்வா, வீட்டுக்குள் நுழைந்து பெட்டியை வைத்து விட்டு பின்பக்கம் போய், குளித்து ஹாலில் உட்கார்ந் தான். அம்மா அந்த 'மனைமலர்' பேப்பரை விரித்து, படித்துக் கொண்டிருந்தாள். சட்டென்று தலைதூக்கி அவனைப் பார்த்து, "எங்கேடா போயிட்டு வந்தே..." என்றாள்.

அவன் பதில் சொல்ல வாய் திறக்கு முன், "அந்த கழுதையும் வந்திருந்ததா" என்று கேட்டாள்.

"யாரயம்மா கேக்கறே..." அவன் அப்பாவித்தனமாய் கேட்க முயற்சித்தான்.

"பேப்பர்ல போடற அளவுக்கு சுத்திருக்கீங்களா, தெருவுல போறவனுக்கு உங்க உறவு முறை என்ன தெரியும்."

"நெருப்பு மாதிரி பேசுனா போறுமா இருக்க வேண்டாமான்னு எழுதறானே...ஏதோ தெரிஞ்சுட்டு தானே எழுதறான். அப்படி தெரியுறா மாதிரி தானே சுத்துறீங்க..."

"எதையும் மறைக்க முடியாதுடா. 'உங்க பையனை முறைப் பொண்ணோட பாத்தேன். சந்தோஷமா போறாங்க. சீக்கிரம் ஒரு கல்யாணத்த பண்ணி வெச்சுடறதுதானே.' படியேறி சொல்லிட்டுப்போறாங்க."

இது மதுரைடா. ஆம்படையான் பொண்ணாட்டி தவிர, வேற யார் சிரிச்சி பேசிகிட்டுப் போனாலும் 'ஏன்'னு கேக்கும். அண்ணன் தங்கச்சி போனாலும், ஏன் அடிக்கடி ஒண்ணா போறாங்கன்னு சந்தேகப்படும்.

"எங்கே போனே...ஏன் இப்படி வருது...நீ பண்றது எனக்கு பிடிக்கல செல்வா. ரெண்டு மூணு தடவ இதைப் பத்திப் பேசிட்டேன். இரண்டு மூணு தடவையும் பொய் தான் நீ பதிலா சொன்னே..."



"உங்கிட்ட என்ன பேச்சு. அவளக்கூப்பிடு. நான் வரச்சொன்னேன்னு சொல்லு அப்படி அவ வரலை...நான் என்ன பண்ணுவேன்னே தெரியாது."

அவள் பேப்பரை தூக்கி மூலையில் போட்டுவிட்டு, கொல்லைப்புறம் போய் உட்கார்ந்து கொண்டாள்.

செல்வா மாதவியைத் தேடி புறப்பட்டான்.

# 4

"அப்படி பேசக்கூடாது மாதவி. அவ உனக்கு மாமியார். உனக்கு அத்தை. உன் புருஷனுக்கு அம்மா,"

"நான் பேசல... அருவாள எடுத்து ஒரே வெட்டா வெட்டிட்டு வந்திடுறேன். நான் உனக்காக தான் பாக்க றேன். செல்வா கூட என்னை திட்றதில்ல. நீதான். 'மாமியார ஒண்ணும் சொல்லாதே, மாமியார ஒண்ணும் சொல்லாதே'ன்னு பெரிய ரவுசு பண்றே."

"விடும்மா... யாரை யார் வெட்டுறது."

"அவ என்னை தப்பா பேசட்டும். பொறுத்துக்க றேன். எடுத்தவுடனே, அவ உன்னையும், எங்கம்மாவை யும் தப்பா பேசுவா. நான் பொறுத்துக்க முடியாது, போன தடவை உள்ள வந்தப்போ, என்னடி திமிசுக் கட்டை மாதிரி இருக்கே... இளைக்க வேணாமானு கேட்டா. இவ சோறு போட்டா நான் வளர்ந்தேன் 'உன்னை மாதிரி வினையா இருந்தா, உருகி உருகி ஒல்லியா நிக்கலாம். எங்களுக்கு வஞ்சனையில்ல, அதனால வளர்ந்துட்டோம்' னேன்,"

"புடவையை இழுத்து சொருகிகினு கத்த ஆரம்பிச்சாளே பாக்கணும். நான் விடலியே... 'இந்த கத்தல் எல்லாம் உன் புருஷன்கிட்ட கத்திருந்தா ஒழுங்கா இருந்திருப்பே...அத்த விட்டுபுட்டு எங்கிட்ட ஏண்டி கத்தறே'ன்னேன். பைத்தியம் மாதிரி நெஞ்சுல அடிச்சிகினு அழுவுது"

"இப்பவும் அதேன்தான் பேசும். அதேதான் நடக்கும் எழுதித் தர்றேன்."

பொறுமையா பேசும்மா. வயசானவ, வாழ்ந்து கெட்டவ. நீயும் அவளும் ஒத்துமையா இருந்தாதானே, செல்வாவுக்கு சந்தோஷமா இருக்கும்."

"கொஞ்சம் கனிவா பேசினாபோறும். நான் தலையில வச்சுகிட்டு கொண்டாடுவேன், அந்தக் கிழவி பேசாது. ஒவ்வொரு தடவை வெளிய போகும் போதும் உங்கிட்ட சொல்லிட்டுதான் போறேன். அம்மாகிட்ட வந்து, 'நானும் செல்வாவும் ஒரே ரூம்ல தங்கினோம்'னு, வெக்கமில்லாம பேசுறேன். அம்மாவும் பொண்ணுமா நாங்க... உனக்கு தெரியும்."

"நாம வேற அவங்க வேறம்மா."

"அதுக்காக என்னை ஏம்பா பணிஞ்ச போகச் சொல்றே. அந்தக்கிழவிய பொத்திகினு இருக்கச் சொல்லு. எங்கிட்ட தப்பா பேசுச்சு... சூட்டக் காய்ச்சு இழுத்தா மாதிரி எதுனா சொல்லிடுவேன். மரியாதை கொடுத்து மரியாதை வாங்கச் சொல்லு."

"நான் சொன்னா உனக்குப் புரியாது மாதவி. அடியே ...நீ சொல்லு." அப்பா அம்மாவைப் பார்த்து கட்டளையிட்டார்.

"உன் வயசு உன்னை எகிற சொல்லுது. அதிர்ஷ்டவசமா உனக்குன்னு ஒரு முறைப்பையன் இருந்து, அவனும்



நல்லவனா இருந்து, உன் மனசுக்கு பிடிச்சவனாவும் ஆயிட்டான். நம்ம ஆசைதானே இது அப்படின்னு, நாங்களும் இதை பெருசு பண்ணல. கலந்து பழகினாலோ, கூடிப் பேசினாலோ எதுவும் தப்பாயிடாது. இதுவும் ஒரு அழகு அப்படீன்னு நாங்க புரிஞ்சு தட்டிக் கொடுக்கறோம். இந்தப்பெரிய மனசுக்கு காரணம் எங்க வாழ்க்கை இப்படி எல்லாருக்கும் அமையாது மாதவி.

"இந்த சௌகர்யம் கிடைச்சதுனாலே மத்தவங்களுடைய வருத்தங்கள் உனக்கு புரியாம போறதுக்கு வாய்ப்பு இருச்கு. மத்தவங்களுக்கு எப்படி உன்னோட புரட்சி விஷயங்கள் புரியாம இருக்கோ அதே மாதிரி உனக்கும் பழமையோட அழுத்தம் புரியாது."

"மேடையில கத்தி கத்கி, எதையுமே எதிர்த்துப் பேசி, பட்டிமன்றமா நாடகமாடி, அடி வயித்துலேருந்து ஆங்காரப்பட்டு, கைத்தட்டல் வாங்கிறதுக்காக பிளிறி பிளிறி, வார்த்தைகளை கொட்டிட்டு, அதேமாதிரி நேர பேசறப்பவும் கத்திப் பேசற... அலட்டற..."

"உங்கிட்ட தெளிவு இல்லைன்னு உம் மூஞ்சியே சொல்லுது. தெளிவு இருந்தா கோபம் வராது. கோபம் இல்லைன்னா கூச்சலும இருக்காது. வயித்தை சுருக்கி சுருக்கி கத்தறேயே...அது உன் உடம்புக்கு நல்லது இல்ல. என் தங்கச்சி உன்னை ஒண்ணும் சொல்ல மாட்டா... இவளை சொல்லுவா... என்னை சொல்லுவா... சொல்லிட்டுப்போகட்டும்..."

"நாங்களே மௌனமா இருக்கற போது, நீ ஏன் அவ்ளோ கத்தறே... 'அப்பா அம்மாவை சொன்னா, விடமாட்டேன்'னு லூசுத்தனமா கத்தாத... சொல்றது என் தங்கச்சி. உன் அத்தை. அதனால கனிவா பேசு. கனிவா பேசுறது வெக்கக்கேடேயில்ல..." அப்பா குரல் உயர்த்தாமல் கண்டித்தார்.

''இப்போ என்ன கேக்கப் போறாங்க... பத்திரிகையை பாத்துருக்காங்க. புள்ளைய திட்டிருக்காங்க. நீ போனதும், 'என்னாதுடி இது'...ன்னு மூஞ்சியிலே தூக்கிப் போடப் போறாங்க.'' அம்மா கவலைப்பட்டாள்.

''அதனாலதான் மறுபடி சொல்றேன்...''

''எங்களுக்கு இது புரியுது. ஆனா என் தங்கைக்கு புரியாது. நீ மருமகளா வரக்கூடாதுன்னு அவ சொல்லவே மாட்டா. அவ மருமக இப்படியெல்லாம் இருக்கக்கூடாதுன்னு சொல்லுவா.''

''எனக்கு ஒரு விஷயம் புரியல.'' அம்மா செல்வாவை நோக்கி திரும்பினாள்.

''ஏண்டா இந்த விஷயம் பேப்பர்ல வந்தது. பேப்பர்ல வர அளவுக்கா ஆடிப் பாடுனீங்க... மேடையிலயும், சபையிலயும் ஜோடியாவா அலைஞ்சீங்க.''

''இல்லை மாமி. அப்படி நடக்கவேயில்ல. மேடைப் பக்கமே நான் போகல. பட்டிமன்றம் கேட்டுட்டு உடனே ரூடுக்கு வந்துட்டேன். ரூம்லயும் நாங்க சிரிச்சுப் பேசல. வெளிய போய் டிபன் சாப்பிட்டுட்டு வந்து தூங்கிட்டோம். எனக்கு வேற சிலர் மீது சந்தேகம்.

''யார் மேல சந்தேகம்.'' மாதவி கேட்டாள்.

''உன்கூட பட்டிமன்றம் பேசினவங்க மேல சந்தேகம். உன்மேல அந்தப் பொம்பளைங்க ரொம்ப பொறாமையா இருக்காங்க. நீ மேடையில இடிச்ச இடியில ரொம்ப இருண்டு போய் கிடந்தாங்க. அவங்க ஏதாவது செய்திருக்கணும்னு எனக்கு தோணுது.'' மாதவி முகம் சுருக்கி யோசித்தாள். மௌனமானாள்.

''இப்போ அவளுங்க முக்கியமில்லை. உங்க அத்தை முக்கியம். போய் சமாதானப்படுத்திட்டு வா. முடிஞ்ச வரைக்கும் பொய் சொல்லாதே. அதேநேரம் எல்லாத்தையும் கொட்டிடாதே. போ... போய் பேசிட்டு வா. நல்லாருக்கீங்களான்னு கேளு...''



மாதவி சீராய் உடுத்திக் கொண்டு செல்வாவுடன் கிளம்பினாள். அவள் கலவரமாய் இருப்பது அவள் முகத்தில் தெரிந்தது.

செல்வா படியேறினான். மாதவி பின் தொடர்ந்தாள்.

'அத்தை' என்று கூவியபடியே கிழவியின் கைகளை பிடித்துக் கொண்டாள்.

கிழவியின் முகம் சுடர்விட்டுப் பிரகாசித்தது. மாதவி முகத்தை ஏந்திக் கொண்டாள். உற்றுப் பார்த்தாள். முன் தலையை கோதிவிட்டாள். முகம் வழித்து சொடக்கு எடுத்தாள். கழுத்தையும், தோள்வளைவுகளையும், புஜத்தையும் நீவிக் கொடுத்தாள்.

''குளிச்சுட்டிருக்கியாடி.''

திருமணமான பெண்ணை கேட்க வேண்டிய கேள்வி பொதெரென்று மாதவியின் முன்னே வந்து விழுந்தது... செல்வா அம்மாவிற்கு தெரியாமல் தலையில் அடித்துக் கொண்டான்.

''என்ன கேக்கறீங்க அத்தை?''

''குளி, குளிச்சிகிட்டிருக்கியான்னு கேக்கறேன்.''

''எனக்கு இன்னும் செல்வாவோட கல்யாணம் ஆகல அத்தை.''

''அதனாலென்ன... அதான் அவன்கூட கண்டமேனிக்கு சுத்திகிட்டிருக்கியே...அந்த பயத்துல கேக்கறேன்.''

"நான் பேசறேன் பழகுறேன். அவ்வளவுதான். அவுத்துப் போட்டுட்டு ஆடலை. விட்டா, நான் காசுக்கு படுக்கறேன்னுகூட சொல்வீங்க போலிருக்கே..." மாதவி உஷ்ணமானாள். செல்வா சோபாவில் சுருண்டு உட்கார்ந்தான்.

"அப்படி ஒரு வாசனை தெரிஞ்சிருந்தா உன்னை இந்த வீட்டு வாசப்படி ஏத்திருக்க மாட்டேன். உங்க அப்பனை உதறிப்போட்ட மாதிரி. உன்னையும் உதறிப் போட்டிருப்பேன்.",

"அப்படில்லாம் கேள்விப்படலை. அது வரைக்கும் என் அதிர்ஷ்டம்."

"நெருப்பு மூட்டுனா புகை வரும்டி."

"புகை பேப்பர்ல வந்துருச்சோ."

"ஏன்...நேர்லயும்தான் வந்துச்சு.

"என்ன சொல்றீங்க."

"செல்வா அன்னாண்ட போனான். இன்னாண்ட ஒரு பொம்பளை வந்தா. பட்டிமன்றம் பேசறவ."

"மாதவி ஒண்ணும் நல்ல பொண்ணு இல்ல. அவ உங்களுக்கு மருமகளா வரணும்னு ஆசைப்பட்டீங்கன்னா யோசனை பண்ணுங்க. அவ குடும்பத்தை கலைக்கிறவ. புருஷன் கொத்தி. எம்புருஷனை அவகிட்டேருந்து மீட்டுட்டு வர்றதுக்குள்ள போதும் போதும்னு ஆயிடுச்சு. வெகுளி மாதிரி நடிக்கிற வேஷக்காரி. இறுக்கி போத்திகிட்டு நிப்பா. ஆனா, அவ கண்ணு பேசும், உடம்பு பேசும் அப்படின்னு சொல்லிட்டுப் போனா."

"எவ அவ...?"

"பேர் சொன்னா என்ன பண்ணுவே...?"



"நான் நல்லா இருக்கிறது நிறைய பேருக்கு பிடிக்கலை அத்தை."

"அதான் உலகம்."

"செல்வாவ கட்டிக்கப் போறேன்னு சொன்னதுமே நிறைய பேரு நொந்துட்டாங்க. சரி...வந்தவ பேரு என்ன...?"

"சொல்ல மாட்டேன்னு சத்தியம் பண்ணிருக்கேன். அதனால கேக்காத."

"சரி பேரு வேணாம். வேற என்ன சொன்னா?"

"அதையும் கேக்க வேணாம்."

"ஏன்?"

"நீங்க ரெண்டு பேரும் ஒரே ரூம்ல ராத்திரி முழுக்க, கம்பராமாயணம் பேசிட்டிருந்தீங்கன்னு நீ சொல்லுவ. நான் கேக்கணுமா. தமிழ் இலக்கியம் வளர்த்தோம்னு அளந்து கொட்டுவீங்க. நாங்க அப்படியா, அப்படியானு மோவாக்கட்டையில கைவைச்சுக்கிட்டு கேக்கணுமா, ஒண்ணு பட்டிமன்றத்தை நிறுத்து, இல்லை...இவன்கூட பழகறதை நிறுத்து." செல்வாவின் அம்மா குரல் உயர்த்தினாள்.

"அதுக்கெல்லாம் வேற ஆளப் பாருங்க."

"அப்போ, நீயும் வேற ஆளப்பாரு. என் புள்ளைய விட்டுரு." அம்மாவின் குரலில் கடுமை கொப்பளித்தது.

"அது இனிமே நடக்காது."

"ஏன்? அவுத்து நின்னுட்டியா?..."

"ஆமாம். நின்னுட்டேன். என்ன அதுக்கு இப்போ.

"ஆத்தா புத்தி அப்படியே குறையாத வந்திருக்கு" அம்மா உரக்க பேச மாதவியின் கண்ணில் கனல் தெறித்தது.

''ஏய் கிழவி மரியாதை கெட்டுரும். உனக்கு குடித் தனம் பண்ண வக்கில்ல...உன் ஆம்படையான ஊர் மேய விட்டு அடுத்தவங்களை பாத்து ஏண்டி எரியறே?''

''அடிபுடினே நாக்கை இழுத்து வச்சு அறுத்துப்புடு வேன்.''

''ஏன் வரலட்சுமி நாக்கை அறுத்துட்ட...இப்ப என் நாக்குகிட்ட வந்திட்டியாக்கும். தொண்ணூறாயிரம் ரூபாய்க்கு புருஷனை வித்துட்டு உனக்கு பேச்சு வேறே.''

''நாங்க புருஷனை விக்காத என்ன பண்ணுவோம். புகுந்த வீடு நல்லாயில்லன்னா பிறந்த வீடு தாங்கணும், தாங்கறா மாதிரியா இருந்தது.''

''பொண்டாட்டி படுத்த படுக்கையா இருந்தா. அவ உடம்பு துடைக்கறதுக்கு ஒரு தாதியை கொண்டாந்துட்டு பொண்டாட்டி செத்த அடுத்த வாரமே அவளை கட்டிக் கிட்டான். கேட்டா லவ்வுன்னான். எம் புருஷனுக்கு எதிர்க்க எவ்வளவு இறக்கமா போயிடுச்சு தெரியுமா எனக்கு,''

''நோய்ப்பட்ட பொண்டாட்டிய வைச்சுகினு நர் ஸோட விளையாடியிருக்கானே உங்க அண்ணன்...உன்ன வச்சுகிட்டு நான் இன்னொருத்தியோட விளையாடினா தப்பா அப்படின்னு புருஷன் கேக்கறான்.''

''தப்பில்லைன்னு பதில் சொல்லிட்டேன் ஆட ஆரம் பிச்சுட்டான்.''

எம் புருஷன் கெட்டவங்கறதுனால மட்டும் என் வாழ்க்கை கெட்டு போகலை. என் அண்ணனாலயும் என் வாழ்க்கை கெட்டு போச்சு.''

''எனக்கு எங்க அண்ணியை தெரியும்-உனக்கு உங்க அம்மாவை தெரியாது. உங்க அம்மா நர்ஸா வந்தவ.



தாலி கட்டறதுக்கு முன்னாடி படுக்கை விரிச்சவ. உன்னை வயத்துல வாங்கிகிட்டவ.''

''என்...ஒரு வருஷம் கழிச்சு உங்கம்மாவ கல்யாணம் பண்ணியிருக்க கூடாதா...எதனால அவசரம், உடம்பு பத்திக்கிச்சு. அதான் அவசரம். பொண்டாட்டி சாக கெடக்கறபோது இன்னொருத்திய படுக்க கூப்பிடலாமா. அந்த இன்னொருத்திதான் படுத்து தொலையலாமா.''

''ஆம்பளை ஆத்திரக்காரன். பொம்பளைக்கு அறிவு வேண்டாம். ஏதோ திட்டம் போட்டுதானே படுத்து ருக்கே. கல்யாணத்துக்கு முன்னாடியே படுத்தவ, கணக்கு போட்டு கவுத்தவ, கல்யாணத்துக்கு அப்புறமும் கவுக்கலா மில்ல...இதே கணக்கை புருஷன் இல்லாதவனிடமும் போடலாமில்ல...''

''இந்தக் கதை உனக்கு தெரியாது. உங்கம்மா சொல் லியிருக்க மாட்டா- அந்த கணக்கை நீ போடாதே. அந்த கணக்கை நீ போட வேண்டிய அவசியமுமில்லை.''

''நீ நல்லவளோ கெட்டவளோ இவன் உனக்குத் தான், அதுக்காக வெளியே வாசல்ல கைகோத்துகிட்டு அலையாதே. ஊர் வாயிலே விழுந்து புரளாதே.''

''லவ்வுங்கற விஷயம் நம்மூர்ல ஏன் கேவலமாயிருக்கு தெரியுமா? நிறைய பொம்ளைங்களுக்கு லவ் கிடைக்கல.. நிறைய பொம்பளைங்களுக்கு அன்பு கிடைக்கல. கிடைக் காதவளுக்கு கிடைச்சவளை பாத்தா எரிச்சலாதான் இருக்கும்.'' அம்மா தொடர்ந்து கூவினாள்.

''அவ எரிஞ்சா நான் என்ன பண்ணறதுன்னு கேக் காதே. அடக்கமா இரு. யார் வாயிலேயும் விழாம இரு. எல்லாம் தெரிஞ்சாமாதிரி அலட்டாத இரு. எகிறி எகிறி பேசாத இரு. படிச்சவங்க பண்ற விவாதம் பட்டி மன்றம்ங்கறது போயி சொந்த விஷயங்க அடிச்சுக்கறதா

மாதிரியல்ல போச்சு. நீ நல்லாயிருக்ககூடாதுன்னு இல்ல இங்க வந்தவ நினைக்கறா. காரணம் என்ன, மனசு தாக்கியிருக்க. எரிச்சல் மூட்டியிருக்கே.''

ஆக, உன் படிப்பும் புத்தியும் உனக்கு சம்பாதிச்சு கொடுத்தது என்ன. இப்படி முதுகில குத்தற பொம் பளைங்களைதான். நீ நல்லாயிருக்கணும்னு எவளும் நினைக்கல இல்ல. ஏன் இது நடந்தது?''

''பேச்சு...பேச்சு...பேச்சு தேவையில்லாத பேச்சு... பத்து பைசாவுக்கு லாபமில்லாத பேச்சு. ராமன் நல்ல வனா ராவணன் நல்லவனான்னு பேசுவாங்களா. ராமாயணம் தெரிஞ்சுக்கறதுக்கு இதுதான் வழியா. நீங்க பேசறதில இலக்கியம் வருமா. எவ எவளை எப்படி திட்டறான்னு இல்ல வரும்.''

''எல்லா மாரியம்மன் கோவில்களிலும் ஒரே குரூப். ஒரே மாதிரியான தலைப்பு. பேசி பேசி அலுத்து போய் சொந்தமா அடிச்சிக்கிறீங்க.''

''நான் பிறந்த ஊர்ல உறியடி உற்சவம் நடக்கும். எத்தனை மழை பெஞ்சாலும், எத்தனை தரை வழுக்கி னாலும் பால் கறக்கறவங்களுக்கு மட்டுமே மேலேயே கண்ணு இருக்கணும். அதனால வழுக்கு மரத்துல எண்ணெயை தடவி, ஏறி பரிசு பணம் எடுக்க சொல்லு வாங்க. ஏற முடியாம மூஞ்சில தண்ணி ஊத்துவாங்க.''

''விளையாட்டுன்னு ஆரம்பிச்ச விஷயம் அவங்க உச்சிக்கு போகப்போக வெறியாயிடும். 'பொத்து' 'பொத்து'ன்னு சொம்புல அடிப்பானுங்க. ஏறினவன் கீழே வந்து அடிச்சவன் மூஞ்சியில குத்துவான். தண்ணி ஊத்தறது நின்னு ரத்த ஆறா ஓடும். விளையாட்டு வினையா மாறும்.''



''நீ அதான் செய்துகிட்டிருக்க. இதை பண்ணா தேன்னு சொல்லதான் கூப்பிட்டேன்.''

''[illegible] பேச்சு கெட்டிக்காரத்தனம் இதுல [illegible] உண்மையா இருந்ததாதான் குடித் [illegible] கோபப்பட்ட உன்கிட்ட உண்மை இருக் [illegible] இருக்கறவன்கிட்ட கோபம் வராது.''

''[illegible] நீ ஏன் கோபப்பட்டே தெரியுமா. [illegible] கண்டு புடிச்சுட்டாங்களேன்னுதான் [illegible]''

''அவன் என் புள்ள. அவன் சந்தோஷமா இருக்கறதை [illegible] சந்தோஷம் எனக்கு உண்டா. நீ ஏன் ஹோட் டலுக்கு போறே. இங்க வா. என் வீட்டுக்கு வா. நான் [illegible] போடறேன். நான் புருஷனையே எவ [illegible] பார்த்தவ என் மருமக என் மகனோட சந்தோஷமா இருந்தா எரிவேனா.''

''இளைக்கணும்னு நான் சொன்னதுக்கு கோபப் பட்டியாமே...இப்பமே இளைக்கலேன்னா புள்ள சுமக்கும் போது எப்படியிருப்பே...குண்டாயிருந்தா புரண்டுபடுக்க முடியுமா.''

''நான் பலதையும் யோசனை பண்ணிதானே உன்னை திட்டறேன் ஏன் உனக்கு புரியலை.''

''என்னை திட்டுங்க. பரவாயில்ல. ஏன் என் அப்பாவையும், அம்மாவையும் திட்டறீங்க.''

''நான் திட்டினதே உங்கம்மாகிட்டே சொல்லியிருக்க இல்ல. அவ சண்டைக்கு வந்திருக்காளா. அவளே வராத போது நீ ஏன் ஆடறே. உங்க அத்தையை வெட்டி போடுன்னு சொல்லியிருக்காளா. கத்தாதடீன்னுதானே சொல்லி அனுப்பிச்சா. ஏன்னு யோசனை பண்ண மாட்டியா.'' முட்டாள் பெண்ணே

மாதவி மௌனமாக இருந்தாள். யோசிக்கத் துவங்கினாள்,

வாசலில் ஜீப் நிற்கிற சப்தம் கேட்டது. செல்வா எழுந்துபோய் நின்றான். மாமா நின்று சொண்டிருந்தார். அந்த ஜீப்பில் இரண்டு ஜப்பானியர்களும் ஒரு தமிழரும் இருந்தார்கள்.

அப்பா கொடுக்காத வாஞ்சையை செல்வா மாமா விடம் அனுபவித்தான்.

''நான் கம்யூனிஸ்ட். ஆனாலும் தேவாரம் திருவாசகம்லாம் நல்லா படிப்பேன். அன்புள்ள மாமனும் மாமியும் நீன்னு கடவுளை நாயன்மார்ல ஒருத்தர் சொல்லியிருக்கார்.''

''அப்பா அம்மாவைவிட மாமன் மாமிதான் சுகம். உண்மையான பிரியம்.''

''எனக்கு இப்படி ஒரு தாய்மாமன் இருந்தா, நானும் சந்தோஷமா அவருடைய அன்பை அனுபவிச்சிருப்பேன். நான் பெத்த பொண்ணை இவன் கட்டிக்கப் போறான் கிறதும் இந்த அன்புக்கு ஒரு காரணம்.''

''தங்கச்சிதான் கஷ்டப்பட்டுட்டா. தங்கச்சி குழந்தையாவது கஷ்டப்படாம இருக்கணுமேங்கிறது காரணம்.''

''உனக்கும் எனக்கும் நடுவுல மரியாதையெல்லாம் வேணாம். மரியாதைங்கிறது பொய்யானவங்களுக்கு பொய்யா பண்ற அன்பு. நாம ஏன் அதைப்பண்ணனும்.''

சின்ன வயதில் ஈர்க்குச்சி எடுத்து மாமாவோடு கத்திச் சண்டை போட்டிருக்கிறான். வயதாகும்போது ஜட்டியோடு காட்டாற்றில் மீன் பிடிக்கப் போயிருக்கிறான். தேன் பறித்து பிழிந்திருக்கிறான். மாமாவை நண்பனாக உணர்ந்திருக்கிறான்.



அந்த மாமா வாசலில் வந்து நின்றதும் வீட்டில் நடந்த சண்டையெல்லாம் மறந்துவிட்டது ஓடிப்போய் கைப்பிடித்துக் கொள்ளத் தோன்றியது.

பஸ்சுல மதுரைக்குப் போயிருந்தேன். அடுத்த மாசம் கட்சிக் கூட்டத்துக்கு ஏற்பாடு பண்ணனும்னு கூப்பிட்டு அனுப்பிச்சாங்க. பஸ்சுல போறபோது, நம்ம நிலத்தை திரும்பி பாத்தா, இந்த ஜீப் நின்னுட்டிருந்தது. இவங்க அங்க கல்லு அறுத்துக்கிட்டிருந்தாங்க. எனக்கு ஒண்ணும் புரியல. அடுத்த ஸ்டாப்பிங்ல இறங்கி, ஓட்டமும் நவ்டயுமா போய், 'என்னங்கடா'ன்னு கேட்டேன்.''

''அவங்க வெளிநாட்டுக்காரங்க. இவன் தமிழன் தான் ஆனா, இங்கிலீஷ்ல பேசி வெறுப்பேத்தறான், மெட்ராஸ்லேருந்து வர்றான்கிறது மட்டும் புரிஞ்சுது.''

''மதுரைக்காரன்கிட்டே விளையாடாதே. முட்டி பேந்துரும். மரியாதை கொடுத்து மரியாதை வாங்குன்னு சொன்னேன். ஆனா, எதுக்கு இங்க வந்தான்னு தெரியல, நீ பேசிப்பாரு.''

''வாசல்ல நின்னு பேசுவானேன். உள்ள கூப்பிடு.'' அம்மா உள்ளே இருந்தபடி குரல் கொடுத்தாள்.

அந்த ஜப்பானியர்களுக்கு சுமாராய் ஆங்கிலம் தெரிந்தது. அந்தத்தமிழர் ஆங்கிலத்தல் அலட்ட ஆரம்பித்தபோது, மாதவி பிரித்துக் கட்டினாள். அவர் தமிழுக்குத் தாவ வேண்டுமென்றே தொடர்ந்து ஆங்கிலத்தில் பேசினாள்.

ஜப்பானியர்தளுக்கு கிரானைட் வியாபாரம், அந்தத் தமிழர் சென்னை நகர ஏஜெண்ட்.

''வேறு இடத்தில் தற்போது கிரானைட் என்கிற கருங்கற்கள் வாங்கினாலும் வேறு எந்த இடத்தில் தரமான கற்கள் கிடைக்கும் என்று அந்த ஜப்பானியர்கள்

தேடிக் கொண்டிருக்கிறார்கள். அதன் பொருட்டே, அவர்கள் நிலத்தை லேசாகக் கிளறி, சிறிய கற்களை அறுத்துப் பார்த்தார்கள். ஆனால், ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை.

ஏனெனில், மிக உயர்தரமான செவ்வரியோடிய கற்களும் மிக சாதாரணமான, சுண்ணாம்புக்கற்களும் அங்கே இருக்கின்றன.''

''இருபதடி நீளம் இருபதடி அகலம் இருபதடி ஆழம் தோண்டிப் பார்த்தால்தான் என்ன கிடைக்குமென்பதைச் சொல்ல முடியும், ஆனால்,இதைத் தோண்ட மூன்று லட்ச ரூபா செலவாகிவிடும். இரண்டு மூன்று இடங்களில் தோண்டிப் பார்ப்பது நலம். இந்த ஏழு ஏக்கர் நிலத்தை ஆறு லட்ச ரூபாய் முதலீடு செய்து, தோண்டிப் பார்த்தால் அறுபது கோடி ரூபாய் பெறுமானமுள்ள கற்கள் கிடைக்கலாம். இல்லை, அந்த ஆறு லட்ச ரூபாயும் வீணாகப் போனாலும் போகலாம். நல்லது கிடைக்க ஐம்பது சதவிகித வாய்ப்பு உண்டு. நல்லது அல்லாதது கிடைக்க ஐம்பது சதவிகித வாய்ப்பும் இருக்கின்றன.''

''மூன்று மாதம் பொறுத்து மறுபடி சென்னை வருவோம்.இந்த புத்தகத்தை நீங்கள் வைத்துக்கொள்ளுங்கள்'''

''இது செவ்வரியோடிய கருங்கல். இது முழுவதும் கருமை படர்ந்த கல். இது பசுமையான கிரானைட். பசுமையான கிரானைட் கிடைக்க வாய்ப்பில்லை. செவ்வரியோடிய மிகமிக உறுதியான கிரானைட் கிடைக்க வாய்ப்பிருக்கிறது.அப்படி ஒரு ஏக்கர் முழுவதும் செவ்வரி ஓடிய கிரானைட் கிடைத்து விட்டால், அது விற்ற காசில் மதுரை நாயக்கர் மஹால் போல ஒரு வீடு செல்வா கட்டிக் கொள்ளலாம்.''



அவர்கள் பேசிவிட்டு, நிலப்பத்திரம் பார்த்தார்கள். கல் கிடைத்தால் தகவல் கொடுக்கும்படி விலாசம் கொடுத்தார்கள். அவனையும் அம்மாவையும் மாதவியையும் போட்டோ எடுத்துக் கொண்டார்கள். விலாசம் குறித்துக் கொண்டார்கள்.

காட்டாற்று வெள்ளத்தில் துள்ளித் துள்ளி போய்க் கொண்டிருந்த படகு சட்டென்று எகிறி பாறை மீது உட்கார்ந்து கொண்டது போல, அந்த வீட்டில் ஒரு அமைதி ஏற்பட்டுவிட்டது.

''என்னா. மாமியாருக்கும், மருமகளுக்கும் பெரிய சண்டையா...'' மாமா ஆரம்பித்தார். அம்மா முதத்தை திருப்பிக் கொண்டு உள்ளே போனார்.

''இவ மருமகளான்னே நான் முடிவு பண்ணல. எதுக்கு தேவையில்லாத பேச்சு.''

''இந்த அம்மா என்ன முடிவு பண்றது. என் அத்தை பையன் செல்வாவுக்கு நான்தான் பொண்டாட்டி. இவங்கள் மாதிரி விட்டுக்கொடுத்துட்டு,வேடிக்கை பாப்பேன்னு நினைக்கிறீங்களா. என்னைத் தவிர வேற எவளுக்கு தாலி கட்டினாலும் உங்க புள்ள கை இருக்காது. கூலிக்கு ஆள் வச்சு மடக்குவேன். நானே எதிர்ல நின்னு வெட்டுவேன்.'' மாதவி சீறினாள்.

''இது பேய் புத்தி.புருஷனை பலப்பம், சாக்லேட்டுன்னு நினைச்சு சண்டை போடுற புத்தி.''

''வாழ்ந்தா உத்தமனோட வாழணும். இல்ல ஒதுங்கி அமைதியாயிடணும். எம் புருஷன் உத்தமன் இல்ல ஒதுங்கிட்டேன். நான் ஒதுங்குனபிறகு, அவன் எவ கூட இருந்தா எனக்கென்ன...எம் புள்ள கைய வெட்டிட்டா முடிஞ்சு போச்சா...உன்னை வெட்டுறதுக்கு அருவாளே கிடைக்காதா...''

“அடாடா...போறும்.எம் பொண்ணு எந்த விதத்துல குறைஞ்சு போயிட்டா.ஏன் வேணாங்கிற.நான் பண்ணுன தப்புக்கு என் குழந்தைய ஏன் திட்டுற...” அப்பா குரல் உயர்ந்தது.

“உனக்கு ஒரு உண்மை சொல்லட்டுமா தங்கச்சி... சொன்னாகத்துவியோன்னு ஒரு பயம் அந்த உண்மை செத்துப்போன எம் பொண்டாட்டிக்குதான் தெரியும்.”

“இவங்க அம்மா ஒரு விதவை இவ புருஷன் குடிச்சிட்டு வந்து பொண்டாட்டிய அடிக்கிறவன். அவனுக்கு குடிக்கிறதுக்கு காசு கொடுக்கணும்ங்கிறதுக்காகவே, நம்ம வீட்டுக்கு வந்து நோய்ப்பட்ட என் பொண்டாட்டிய கவனிச்சிகிட்டா. அவன் விறகு கட்டையில அடிச்சு, பட்டை பட்டையா உடம்பெல்லாம் வீங்கினப்பவும்கூட, நம்ம வீட்டுக்கு வந்து எம் பொண்டாட்டிய கவனிப்பா.”

“எம் பொண்டாட்டி செத்துப் போயிடுவானு எல்லாருக்கும் தெரியும், டாக்டர் கெடு வச்சிட்டாங்க. ஆனா இவ அம்மா அசறலை. ‘மீட்டுறலாம் மீட்டுறலாம் மீட்டுறலாம்'னே மருந்து குடுத்தா.”

“எம் பொண்டாட்டி செத்த அன்னிக்கு தாலிக்கவுறை அவ புருஷன் கத்திரிச்சு திருமாங்கல்யத்தை திருடிட்டு போயிட்டான். காலையில எம் பொண்டாட்டி ‘கவுறு எங்கே'னு விசாரிச்சா இவ பதிலே சொல்லல...‘புருஷன் திருடிட்டு போயிட்டானாடி'னு கேட்டா. இவளுக்கு அழுகை தாங்கல...”

“எம் பொண்டாட்டி புரிஞ்சு போயி, ‘நான் ரெண்டு மூணு நாள்ள செத்துருவேன். இவள துணைக்கு வச்சுக்குங்கன்னா.”

“அன்னிக்கு சாயந்திரமே செத்துட்டா.”

“எம் பொண்டாட்டிய எரிச்சிட்டு வர்றேன்...அவ புருஷன் போலீஸ்ல மாட்டி அடிபட்டு செத்தான்னு நியூஸ்



வந்தது, வீட்டுக்கு போய், தலைக்கு தண்ணி ஊத்திகிட்டு, இவங்க அம்மா வீட்டுக்கு ஓடினேன்.”

“இவங்க.அம்மா கூடத்துல உக்காந்துகிட்டு சிரிக்கிறா. பைத்தியம் மாதிரி சிரிக்கிறா.”

“என் தாலிய அறுத்தான். அவன் கழுத்து அறுந்து போச்சு. கண்ணாடி பதிச்ச சுவரு தாண்டுறபோது, மோவாக்கட்டைக்கு கீழே ஆறங்குல ஆழத்துக்கு கண்ணாடிச்சில்லு குத்தி, அப்படியே நின்னுட்டானாம்... இருட்டு, யாருமே பாக்கல. கத்திருக்கிறான். எங்கேருந்து சத்தம் வருதுன்னி தெரியல. அஞ்சு நிமிஷம் கத்தி, அரை மணி நேரம் தொங்கி, அப்புறம் கண்டுபிடிச்சிருக்காங்க. இதைவிட கோரமான சாவு யாருக்கும் வந்திருக்காது.”

“இவங்க அம்மா ஒரு மாதிரி அப்செட் ஆகி, தானா புலம்ப ஆரம்பிச்சாங்க. ‘என்னைய அடிச்சயில்ல... என்னைய அடிச்சயில்ல'ன்னு தானா தனியா பேச ஆரம்பிச்சிட்டாங்க. அவளை சமாதானப்படுத்த இறுக்கி கட்டிக்க வேண்டியிருந்தது.”

“தங்கச்சி...நான் உணர்ச்சிவசப்பட்டு தப்பு பண்ணல நான் ஒரு கம்யூனிஸ்ட், ஒரு கம்யூனிஸ்ட் பொம்பளப் பொறுக்கியா இருக்க முடியாது. இருக்க கட்சிவிடாது. நான் ராத்தங்கி,இவங்கம்மா பக்கத்திலேருந்து. தொட்டுத் தடவி, முத்தம் கொடுத்து, ‘நாம் மறுபடியும் குடித்தனம் பண்ணிவோம். மனசை சரி பண்ணிக்க'ன்னு நம்பிக்கை கொடுத்தேன்.”

“நான் பொண்டாட்டி இழந்தவன். அவ புருஷன் இல்லாதவ. ரெண்டு பேரும் ஒண்ணா சேந்துட்டோம். உன் குடித்தனமே ரங்கராட்டினமா இருக்கிறபோது, நான் என் அவஸ்தைய உங்கிட்ட எப்படி சொல்றது...உன் புருஷனுக்கு உன்னை திட்டுறதுக்கு எதுடா சாக்குன்னு

பாத்து, இந்த மேட்டரை எடுத்துகிட்டான். அதுக்கு நான் என்ன பண்றது.''

''அந்த அம்மாவுக்கு என்னப்பா உடம்பு.'' மாதவி லேசாய் கலங்கியபடி கேட்டாள்.

''கருப்பைல கான்ஸர். கருப்பை வெளிய வந்துருச்சு போயேன், உங்க அம்மாவைத்தவிர வேற யாரும் அத்தினி பொறுமையா செய்திருக்க முடியாது.''

''என் முத பொண்டாட்டி நிம்மதியா செத்தாள்னா. அதுக்கு உன் அம்மாதான் காரணம்,''

''அதனால...உம் பொண்ணையும் கல்யாணத்துக்கு முன்னால என் பையன் கூட பழக விட்டுறலாம்னு பாக்கறியா...''

''எனக்கு தப்பா படலை...வேணாம்னா தடுத்துடு.''

''பேப்பர் பாத்தியா...''

''பஸ் ஏறும்போது கட்சி ஆள் காட்டினான் எவனோ போக்கத்தவன் எழுதிருக்கான். இதுக்கெல்லாம் பயப்பட வேண்டிய தேவையில்லை.''

''நீ கவலைப்படாம இருக்கலாம். நான் கவலைப்படுகிறேன். இவங்க ரெண்டு பேரையும் கூட்டிகிட்டுப் போ. உன் கட்சி அலுவலகத்திலேயே மாலை மாத்து. ஆம்படையான், பொண்டாட்டின்னு பதிவு பண்ணு. அப்புறம் எங்க வேணா போகட்டும்.''

''நான் இப்ப கல்யாணம் பண்ணிக்க மாட்டேம்மா.''

''ஏன்.''

''எனக்கு ஒரு சம்பாத்தியமும் இல்ல. வெறும்வீடியோ கடை போறாது.''

''அந்த புத்தி அவகூட பழகும்போது இருக்கணும்.''



''அவதான் சொல்றா. நீ ஏன் சம்பாதிக்க மாட்டேங்கிறன்னு கேக்கறா.''

''அவ யாரு கேக்கறதுக்கு... உனக்கு வீடு இருக்கு. வீட்டச்சுத்தி அஞ்சு கடை இருக்கு. அதுல நாலு கடையிலேருந்து வாடகை வருது. அது போதும்னு சொல்லு.''

''அம்மா... ஏன் கடுப்படிக்கிறே... அவ ஒரு அக்கறையிலதானே சொல்றா...''

''அவளும் அவங்க அப்பனும் வாய்ல பேசுறவங்கதான். கையில் ஒண்ணும் ஆவாது. திருட்டுக் குடும்பம்.''

''என்னா திருட்டுக் குடும்பம். என்னா சொல்ற நீ...'' மாமா சீறினார்.

''நான் வெறும் பத்திரத்துல கையெழுத்து போட்டேன். நீ ஏன் அங்க போய் ரெண்டே முக்கா லட்ச ரூபா வாங்கினே... அசிங்கமாயில்ல இது...''

''நான் உனக்கு ஒண்ணும் வாங்கல. உன் புள்ளைக்கு வாங்கினேன்.''

''என் புள்ளைக்கு வாங்க நீ யாருடா...''

''நான் தாய்மாமன். பொண்டாட்டி பெத்து வெச்சிருக்கேன். அவனுக்கு உதவணும்னுதான் காசு வாங்கினேன். நஞ்சையும், புஞ்சையுமா இருந்தா, அந்த வரலட்சுமி கண்ணுல உறுத்தும். ஏதாவது தொந்தரவு கொடுப்பா. ஆட்சியில இருக்கிறதால, வலிய வந்து பிடுங்கிப்பான்னு தரிசா போட்டேன். இன்னிக்கி, அந்த தரிசுல தான் கல்லு இருக்குன்னு பந்தயம் போடுறாங்க.''

''அவன் கேக்கிற கல்லு இருந்தது தங்கச்சுரங்கம். இல்லை... காசு நஷ்டம்.''

''ஆறு லட்ச ரூபா... யாரு மண்ணுல போடுறது. எத நம்பிப் போடுறது.'' அம்மா அலுத்துக் கொண்டாள்.

"நான் போடறேன்.'' மாதவி குரல் கொடுத்தாள்.

"அப்பா... எனக்குன்னு வச்சிருக்கிற எல்லா காசும், எல்லா நகையும் இதுல போடுங்க அதுவும் பத்தலையா... வீட்டை வித்துருங்க. ரெண்டு ரெண்டரை போவது நம்ம வீடு...''

"வீட்டை வித்துட்டு எங்க இருப்பீங்க.'' அம்மா மறுபடி கத்தினாள்.

"பொட்டியத் தூக்கிட்டு சட்டமா இங்க வந்துருவோம். நாங்க மீட்டிங் பேசிட்டு வந்தவுடன், எங்களுக்கு சோறு ஆக்கிப் போடறது உங்க வேலை.''

"இடிச்சு தாவாங்கட்டைய பேத்துருவேன். அம்மா பல் கடித்தாள்.

"ஆம்படையான் அடிச்சுதானே அழுதுருக்க... மருமக அடி வாங்குனது இல்லயில்ல...நீ கை ஓங்குறதுக்குள்ள பளீர்னு வைக்கிறேன் பார் கன்னத்துல''மாதவிகத்தினாள்.

"ஏய் மாதவி... என்ன பேச்சு இது.'' மாமா அதட்டினார்.

"அஞ்சாங்கிளாஸ் படிச்சவளுக்கு அவ்ளோ திமிர் இருந்தா, எம்.ஏ. படிச்ச எனக்கு எவ்ளோ திமிர் இருக்கும்.''

"தங்கச்சி. அவ சின்னப் பொண்ணும்மா. செல்வமா வளத்துட்டேன். நீ பட்ட கஷ்டம் அவ படக் கூடாதுன்னு தான், இவன் கூட அலைய விட்டேன். காசு சம்பாதிச்சுடலாம்மா. பெத்த பொண்ணுக்கு நல்ல புருஷன் கிடைக்கிறது ரொம்ப சிரமம் இல்லியா...''

"அவளை முதல்ல மரியாதையா பேசச் சொல்லு.''

"மரியாதை மனசிலேருந்து வரணும். நீங்க மரியாதையா பேறா மாதிரி நாடகம் போடச்சொல்றீங்க நீங்க, 'மாதவி என் கண்ணு'ன்னு கொஞ்சுங்க. நான் உங்களை தலையில தூக்கி வச்சுகிட்டு ஆடுவேன். நான் வெட்டியா பேசுற பொம்பளைன்னு நினைக்கிறீங்களா. என்னை மாதிரி இங்கிலீஷ் பாடம் நடத்த ஒருத்தர் பொறந்து வரணும். என்னை மாதிரி சமையல் பண்ண, உங்களால முடியாது. நீங்க ஒரு கிலோ அன்பு காண்பிச்சீங்கன்னா, நான் பத்து கிலோ அன்பு தருவேன். உங்க புள்ளைகிட்ட நான் நாய் மாதிரி இருக்கேன். ஏன் தெரியுமா. அது என்னை கொஞ்சி, அன்புல குளிப்பாட்டுது.''



"சரி பேச்சை விடுங்கம்மா. கிரானைட் தோண்டற வேலை ஆரம்பிப்போமா வேண்டாமா.''

"அங்கே போய் பேசிக்குவோம். அங்க போறதுக்கு ஒரு கார் ஏற்பாடு பண்ணு. முதல்ல நிலத்த சுத்திப் பாப்போம்.'' அம்மா கட்டளையிட்டாள். பின்பக்கம் போனாள்.

மாமா கார் பிடிக்கப் போனதும், மாதவி பாய்ந்து அவனை கட்டிக் கொண்டாள்.

"முத்தம் கொடுறா.''

"என்ன திடீர்னு.''

"உங்க வீட்ல, உங்க அம்மா இருக்கச் சொல்ல, முத்தம் கொடுத்தா அதுல ஒரு திரில் இல்ல...''

அவன் அமைதியாய் ஆழ்ந்து அவளைமுத்தமிட்டான்.

## 5

திடீரென்று நிலம் மேடாயிற்று. மேட்டின் விளிம்பு செம்மண்ணாக இருந்தது. செம்மண் தாண்டி பொர பொரக்கும் மணல் பகுதியாக சற்று தூரம் இருந்தது. இன்னும் மேடான போது பூமிக்குள் புதைத்த யானைத் தலைகளாய், இன்னும் பெரியதாய் நிறைய பாறைக் கற்கள் கிடந்தன.

''நிறுத்து நிறுத்து. வண்டியை நிறுத்து.'' மாமா சத்தமிட்டார்.

''நூத்தி நாப்பத்தேழாம் நம்பர் புளியமரத்துலேருந்து ஆரம்பிக்குது. நாம நாலு மரம் தாண்டி வந்துட்டோம்.'' அவர்கள் இறங்கி பின்பக்கமாய் நடந்தார்கள்.

மாமா முன்னால் போக, அம்மா பின்னால் நடந்தாள். அதற்குப்பின் மாதவி போக, செல்வா பின் தொடர்ந்தான். எருக்கங்கிளையை உடைத்து எடுத்துக் கொண்டான். கீழே கிடந்த காகிதத்தால் பாலைத் துடைத்து விட்டு குச்சியை வீசியபடி நிலப்பரப்பை கவனித்தான்.

ஏழு ஏக்கர் என்பது எவ்வளவு பெரிய நிலப்பரப்பு என்பது அப்போது தான் தெரிந்தது.

''ஏண்ணே... வேலி எதுவுமில்ல. நம்ம நிலம் எதுன்னு உனக்குத் தெரியுமா.''

''சர்வே கல்லு நட்டிருக்கு தங்கச்சி.''

''அப்படின்னா... நிலத்தை முதல்ல வலமா சுத்துவோம்.''



''வலமா சுத்தலைன்னா என்னாகும்.'' மாதவி லேசான இடக்கோடு கேட்டாள்.

''நிலத்தோட தொடர்பு இல்லாம போகும்.''

''புரியல அத்தை.''

''புரிஞ்சுக்கணும்னு கேளு. நான் சொல்றது பொய்யின்னு நினைச்சிகிட்டு கேக்காதே. ஒரு பொருளை வலமா வைக்கிறது வலது கையால வைக்கிறது, ஒருத்தரை வலது பக்கமா நிக்க வச்சுப் பேசுறது நல்லது. ரொம்ப நேர் எதிரா இல்லாத, ரெண்டு அங்குலம் வலது பக்கமா உக்கார வச்சோம்னா, பேச்சு பரஸ்பரம் புரியும். அதே மாதிரி, ஒரு வீடு பாக்கப் போறோம். நிலம் பாக்கப் போறோம். வலமா போறது நல்லது.''

''ஒரு பத்திரிகை படிக்கிற. அதை பிரிச்சிப் படிக்கிற போது வலது பக்க மூலை மனசுல பதியுறா மாதிரி, இடது பக்கம் மனசுல பதியாது. வலதா போனா ஒரு தெளிவு உண்டு. இந்த நிலம் பத்தி தெரிஞ்சுக்க முடியும் பார்.'' அவர்கள் சுற்றிக் கொண்டு போனார்கள்.

அம்மா ஆழ்ந்த யோசனையில் இருந்தாள். திடீரென்று நின்றாள்.

''அண்ணே...இந்த நிலம் நல்லாருக்குண்ணே'' பேசினாள்.

''ஒண்ணும் விளையாதும்மா. தண்ணிக்கி நூறு அடி ஆழம் போகணும். அப்பவும், கிடைக்குமான்றது சந்தேகம் தான். மதுரையில எங்கினியோ கோட்டை கட்டுறதுக்கு, இங்கேருந்து கல்லு போயிருக்கு போல. அந்தப் பக்கமா நம்ம நிலத்திலேருந்து நூறு கெஜம் தள்ளி, மண்ணு பறிச்சு, பாறை எடுத்துன்னு போயிருக்காங்க. அப்படி மண்ணு பறிச்ச இடத்துல, மழைத் தண்ணி தேங்கி

கொஞ்சம் குளமா இருக்கு. அதுவும் இருபத்தஞ்சடி ஆழம் இறங்கினா, ரெண்டடி தண்ணி கிடைக்கும்.''

''நான் சொல்றது வேற அண்ணா...''

''சொல்லு.''

''இது யுத்த பூமி. யாரோ ரெண்டு பேருக்குள்ள சண்டை. எதுக்கு சண்டைன்னு தெரியல. ஆயிரக்கணக்கா செத்துருக்காங்க.''

''மதுரை சரித்திர பூமியாச்சே...மகாபாரத காலத்திலேருந்து இருக்கிற இடமாச்சே...சண்டை இல்லாமயா இருந்திருக்கும். நடந்திருக்கலாம்.''

எனக்கு ஒரு ரெண்டு மூணு வருஷமா ஒரு கனவு. 'விளக்கேத்த மாட்டியா விளக்கேத்த மாட்டியா'ன்னு பொண்ணு குரல் கேக்குது. யாரு கூப்பிடறதுன்னு வீட்டைவிட்டு வெளிய வந்தா, நம்ம வீட்டு வாசல்ல பாறைகளா இருக்கு. அது வெட்டிப் போட்ட ஆளுங்களா, இல்ல பாறைங்களான்னே தெரியல.''

''யார் கூப்பிடறதுன்னு கேக்கறேன். நான்தான்னு ஒரு அம்மா சொல்லுது. தொலை தூரத்துல, மேல் துணி இல்லாத, நெஞ்சு மூடாத, இடுப்புத் துணியோட, தலைவிரி கோலமா ஒரு அம்மா இருக்கு. 'என்ன சொல்றீங்க'னு கேட்டேன். 'எங்க எல்லாருக்கும் சேத்து ஒரு விளக்கு ஏத்தப்படாதா.' அப்படின்னு கேக்குது.''

''சரிங்கன்னு திரும்பறேன். அப்படி திரும்பினவுடனே அந்தம்மா ரொம்பகிட்டக்க, முதுகுகிட்டக்க வந்துட்டாப் போல, ஒரு பிரமை. பகீர்னு ஒரு பயம். பயத்துல கண்ணை மூடிகிட்டு, 'முருகா முருகா'னு கத்துறேன். முழிப்பு வந்துருது.''

''கனவுல பாத்த இடமும், இந்த இடமும் ஒண்ணா இருக்கு.''



''அந்த லேடி இங்க வருவாங்கன்னு நினைக்கிறீங்களா'' மாதவி கொஞ்சம் ஆவலாக கேட்டாள்.

''தெரியல கண்ணு ஆனா, இது நல்ல இடம்.''

''சண்டை நடந்திருக்குனு சொன்னீங்க. யுத்த பூமின்னீங்க.''

''சண்டை நடந்த எல்லா இடமும் நல்ல இடம்தான். மண்ணுக்காக மனுஷன் போராடி மண்ணுல சாய்ஞ்சா, அந்த மண்ணு நல்லாருக்கும்.''

''நிஜம்மாவா..'' மாதவி நம்ப முடியாமல் கேட்டாள்.

''ஆமாம். மனுஷங்க கும்பலா செத்த இடத்துல எப்படியாவது கோயில் வந்துரும்.''

''எங்கெல்லாம் பெருசா கோயில்கள் கட்டப்பட்டிருக்கோ, அங்கெல்லாம் சண்டை நடந்திருக்குன்னு அர்த்தம். தஞ்சாவூர், மதுரை, திருச்சி சமயபுரம், கோயம்புத்தூர், திருநெல்வேலி எல்லாம் யுத்தபூமிதான்.''

''அப்ப இத்தனை வருஷமா இங்க ஏன் கோயில் கட்டல...''

''கட்டி இடிச்சிருக்கணும் அல்லது இங்க நீர் வசதி இல்லைன்னு, இங்கேருந்து கல்லு கொண்டுபோய், எங்கியாவது ஆத்தங்கரை ஓரமாக மாத்தி விட்டிருக்கணும்.''

''விளக்கேத்தி வையின்னு கனவுல சொன்னது இங்க தானே...'' மாதவி மறுபடி கேட்டாள்.

''கட்டப்பட்ட கோயில்கள் இடிஞ்சி போயிருக்கணும். இடிஞ்சி போனதுனால இங்க வந்திருக்கணும்.''

''இங்க வந்திருக்கணுமா யாரு...''

''தெரியலியே... யாருன்னு தெரியலியே... ஆனா... நெருப்புல பாய்ஞ்சிட்டாங்க. வெறும் இடுப்புத் துணியோட, தீயில குதிச்சு, கருகி சாம்பலாயிட்டாங்க.''

''ஏன்.''

''மானம்தான் முக்கியம்னு ஒரு வெறி. அதை இழக்கக் கூடாதுன்னு ஒரு உறுதி. இழுத்தவனுக்கும் இந்தப் பொண்ணு முக்கியமில்ல இந்த மண்ணுதான் முக்கியம். மண்ணை அவமானப்படுத்த; பொண்ணை புடவையைப் பிடிச்சி இழுக்கிறான்.''

''இழுக்கிறானா...நிகழ் காலமா...''

''அப்படிதான் தெரியுது.''

''தெரியுதுன்னா பாக்கறீங்களா...''

''மனசுல தோணுது.''

''இது ஏதோ கற்பனை.'' மாதவி மெலிதாய் கடிந்து கொண்டாள்.

''எனக்கு என்ன பைத்தியமா கற்பனை பண்ணிக்க... இந்த இடத்துக்கு நான் வந்ததேயில்ல. ஆனா, பாத்திருக்கேன்.''

''நான் நம்பலை...''

''நம்பாட்டி போ.''

''நான் நம்பறேன்'' மாமா குரல் கொடுத்தார்.

''நான் கம்யூனிஸ்ட். ஆனால் எல்லாம் விஷயமும் மனசுக்கு தெளிவாயிடாது. புத்திக்கு புரிஞ்சுடாது. புரியாத, புதிரான விஷயங்கள் உலகத்துல இருக்கு. தங்கச்சி...அந்த அம்மா எங்கே நின்னுதுன்னு ஞாபகம் இருக்கா. எங்கே நின்னு பேசுனாங்கன்னு நினைவு



படுத்திக்க முடியுமா. கனவை மறுபடியும் புத்திக்கு கொண்டார முடியுமா.''

''அதோ...அங்க...'' அம்மா கை காட்டினாள்.

''வாங்க பாத்துருவோம்.'' மாமா கூற, நால்வரும் நடந்தார்கள்.

எழுபதடி தொலைவில் அம்மா கை காட்டிய இடம் இருந்தது.

அம்மா வேகமாய் நடப்பதைப் பார்த்துவிட்டு, செல்வா அம்மாவின் பின்னால் நடந்தான். ஒரு வேளை இடறிவிட்டால், தாங்க வேண்டும் என்ற நினைப்போடு, எருக்கக் குச்சியை கீழே போட்டான். அம்மாவின் இடப்பக்கம் அவன் வர, அம்மாவின் வலப் பக்கம் மாமா கிட்டத்தட்ட அதே எண்ணத்தோடு அம்மாவை பார்த்தபடியே நடந்து வந்தார்.

''இதான்... இதான்'' அம்மா கூவினாள்.

''என்னது தங்கச்சி...''

''இதுல கால வச்சி, உள்ள குதிச்சுட்டா.''

''இந்த கல்லுலியா...''

''இது கல் இல்ல. உசுரு.''

''புரியல தங்கச்சி.''

''அந்தம்மா பூமியில கடைசியா கால் ஊனுனது இந்த கல்லுலதான். அப்புறம் நெருப்புலதான்.''

''அப்போ, அந்த காலத்துல, பொம்பளைங்க மார் காட்டுறது பெரிய கேவலமில்ல. இடுப்புத் துணிதான் பெரிய மரியாதை. 'ஒண்ணு இடுப்புத் துணிய அவுரு இல்லை நெருப்புல குதி'ன்னு சுத்தி அறுநாறு பேர் நின்னு

சொல்லிருக்காங்க. அந்த அம்மா நெருப்புல குதிச்சிருச்சு. ரெண்டு பெத்தவ, அரசன் பத்தினி. அவளுக்கு முன்னாடி புருஷன் செத்துட்டான். குத்தி கொன்னுட்டாங்க. ஆனா, அது அவளுக்குத் தெரியாது. எப்படியும் வந்து மீட்டுறுவார்னு, ரெண்டு நாள் பட்டினி கிடந்தா. மூணாம் நாள், 'பறிக்கணும், பறிக்கணும்'னு குடிவெறியில யாரோ கூச்சல் போட்டுருக்காங்க.''

''ராஜா பொண்டாட்டி தானா வந்தாதான் சந்தோஷம். உம் பொண்டாட்டி இப்போ என் தொடையிலன்னு சிரிக்கற சந்தோஷம். ராஜா பொண்டாட்டிய அவமானப்படுத்தினா, ராஜவை அவமானப்படுத்தறாப் போல... ராஜாவை அவமானபடுத்தினா, ராஜ்ஜியத்த அவமானப்படுத்தறாப் போல, அவ 'போடா பட்டி'ன்னு நெருப்புல குதிச்சிட்டா ''

''இந்த வழுக்கை கல்ல மிதிச்சி, நெருப்புக்குள்ள பாஞ்ச போது, அவ உசுரு இந்த கல்லுக்குள்ள போச்சு. உடம்பு மட்டும் நெருப்புக்குள்ள போயிடுச்சு.''

''ரெண்டு நாள் ஒட்ட பட்டினி கிடந்து, ஒரு சொட்டு தண்ணி கூட சாப்பிடாத, மனசு மொத்தமும் ஒரு புள்ளியில நிறுத்தி, 'இங்கேயே இருப்பேன்'னு சொல்லி உடம்பை மட்டும் விட்டுட்டா.''

''நிசமாம்மா...'' செல்வா கேட்டான். குத்திட்டு உட்கார்ந்து அந்த வழுக்கைக் கல்லை தொட்டான், குழந்தையின் தலையைப் போல் தடவினான்.

''அடேய்...'' பின்னால் பிளீறலான ஒரு பெண் குரல் கேட்டது.

''மூவரும் திடுக்கிட்டு திரும்பினார்கள்.

''அதோ அந்த அம்மா...'' செல்வாவின் அம்மா கூவினாள்.



அது மாதவி. ஐம்பதடி தொலைவில் மாதவி தலைவிரிக்கோலமாய் நின்றாள். அவளுடைய இடது கையில் ஒரு உருண்டைக் கல் இருந்தது. வலது கையில் செல்வா ஒடித்துப் போட்ட எருக்கங்குச்சி இருந்தது. அவள் புடவையை அவிழ்த்து வீசியிருந்தாள். அது தரையில் படர்ந்து கிடந்தது.

மாதவி ஜாக்கெட்டும், பாவடையுமாக நின்றாள்.

மறுபடியும் 'அடேய்...' என்று குரல் கொடுத்தாள்.

அம்மா அவளை நோக்கி ஓட, மாமா அம்மாவின் புஜத்தை பிடித்துக் கொண்டு பின்னால் ஓடினார்.

''எங்க எல்லாருக்கும் சேத்து ஒரு விளக்கு ஏத்தேண்டி. எங்க எல்லாருக்கும் சேத்து ஒரு விளக்கு ஏத்தேண்டி... எங்க எல்லாருக்கும் சேத்து ஒரு விளக்கு ஏத்தேண்டி...'' மாதவி அலறலாய் கத்தினாள்.

''ஏத்துறேன் தாயே... ஏத்துறேன்... உன் கால் மேல ஆணை. இந்த பூமிமேல ஆணை. நீ என்ன சொன்னாலும் செய்றேன். நீ யாரு தாயி...'' அம்மா மண்டியிட்டாள். மாமா குறுகி நின்றார்.

''உனக்குத்தான் தெரிஞ்சு போச்சேடி. நீதான் கூட இருந்தாப் போல எல்லாம் பாத்துட்டியே. இதான் என் புருஷன் கல்லு. அவன் பின் மண்டை மோதி நகர்ந்த கல்லு. நெஞ்சுல கத்தி குத்தினவுடனே இதுக்குள்ள புகுந்துட்டான். இந்த மண்ண விட்டு போக இஷ்டமில்லாம, நாங்க நிறைய பேர் இங்கயே தங்கிட்டோம். எங்களுக்கெல்லாம் சேத்து ஒரு விளக்கேத்து.''

''இடம் சொல்லு தாயி... இடம் சொல்லு.''

கால் அகட்டிக் கொண்டு வினோதமாய் மாதவி ஓடினாள். எருக்கங்குச்சியால் அம்மா தொட்ட கல்லை காண்பித்தாள்.

''இங்க கூரையில்லாத கோயில் கட்டு. கோபுரம் இல்லாத வாசல் கட்டு. வெறும் கீத்துக் கொட்டகை கட்டு போறும்.''

''சரிங்க'' அம்மா கை கூப்பினாள்.

''கோயிலுக்கு காசு தானா வரும். பூமியில தங்கம் இருக்கு. தோண்டி வியாபாரம் பண்ணு.''

''நல்ல கல்லு இருக்குன்னு சொன்னாங்க.''

''தோண்டு. நல்லது நடக்கும்.''

''எங்க தோண்டனும் தாயே...''

''உனக்கா தெரியும்டி. நான் தெரிஞ்சா மாதிரி உன் மனசுக்கு, பூமிக்கடியில இருக்கிற கல்லும் தெரியும். நீரும் தெரியும்.''

''ரொம்ப சந்தோஷம் தாயே...''

''இந்த மாதவிக்கு தெரியல. நான் யாருன்னு தெரியல. எதுவுமே பாத்தவங்களுக்குத்தான் தெரியும். அது என்னன்னு பாக்க ஆசைப்படுறவங்களுக்குத் தான் தெரியும். தெரியும்னு நினைக்கிறவங்களுக்கு எதுவும் தெரியாது நாம மட்டும் தான் உலகத்துல இருக்கோம்னு நினைக்கிறது முட்டாள்தனம். கண்ணு பாக்கறது மட்டும்தான் காட்சின்னு நினைக்கிறது அபத்தம். உன் கண்ணு பாக்காத இடத்தை மனசு பாக்கும். கனவுன்னா என்னன்னு தெரிஞ்சுக்க, கனவுல விழிப்பா இருக்கணும். அதாவது, தூக்கத்துல விழிப்பு, அதாவது, அறிதுயில். அதாவது, அறிந்து துயில்வது.''

''இது எப்போ வரும்.''

''விழிச்சுகிட்டிருக்கும் உள்ள உக்காந்திருக்கும். கண்ணை மூடி உள்ளுக்குள்ளயே பாக்கணும். வெளிலேருந்து பாக்கிறவனுக்கு இது, உக்காந்துகிட்டே தூங்கறா மாதிரி இருக்கும் ஆனா, உடம்பு விழிச்சிகிட்டிருக்கும். எல்லா சத்தமும் கேட்டுகிட்டிருக்கும். இது விழிப்பில் துயில்.''



''பாக்கறதும் பாக்கறதைப் பத்தி பேசுறது மட்டுமே உலகமில்லை. அதுல எல்லாம் தெரிஞ்சிடாது. பாக்கறதைப் பத்தி பேசுறத நிறுத்தினாதான், பாக்காததைப் பத்தி புரிஞ்சுக்கறது தெரியவரும். இந்த வித்தை உனக்கு தெரியவரும். பின்னால உன் மருமகளுக்கு சொல்லிக் கொடு. உம் மருமக அவ மருமகளுக்கு சொல்லித் தரட்டும்''

''துள்ளுற மாடு பொதி சுமக்காது. நிறைய அழுத்தமா பொதிஞ்சதுதான் பொதி. அதுக்கு இன்னொரு பேர் பிரபஞ்ச ஞானம். எல்லாத்தையும் பத்தின தெளிவு. ஒட்டுமொத்தமா வாழ்க்கையப் பத்தின விவரம். பிறநது செத்துப் போற உடம்புதாண்டி, சாவாதது பற்றிய அறிவு.''

''உனக்கு தெரியுமா. நான் சாவலை. எனக்கு சாவேயில்லை. என்னால சாகவும் முடியாது. என் உடம்பு மட்டும்தான் செத்துப் போச்சு.''

''சாவாதவளுக்கு விளக்கு எதுக்குன்னு கேக்கறியா. விளக்கு எனக்கில்ல உனக்கு. விளக்கு இருக்கிற இடத்துல தான் மனுஷா இருக்க முடியும். குறிப்பா பொம்பள இருக்க முடியும். எங்களைத் தெரிஞ்சவங்க ஒருத்தர் இருந்தாப் போறும். நாங்க நிம்மதியா ஆழ்ந்து கிடப்போம். இப்படி ஆழ்ந்து கிடக்கிறது ஒருவித தபஸ், அது ஒரு மாதிரி வளர்ச்சி.''

உடம்போடு இருந்த மனசு இன்னும் சுத்திகிட்டிருக்கு மொள்ள மொள்ள மனசை எடுக்கணும். இன்னொரு பிறவி எடுக்காமயே இங்கயே உதறிட்டுப் போகணும்.'

''இதுவும் என்னன்னு உனக்குப் புரியும். எங்கிட்ட வந்துட்டா என்னை விட்டுப் போக முடியாது. இதுபத்தி தெரிஞ்சிட்டா, வேற எதப்பத்தியும் யோசிக்க முடியாது. அதே நேரம், இது எல்லாருக்கும் தெரியாது. லட்சத்துல ஒருத்தருக்கு காட்சி தெரியும். கோடியில ஒருத்தருக்கு என்னன்னு புரியும்.''

''புருஷன் துரத்தி தனியானியே...அன்னிக்கே உன்னப் பாக்க ஆரம்பிச்சுட்ட... தன்னைப் பார்த்த இடத்தில் காட்சியில்லை. தன்னைப்பற்றி தெரியாதவர்களுக்குத் தான் எல்லா காட்சியும். எல்லா கொள்கையும். எல்லா கோபமும். நீ எது பற்றியும் யார் மீதும் கோபிக்க வேண்டாம். நீ என்னோடு இரு.''

மாதவி எருக்கங்குச்சியை அம்மாவின் தலையில் வைத்தாள்.

''இந்த எருக்கஞ்செடி அழிவில்லாதது. நான் பிறந்த போது இருந்தது. இப்பவும் இப்போதும் இருக்கிறது. இடம் விட்டு இடம் விட்டு, கிளைவிட்டு கிளைவிட்டு இந்த நிலத்தை வட்டமடித்து நகர்ந்து கொண்டிருக்கிறது. இது ஏழாவது வட்டம். இந்த எருக்கு அழிவில்லாதது என்னைப்போல.'' மாதவி மற்ற இருவரையும் குச்சியால் தடவினாள், சட்டென்று தன் நெற்றியில் ஒரு அடி போட்டுக் கொண்டாள், பொத்தென்று தள்ளினாற்போல் தரையில் விழுந்தாள்.

''என்ன நடந்தது'' மாதவி அவள் குரலில் கூவினாள்.

''ஒண்ணுமில்லம்மா. வெயில் மயக்கமாயிட்டே... அப்படியே கொஞ்ச நேரம் உக்காரு.'' மாதவியைச் சுற்றி மற்ற மூவரும் குத்திட்டு உட்கார்ந்துக் கொண்டார்கள்.

அம்மா அவள் முதுகை ஆதரவாக தடவிக் கொடுத்தாள்.



மாதவிக்கு அந்த அன்பு பிடித்திருந்தது. மிகவும் தேவையாக இருந்தது.

''உங்க புள்ளைய எனக்கு கல்யாணம் பண்ணி வைப்பீங்களா...,'

''அவன்தான் உனக்கு. தொட்டு தடவிட்டான் இல்ல. வேற யாரடி கட்டிப்ப...''

''நீங்க குறுக்க நிக்க மாட்டீங்களே...''

''எனக்கு வேற வேலை வந்துருச்சு. எனக்கு குறுக்க நீ வராத இருந்தாப் போதும்.''

''உங்கள எனக்கு ரொம்ப பிடிக்கும் அத்தை. நீங்க பட்ட கஷ்டம்லாம் கேக்க கேக்க, உங்களை கட்டிக்கிட்டு கொஞ்சணும்னு தோணும் நீங்க பட்ட கஷ்டம் வேற யாரும் படக்கூடாதுன்னு ஒரு ஆத்திரம் வரும்.''

''இது போதும்டி. இந்த புத்தி இருந்தா வாழ்ந்துடலாம், ஆனா, வெளிய வாசல்ல போய் நாலு பேர் வாய்ல விவரங்கெட்டதனமா விழாதே. எப்ப தோணினாலும் நீ என் வீட்டுக்கு வா. நான் படுக்கை தட்டிப் போடுறேன். சந்தோஷமா இரு.''

''அது இருக்கட்டும் அத்தை. உங்க புள்ளைய முதல்ல வீடியோ கடைய விடச் சொல்லுங்க. அப்பாவை வீடு வித்து காசு தரச் சொல்றேன். எல்லாக் காசும் இதுல போட்டு கல்லு கிடைக்குதான்னு பாப்போம்.''

''அறுபது கோடி கிடைக்கும்ங்கிறான்.'' மாதவி ஆவலாய் பேசினாள்.

''அவ்ளோ கிடைக்குமான்னு தெரியல அத்தை. கிடைச்சா, இங்கியே இந்த காட்டுப் பக்கமே ஒரு பெண்கள் பள்ளிக்கூடம் ஆரம்பிச்சிடணும். அஞ்சாங்கிளாஸ் வரைக்கும் பள்ளிக்கூடம் ஆரம்பிக்கிற போதே, கலைக் கல்லூரி

யும் ஆரம்பிச்சிடணும். அதுக்காகத்தான் கல்லு வியா பாரம்னு தெளிவா தெரிஞ்சு இறங்கணும்.

''ஏன் அத்தை திடீர்னு மயக்கமாயிட்டேன்.''

''அதைப்பத்தி அப்புறம் சொல்லித் தரேன். பட்டி மன்றத்தை விட்டுட்டு, இவங்க கூட உக்காந்து கல்லு கம் பெனி ஆரம்பி. அண்ணன் இங்க கூரை எழுப்பட்டும். இனிமே நமக்கு வாழ்க்கை இங்கதான். இந்தக் காட்டுல தான்.''

''இங்க வந்துட்டா ஜாஸ்தி பேச வேணாம். வீண் அரட்டை வேணாம். தனியா இருக்கப் பழகுவோம்.''

''ஏழு ஏக்கர் நிலம். மூலைக்கு ஒருத்தரா வேலை செஞ்சாதான் முடியும். நாம நமக்குள்ள பேசுறதையே குறைக்கணுங்கிறபோது, மேடையில பேசறது அவசியமே யில்ல.

''நீ வரவேணாம். இங்கியே உக்காந்துரு. நாங்க அந்தப் பக்கம் சுத்திப் பாத்துட்டு வர்றோம்.''

அம்மா நடந்து போய், 'இங்க நோண்டுறா, இங்க நோண்டுறா.' என்று இடம் காட்டிக் கொண்டே போனாள்.

அடுத்த பதினைந்து நாட்களுக்குஇ அங்கு கூரை போட்டு, விளக்கு ஏற்றி, பதினைந்து அடி ஆழம் நீர் ஊற்றி வெட்டினார்கள், ரெண்டடிக்கு ஆறடியில் நெருப் பால் ஒரு பலகை அறுத்தார்கள். முதல் பலகையில் 'ஓம்' மென்று பொறித்து, அந்தக் கூரைக்குள் நடுகல்லாய் நட் டார்கள்.

அந்த ஜப்பான்காரன் மறுபடியும் வந்தான். இந்த ரெண்டடிக்கு ஆறடி கல் மட்டுமே எழுபதாயிரம் ரூபாய்



என்று சொன்னான். ஒப்பந்தம் போட மறுபடி வருவதா கவும்! வேறு யாரோடும் ஒப்பந்தம் போட வேண்டா மென்றும் சொல்லிவிட்டுப் போனான்.

''அத்தை எங்கே காலேஜ் கட்டலாம். எங்கே பள்ளிக் கூடம் வைக்கலாம். அதையும் சொல்லுங்களேன்.'' மாதவி செல்வாவின் அம்மாவின் கையை பிடித்துக் கொண்டாள்.

''அந்தக் கையால புருஷனை பிடிச்சுக்க. இந்தக் கையால என் கையை விடாம இறுக்கிக்க...நம்ம நிலம் தாண்டி இன்னும் நடந்து போவோம் வா. எந்த இடத் துல மூணு பேருக்கும் ஒண்ணா நிக்கத்தோணுதோ அந்த இடம்தான் வாசப்படி. நடக்கிறபோது மண்ணு பாத்து நட. மனசாற மண்ணு பாரு.''

அவர்கள் மூவரும் ஒரு இடத்தில் நின்றார்கள். அம்மா கை கூப்பினாள்.

தொலைவே, மிகத் தொலைவே இருபத்தைந்து வருட வாழ்க்கைக்குப் புறகு, மிக பிருமாண்டமான கல்லூரி மாதவிக்குத் தெரிந்தது.

ஏகப்பட்ட பெண் குழந்தைகள் குறுக்கும் நெடுக்கும் ஓடிக் கொண்டிருந்தார்கள்.

தன்னால்? தன் வாழ்க்கையில் முன்னும் பின்னும் போக முடியும். அப்படி போவதற்கு பேசாமலிருக்க வேண்டும் என்பதை மாதவி புரிந்து கொண்டாள்.

''கம்பெனி பேர் என்னம்மா. அக்ரிமெண்ட். போடக் கேக்கறாங்க.''

''மாதவி கிரானைட்ஸ்.''

''நிலம் உன்னுதாச்சேம்மா...''

“ஆமாம். எனக்கு எங்க அண்ணன் சீதனமா கொடுத்த மஞ்சக்காணி. இதை நான் அவளுக்குத் தரேன். அதை அவ மருமகளுக்குத்தான் கொடுக்கணும். மகளுக்கு அல்ல. மகன் பொறக்கலைன்னாலும் யாரையாவது மகனா வரிச்சு, அவன் மனைவிக்குத் தரணும். இது ஆண் சொத்து இல்ல. பெண் சொத்து. இங்க மஞ்சள் முளைக் காம இருக்கலாம். ஆனாலும் இது மஞ்சக் காணி மஞ்சள் பூசுறவங்க காணி.”

வெகு தொலைவில் அவள் இடத்தில் யாரோ ஒரு பெண் நிதானமாய் வலம் சுற்றி, நடந்து, காவல் தேவதை யாய் உலவிக் கொண்டிருந்தாள்.

முற்றும்